
# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

49



கலை இலக்கிய மாத சஞ்சிகை

ஐப்பசி – 2012

60/=

# நதியினுள்ளே...

## கவிதைகள்


வெலிப்பன்னை அத்தாஸ்

வானதி சந்திரா

அன்புடீன்

சபா.ஜெயராசா

நீலா பாலன்

யோகேஸ்

உ.நிசார்

வேலணையூர் தாஸ்

மன்னார் எம்.ஷிபான்


## சிறுகதைகள்


இ.சு.முரளிதரன்

மூதூர் மொகமட் ராபி

ச.முருகானந்தன்

ஆனந்தி

ம.விஜிதா

தி.கேதீஸ்வரன்


## கட்டுரைகள்


த.அஜந்தகுமார்

ஆபூர்வன்

சந்திரகாந்தா முருகானந்தன்

முருகபூபதி

த.வசந்தன்

அந்தனிஜீவா

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்


## நூல் அறிமுகக்குறிப்பு


அர்ச்சுனன்


அட்டைப்படம் - நன்றி இணையம்

# ஜீவநதி

**2012 ஐப்பசி இதழ் – 49**



**பிரதம ஆசிரியர்**
கலாமணி பரணீதரன்

**துணை ஆசிரியர்**
வெற்றிவேல் துஷ்யந்தன்

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.



**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா



**தொலைபேசி** : 0775991949
0212262225

E-mail : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank
Nelliady
A/C - 8108021808
CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செம்மைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.

– ஆசிரியர்



# ஜீவநதி

(கலை இலக்கிய மாத சஞ்சிகை)


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!

– பாரதிதாசன்–

## மாணவச் செல்வங்களைக் காப்போம்

"நாம் ஏன் எழுதுகிறோம்? கலை இலக்கியங்களால் என்ன பயன் விளையப் போகிறது?" என்பன போன்ற வினாக்களை எழுப்பும் போது, "சமுதாய நலன்" என்பதே எம்மில் முதலில் பொறி தட்டும் விடையாகிறது. இன்றைய மனித சமுதாயத்தின் பலங்களையும் பலங்களையும் பலவீனங்களையும் மனித அனுபவங்களினூடாகப் பெறும் தரிசனங்களின் பின்னணியில் வெவ்வேறு கலை இலக்கிய வடிவங்களாக வடிக்கும் போது, எமது எதிர்காலச் சந்ததியின் நல்வாழ்வே எமது தூர நோக்காக (vision) இருக்கிறது.

இந் நோக்கை எய்த வேண்டுமாயின் எமது மாணவச் செல்வங்களின் பாடசாலைக் கல்வியை மேம்பாடுடையதாக மாற்றுதல் என்பது அடிப்படையாக எதிர் கொள்ளப்பட வேண்டிய ஒரு செயற்பாடாகும். மாணவர்கள் எல்லோரும் உயர் நிலையை அடைவதனை பாடசாலைகள் உறுதி செய்ய வேண்டும். அவர்கள் நல்ல முறையில் கற்றுக் கொள்வதற்கான சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இந்நோக்கில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், சமூகம், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் எனப் பலரும் இணைந்து கொள்ள வேண்டும். குறிப்பாக தமது பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரை அக்கறை கொள்ளச் செய்தல் அவசியமாகின்றது. பெற்றோர்–பிள்ளை பிணைப்பை உறுதி செய்வதில் பாடசாலைகள் அதிகம் பங்காற்ற முடியும்.


பாடசாலைக் கல்வியானது நல்ல விழுமியங்களையும் பண்புகளையும் மாணவரிடத்து வளர்ப்பதை உள்ளடக்கியது. போட்டி என்பது ஊக்குவித்தலுக்கான ஓர் உபாயம் எனினும் ஆரோக்கியமான போட்டிகளை நடத்ததுவதிலேயே பாடசாலைகளும் பிற நிறுவனங்களும் அக்கறை கொள்ள வேண்டும். ஆனால் கல்வியில் இன்று நிலவும் போட்டிச் சூழல் ஆரோக்கிய மானதாக இல்லை. பரீட்சைகளிலும் போட்டி களிலும் குறுக்கு வழியிலேனும் வெற்றி பெற்று விட வேண்டும் என்பதே பலரதும் இலக்காக இருக்கின்றது.

இப் பின்னணியில் நோக்கும் , நேரான சிந்தனைகள் விதைப்பதே இன்றைய சூழலில் எழுத்தாளர்களின் முதற் பணியாகின்றது. பிள்ளைகள், பெற்றோர்,சமூகம் என சகல தரப்பினரிடத்தும் நேரான சிந்தனைகளை தோற்றுவிக்கும் வகையில் எமது எழுத்துக்கள் குவிக்கப்பட வேண்டும்.இதனால் இன்றைய சமூகத்தில் நிகழும் நடத்தைப்பிறழ்வுகளையும் வன்செயல்களையும் பெருக விடாமல் தடுப்பதற்கும் வழியேற்படும். சமுதாய நலன் என்பதை எமது இலக்காக கொள்ளாத போது எமது எழுத்துக்களால் என்ன பயன் விளையப் போகிறது?.

க.பரணீதரன்

த.அஜந்தகுமார்

# யதார்த்தத்தின் ஒளியில் நடக்கும் கதைகள் "குந்தவையின் யோகம் இருக்கிறது" தொகுதியை முன்வைத்து




ஈழத்து தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் பணியில் பெண் படைப்பாளிகளின் பங்கும் குறிப்பிடத்தகுந்தது.பவானி ஆழ்வார்பிள்ளையிலிருந்து பெண்களின் சிறுகதைப் பங்களிப்பை நோக்கி வருகின்றோம்.1963இல் ஆனந்த விகடனில் எழுதிய சிறுமை கண்டு பொங்குவாய் என்ற முத்திரைக்கதை மூலம் இலக்கிய உலகிற்கு அறிமுகமானவர் தான் சடாட்சரதேவி என்ற இயற் பெயரை உடைய குந்தவை.தொண்டமனாறை தனது சொந்த இடமாகக் கொண்ட இவர் 1960களிலிருந்து படைப்புப்பணியில் இயங்கிய போதிலும் 2002இல் தான் இவரது தொகுதிக் கனவு மெய்ப்பட்டது.மித்ர வெளியீடாக வெளி வந்த "யோகம் இருக்கிறது" என்ற அவரது சிறுகதைத் தொகுதியின் ஊடாக அவரது சிறுகதைகளை மதிப்பிடுவதாக இக் கட்டுரை அமைகின்றது.

யோகம் இருக்கிறது தொகுதியில் இவர் வெவ்வேறு காலங்களில் எழுதிய 13 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.எஸ்.பொ இக்கதைகள் தொடர்பான "முன்னீடு" ஒன்றினை எழுதியுள்ளார்.

"இலக்கியங்கள் ஆழ்ந்த அனுபவங்கள் இல்லாமல் எழுதப்பட முடியாதவை" என்ற கருத்தினை வழி மொழிந்து குந்தவை தனது சிறுகதைகளைத் தந்துள்ளார். "நேரில் பார்த்த உணர் நோக்குடனே" இவரது கதைகள் எழுதப்பட்டுள்ளன. இதனால் தான் எஸ்.பொ,

"தமிழ் சமூகத்தை ஆட்டிப்படைக்கும் அவலங்கள், அவசரங்கள், விசனங்கள், விக்கினங்கள், துக்கங்கள், துயரங்கள் ஆகியவற்றிலிருந்து தம்மை அன்னியப் படுத்திக் கொள்ளாமல், அதில் வாழும் ஒரு உயிர்ப்புள்ள சாட்சியாக கதையை நகர்த்துகின்றார்."

என்று குறிப்பிடுகிறார்.

இவரின் கதைகள் தொண்டமனாறிலிருந்து வல்லைவெளி, யாழ் நகரம், புத்தளம், கொழும்பு, சென்னை ஆகிய களங்களிலே இயங்குகின்றன. கதை நிகழுகின்ற களத்தினை அதன் உயிர்ப்புடன் நிலைப்படுத்தி தன்னுடன் வாசகனையும் சேர்த்துப் பயணிக்க வைக்கின்றார். அவர் சொல்லும் எமக்குப் பரிச்சயமானதாய் இருக்கும் போது அவரது நுண்ணிய அவதானம் எமக்கு ஆச்சரியத்தைத் தருகின்றது. தெரியாததாய் இருக்கும் போது காட்சிப் படிமமாக பரிச்சயமாக்குகின்றது. சில இடங்களில் அதே களங் களும் சில காட்சிகளும் திரும்ப திரும்ப வேறுவேறு கதைகளில் வருகின்ற போது சலிப்பையும் தரவே செய்கின்றது. வல்லைவெளி, இறுக்கம் ஆகிய கதை களின் களம் ஒன்றே. அதில் அவர் காட்டும் சில காட்சிகளும் ஹெலி துரத்த மினிபஸ் ஓடுதல் போன்ற நிகழ்ச்சிகளும் நினைவூட்டல்களும் இரண்டும் ஒரே கதை போன்ற மயக்கத்தை வாசகரிடம் ஏற்படுத்துவன வாக உள்ளன.

இவர் தனியே படைப்பு மனத்துடன் இயங்காமல் தேர்ந்த வாசக மனத்துடனும் கதை வழியில் இயங்கி உள்ளமை வாசகனின் வாசிப்பு நினைவூட்டலுக்கும் தேடலுக்கும் அவ்விடயம் தொடர்பான ஆழப்படுத்தலுக்குமான இலகு கருவியாக

விளங்குகின்றது. அசோக மித்திரன் (பக் 159) நீலபத்ம நாதன்(148) வ.அ.இராசரத்தினம்(117) வண்ண நிலவன்(79) சுப்ரபாரதிமணியன்(170) இலங்கையர் கோன்(22) ஆகியோரின் கதைகளில் வரும் பாத்திரங்களையும் கதை நிகழ்வுகளையும் பொருத்த மாக கையாளுகின்றார்.ஒரு படைப்பாளிக்குள் நல்ல வாசகன் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் போது புதிய அனுபவத்தை அப்படைப்பு எய்தி விடுகின்றது.

இக்கதைகளில் பாத்திர உருவாக்கத்தில் ஆழ்ந்த கரிசனையை இவர் காட்ட வேண்டிய தேவை இருக்கவில்லை. ஏனெனில் பெரும்பாலான கதைகளில் இவரே பாத்திரமாக இயங்குகின்றார்.குந்தவையைத் தெரியாத ஒருவரும் குந்தவை பற்றிய ஒரு சித்திரத்தை மனதில் எழுப்பும் தருணங்களை வாசகனிடம் ஏற்படுத்துகின்றார். பாத்திரம் நடக்கும் போது ஒரு புகைப்படக் கருவியுடன் இயங்குகின்றதோ என்ற வியப்பை தொற்ற வைக்கின்றார். சிறு சிறு விடயங்களும் இவரது படைப்புக் கண்களில் அகப்பட்டு விடுகின்றது. அவை அது தொடர்பான கிளர்த்தல்களையும் தானே ஏற்படுத்திய படி நகர்கின்றார். சில விவரணைகள் புனைவுத்தளத்தில் சலிப்பைத்தந்தாலும் படைப்பாளியின் நுண்ணிய அவதானிப்பை நினைக்கும் போது அவற்றை படைப்புக்கு கொண்டு வந்த தருணங்களை நினைக்கும் போது அச்சலிப்பு அடிபட்டுப்போகின்றது.

குந்தவை ஒரு பெண் படைப்பாளியாக இருப்பதனால் பெரும்பாலான கதைகளில் கதை சொல்லி பெண்ணாகவே இருப்பதைக் காண்கின்றோம்.ஆனால் சில பெண் படைப்பாளிகளைப் போல் பெண் விடுதலைக் கோசங்களையோ, பிரசாரங்களையோ இப்படைப்புக் களில் அவர் எழுப்பவில்லை.

1. பெண்ணின் இயல்பான குணங்களுடனும்
2. அவளின் மீதான ஆண்களின் அதிகாரங்களையும்
3. ஆணினால் பெண் சந்திக்கும் அவலங்களையும்
4. பெண்ணின் பலவீனங்களையும்
5. பெண்ணுள் இயங்கும் தாய்மையின் பரிவையும்

தனது கதைகளில் இழையோட விடுகின்றார்.

ஏழெட்டு வாழைக்குலைகளுடன் சைக்கிளில் வருபவரை ஆமிக்காரர் இறக்கக் கூடாது என்று விரும்பு கிறாள் (இறுக்கம் பக் 18)கொழும்பில் பிச்சைக்காரன் ஒருவனைப் பார்த்து இறுதியில் இரக்கப்படு கிறாள்(இறுக்கம் பக் 161)தனது பிள்ளைக்கு பாண் மட்டுமே இருந்த போது ஏங்கும் சிறுவனுக்கு கொடுக் கிறாள் (பெயர்வு பக் 40)இவை பெண்ணின் இரக்க குணத்தை, தாய்மையை இயல்பாகக் காட்டுகின்றன.

பெண்ணிடம் இருக்கும் பய உணர்வு இயல்பாக இவரது கதைகளில் வருகின்றன.

ஆஸ்பத்திரி வாசலுக்குள் நுழைந்த போது மோட்டார் சைக்கிளில் ஒருவன் கோர்ட்டுடன் அமர்ந்திருந்த போது குண்டுதாக்கி என அஞ்சுகிறாள். (பயன்படல் பக் 126-127)காருக்குள் தனியே இருக்கும் போது கரடுமுரடான தாடி மீசைகளிடையே வெறித்த விழிகளுடன் நிற்கும் பிச்சைக்காரனைக் கண்டு முதலில் பதற்றமும் பயமும் கொள்கிறாள்(இறுக்கம் 156).

"இடமாற்றலுக்காய்" என்ற கதை பெண்ணின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான "பரிசாக" உடலைக் கேட்கும் அதிகார ஆண்களின் முகத்தை தோலுரிக்கின்றது. இக் கதையில் ஆண்கள் தொடர்பில் பெண்களிடமுள்ள பயங்களும் காட்டப்படுகின்றன.

"...தங்கட குறையை மறைக்க என்ன வேணுமெண்டாலும் சொல்லுவங்கள். உலகமும் ஆம்பிளையளின்ர பேச்சையே நம்பும்" (பக்.108) "பெற்றோர் நிச்சயித்த முன்பின் தெரியாத ஒருவனுக்கு



கழுத்து நீட்ட வேண்டிய தவிர்க்க முடியாத நிலையிலுள்ள பெண்களுக்குத் தான் புதிது புதிதாக எத்தனை பயங்கள்" (பக்.108).

"அண்டு பின்னேரம் போன் பண்ணிச் சொல்லுறார், ஒருத்தரையும் கூடக் கூட்டிக் கொண்டு வர வேண்டாமாம் நான் மட்டும் தனிய வர வேணுமாம்"(பக் 112)

பெண்ணின் இலட்சியங்களை முனைவுப் படுத்தும் ஒன்றாக "குறுக்கீடு" கதை அமைகின்றது. குந்தவையின் கதைகளில் இது தனித்து நிற்பதாக தோன்றுகின்றது.

இறுக்கம், பெயர்வு, இணக்கம், வல்லை வெளி, வீடுநோக்கி ஆகிய கதைகளில் போர்க்கால வாழ்வையும் தடங்களையும் பாதிப்புக்களையும்

சாதாரணமாகச் சொல்லிச் செல்லுகின்றார்.அதிகாரம் நோக்கிய எள்ளல் வாழ்வின் நெருக்கீடு மத்தியிலும் இருக்கும் இயற்கை நேசம் (நாயுண்ணிப்பூ, அணில்)இருப்புக்கான பிரயத்தனம், மனிதநேயம், மனித அவலம் என்பவற்றை தனது கதைகளில் காட்டுகின்றார்.

"பயன்படல்" கதை தனது ஆஸ்பத்திரி அனுபவம் ஒன்றைச் சொல்கின்றது.போர்வாழ்வுச் சூழலுள் பொதிந்து அதைச் சொல்லுகின்றார் நோயாளியான தான் போதனா வைத்தியசாலையில் "பயன்படும்" போதான தனது கஸ்ரத்தை கூறுகின்றார்.

"கனவு" என்ற கதை தோட்டத்தோடு மல்லுக்கட்டி நிற்கும் இளைஞன் ஒருவனின் வெளிநாட்டுக்கனவை கூறுகின்றது.

குந்தவையின் கதைகள் மனித மனங்களை ஊடுருவித் துளைத்து எஸ்.பொ கூறுவது போல், "குணங்களோடும் குறைகளோடும்" அவர்களை வெளிப்படுத்துகின்றன. கதையினை நாங்களும் அனுபவிப்பதான கிட்டிய அனுபவத்தை தருகின்றன. எளிய மொழியில் எங்களிடம் தனது கருத்தை தொற்ற வைக்கிறார். வழமையான கதைகளைப் போன்ற முடிவுகளை குந்தவையின் கதைகளில் காணமுடியாது. அவர் கதைகளை முடிப்பது போல் எல்லோராலும் எளிதில் முடித்துவிட முடியாது. "கதை முடிகிற போதே தொடங்குகின்றது" என்ற இலக்கணம் குந்தவையின் கதைகளுக்கே பெரிதும் பொருந்துமென எண்ணத் தோன்றுகின்றது.

அமைதியான இவரது எழுத்தும்,கதை சொல்லும் முறையும் "கதைகளுக்குரிய பெண் எழுத்து" என்ற அடையாளத்தையும் கொடுக்க வல்லன என்று கூறலாம். புகலிடத்திலிருந்து வருகிறவர்கள் குறிப்பாக பெண்கள் இங்கு(கதை மெட்ராசில் நிகழ்கிறது) காட்டும் பகட்டையும் பெருமிதத்தையும் அங்கு தரும் உதவிப்பணத்திற்காக "ஓடும்" திருவோடு ஏந்தும் உண்மையையும் தோலுரிக்கிறார்.இப்படியானவர்கள் மீதுள்ள கதாசிரியரின் கோபமே "திருவோடு" என்று தலைப்பிட்டிருக்குமென்று தோன்றுகிறது.

field work கதை அரச உத்தியோகத்திலிருந்து "வேலைக்கள்ளம்" செய்வதையும் பொய்க்கணக்குப் போட்டு காசு எடுப்பதையும் உண்மை உழைப்பாளர்கள் கேட்கும் பணத்தை கொடுக்காமல் தட்டிக்கழிக்கும் அலட்சியத்தையும் கலாபூர்வமாக சித்தரித்துள்ளார்.

"யோகம் இருக்கிறது" இலஞ்சம் வாங்கி இடை நிறுத்தப்பட்ட அரச அதிகாரியின் கதையைக் கூறுகின்றது. சமூகத்தின் முகத்தில் முழிக்க முடியாமல் அந்தரிக்கும் மனதை அழகாக காட்டுகின்றார். அவருக்கிருந்த "யோகத்தினால்" அரசியல் செல்வாக் கால் வேலை மீண்டும் கிடைப்பதாய் கதையை முடிக்கின்றார்.

---

## சினம் - பொறுமை

மனிதன் தன் நிலையை இழந்து விட வைப்பது சினம்
மானிட இயல்பை அழிக்கவல்லது அதுவாம்.
மனிதனின் உயர் பண்புகளைக் குலைப்பதும் சினம் ஆகும்
மனிதனை மிருகமாக்கி விடுவதும் சினம் தான்.

சகோதரன் - சகோதரி முரண்படுவதும் சினத்தினால்
கணவன் - மனைவி பிரிவுக்கும் அது வழிகோலும்
நண்பர்கள் - உறவுகள் தமக்குள் மோதச் சினம் காரணம்
ஒரு குழுவினர் சின்னா பின்னப் படவும் சினம் ஏதுவாகும்

குத்து, வெட்டு, கொலை நிகழவும் சினம் அடிப்படை
தாய் தன் பிள்ளையைத் தண்டிப்பதும் சினத்தினால்
தங்கு தடை இன்றிச் சினம் ஏன் வந்து தொலைகிறது?
தன் உடப்பிறப்பெனினும் உயிரையே பறிப்பதும் சினத்தினால்.

தோல்வி, இயலாமை, செயலில் திருப்தியின்மை, பொறாமை
தற்பெருமை, சந்தேகம், பிரபுத்துவக் கோட்பாடு, தாழ்வுணர்வு
தனக்கு அடங்கி நடவாமை, இத்தியாதி காரணங்கள்
சினத்தை ஊட்டி விடுவதால் கோரமான சம்பவங்கள்.

சினத்தை ஒடுக்கி விடச் சிறந்த வழி பொறுமை
மனத்தால் பொறுமை காக்க விரிவான சிந்தனை தேவை
மகாத்மாக்கள் உயர்வு கண்டதும் பொறுமையின் பெருமையே!
மகான் ஆகுமுன் மகன் ஆவதற்கும் பொறுமை அத்தியாவசியம்.

வெலிப்பன்னை அத்தாஸ்

இ.சு.முரளிதரன்



# துன்பியல் நாயகன்

இராமன் வாகை சூடிய பேருவகையின் சிலிர்ப்பில் அயோத்தியே களைகட்டியிருக்கிறது. சூரிய இனத்தின் மேலாண்மை மீண்டுமொரு முறை நிரூபிக்கப்பட்டுவிட்டது. சூரிய வம்சத்து தலைமைகளில் தன்னிகரற்ற கீர்த்தி மிகு ஒளிவட்ட விம்பமுடையோன் என்பதால் மகரிஷிகள் சாசனப் பொறுப்பிற்கு ஒப்புத வளித்துள்ளனர். நீலம் ஆட்சியின் நிறம். விசும்பு, கடல் எனவிழிநோக்கும் பரப்பெல்லை வரை பரந்த வர்ணம். காற்றிலும் நீரிலும் எளிதாகச் சுவறக் கூடியது. ஆனாலும் அதன் பிரதிபலிப்பு மாயத்தோற்றம் என்பது பகுத்தறிவில் பதுங்கியிருக்கிறது.விசும்பிற்கு நிறமில்லை,நீருக்கும் தான். பொய்யின் வசீகரத்தை நிஜத்தால் நெருங்க இயலாது. நீலம் இராமனோடு அத்வைதமானது. ஹரி அவனது மூல நாமம். ஹரியின் அவதாரங்களுள் நரசிம்மம் முக்கியமானது.ஹரியை அரி என்று மொழிச் செம்மையாக்கமாக உச்சரித்தால் சிங்கம் என்ற அர்த்தம் அகப்படும். எனினும் இது வலிந்து பொருள் கொள்ளும் வழுவென தீவிர அகராதி நோக்குனர் பிரலாபிப்பார்கள். இராமனோடு சிங்கத்திற்கான தொடர்பினை நிறுவுதல் எளிமையானது என்பதால் தேவையற்ற சர்ச்சை களுக்குள் சிக்க வேண்டாம்.

இராமனது வெற்றி அசாதாரணமானது. நுட்பமான காய் நகர்த்தலால் விளைந்தது. அனுமன், சுக்ரீவன், அங்கதன், ஜாம்பவான் போன்றோரின் நட்புறவைச் சேகரித்துப் பெறப்பட்டது. சிவபக்தனாக, திராவிடக் காவலனாக கருதப்பட்ட இராவணனை அரக்கனாக முத்திரை குத்தி, இராவணனின் வெண் கவிகை விழுதிறக்கிய பிரதேசம் நோக்கிச் சேனைகளை நகர்த்திஅரக்கர் குலத்தை துவம்சம் பண்ணி எய்திய மகத்தான வெற்றி! மகரிஷிகளுக்கு கொடுத்த வாக்குறுதி யால் முகிழ்த்த போர்ப்பறை கொற்ற முரசாக வியாப்தி எய்தியது. நிமித்திகர் நாளும் கோளும் ஆய்ந்து அமருக்கான தருணத்தை இராமனுக்கு நல்கி ஏகினர். சீதை கேள்வனும் முனிவு எஞ்சாது அரக்க குலம் அலமரச் சிதைத்தான். மாயாவாதம் விஸ்வரூபம் கொண்டது. சிசுக்கள், பெண்கள், முதியோர் என அனைத்து அகவையினரும் மாயாவாதத்தின் நகலாயினர்.அரக்க சங்ஹாரம் இனிதே அரங்கேறியது. பகழிகள் காற்றைப் புணர்ந்து காலாவதியாகவில்லை. முடிவிலி வலியின் முணகல் நுண் அவிழ்ப்புக்கு உட்படாது உதிர்ந்து போயிற்று. அமரர் அவை அகமகிழ்வெய்தியது.

இராமன் அவதார புருஷன்! சீதை மீது ஏக போக உரிமம் பூண்டவன். சீதை ஆரிய வம்சத்திற்கே பரம்பரைப் பாத்தியதை என்னும் உரிமத்தை நிறுவியவன். இலக்குவன் மீது பிரமாஸ்திரத் தாக்குதல் நிகழ்ந்த காலத்து அயர்ந்து நெடிதுயிர்த்தான். தம்பி உயிர் பிழைத்தது அறிந்து வாள் எயிறு இலங்க நக்கான்.உச்ச மகிழ்வோடு இலக்குவனை ஆரத் தழுவிய காட்சியால் ஆரியர் மெய் சிலிர்த்தனர். அங்கதனின் சமாதானத் தூது பொருளிழந்த பின்னராக நிகழ்வுகள் இராமனுக்கு அனுகூலமாயின. இராமனது வெற்றி நேர்மையின் வழியில் சுரந்ததன்று. நுட்ப தந்திரங்களால் கறக்கப்பட்டது. வீடணின் வருகை எதிர்பாராது கிடைத்த பெரும் புதையல். வீடணனுக்கும் அண்ணனுக்குமிடையே கருத்துத் தகர்வுக் கலகத்தில் இராமனுக்கு நேரடித் தொடர்புகள் இருந்ததற்கான சான்றுகள் ஏதுமில்லை. ஆனால் நன்மைகளின் வீரிய பாய்ச்சல் இராகவனின் பாதச் சுவடுகளின் வழியேதான் பயணித்தது. தந்திரத் தாயக்கட்டை உருட்டில் நிகழ்தகவின் வாய்கள் காகுந்தனின் கால் தூசியாக ஓடிப்போயின. அரக்கர் குலத்தின் பலவீனங்களை வீடணன் பட்டியலிட்டுச் சமர்ப்பித்தான். ஆயர் குலத்தவரின் அடிமனதில் வீபிடணன் குறித்து மேம்பட்ட அபிப்பிராயம் நிலவவில்லை. வீடணனுக்கு உயர் பதவி நல்கப்பட்டமைக்கும் அதிருப்தியே தென்பட்டது. இராமன் புத்திசாதுரியத்தின் பிதாமகன். வீடணனின் அரக்கர் குல அடையாளங்களைக் களைந்து பூர்வீக

பிராமண சாயத்தைப் பூசிவிட்டான். தன் தம்பியாகப் பகிரங்கப்படுத்தினான். செஞ்சோற்றுக் கடனிலும் நடுநிலைமையே மேலான அறம் என்பதால் தான் தெய்வப் புலவனின் அதிகார வைப்பில் பிற்பட்டு அமைந்து வீடணனின் பெருமையினை விளம்புவதாகப் பல்வேறு தர்க்க நியாயங்களை வரிசைப்படுத்தினான். வீடணனும் வசை வெள்ளத்தைப் புறமொதுக்கிப் புதுமைப் பூட்கைகளை திருவாய் மலர்ந்தான். பிராமணர்களாக யாசித்துப் புசிப்பதே உயர் அறம் என்றும் இயற்கையின் படைப்பினை உரிமத்தோடு உண்ண விழைவது இராக்கத குண மென்றும் உபதேச மஞ்சரிகளை சரமாரியாகப் பொழிந்தான்.

சீதையின் தீக்குளிப்பு பல்வேறு வாதப் பிரதிவாதங்களை நிகழ்த்தியுள்ளது. இந்திர அவையில் அவதார அழுக்கைச் சலவை செய்தல் அர்த்த புஷ்டியானதென்று அவா வெளியிடப்பட்டது. இந்திர அவைத் தீர்மானங்கள் இராமனின் மன இடுக்குகளில் முகாமிட்டாலும், வீரப் பிரதாபங்களோடு சீதையை ஆலிங்கனம் செய்த பரவசத்தோடு காட்சி கொடுக்கிறான். அயோத்தியின் இறைமையைச் சுட்டிக் காட்டி சொர்க்க வாசலின் தலையீட்டினை நிராகரிப்பதே இராமனுக்கு புலனாகும் நியாயம். அவன் அவதார புருஷன்! வெற்றி மடல் அவனுக்கே விலாசமிட்டுள்ளது.

அரக்கர் குல வரலாற்றில் துன்பியல் நாயகனாகவே இராவணன் அமைந்துள்ளான். சீதை அவனுக்குபூர்வீக சொத்து. இராவணனின் பிதா வச்சிர வசு. வச்சிரவசுவின் தந்தை புலத்தியன். புலத்தியனோ பிரம்மனின் புத்திரன். பிரமாவின் தந்தை விஷ்ணு. விஷ்ணுவின் சொத்தாக திருமகள் அமைகிறாள். எனவே முப்பாட்டனின் பிதாவின் சொத்தாக திருமகளாகிய சீதையைக் கருதி உரிமத்தை வெளிப்படுத்தி அடையத் திருவுளங் கொண்டான். சீதையை உரிமை கொள்ளும் தாகம் சூர்ப்பனகையால் உருப்போடப்பட்டது. சூர்ப்பனகையின் வேட்கை வழி ஆதியில் வேறாக இருந்தது. மூக்கறுபட்டு முழுமையும் தோல்வியில் முடிந்தது. எனவே இராவணனை உசுப்பேற்றினாள். மாற்றீடு ஏதுமின்றி சீதையைச் சொந்தமாக்குமாறு அமைச்சர்களும் உக்கிரமாகப் போதித்தனர். சூர்ப்பன கையின் நூபுரங்கள் புலம்ப ஈழம் கவந்தங்களில் தொழிற்சாலையானது. இராவணனும், பொன்றுதல் அரக்கர்க்கு மகிழ்நெறியே என்று மதயானையின் தந்தங்கள் மார்பில் புகுந்து முறியுமாறு பல்வேறு தீரச் செயல்களை வரலாற்றில் பதிவு செய்தான். இராமனின் வெற்றியினைத் தொடர்ந்து அனைத்தும் மாறின. அமைச்சர்களின் பேச்சில் சுருதி பேதம் சங்கமித்தது. இராமனின் காலுக்கு பாதுகையாக வாழவும்விழைவு கொண்டனர். அரக்க குலத்தை சமாளிக்க பாதுகைக்கும் ஆளும் தகுதி அமையும் என சப்பைக்கட்டு கட்டுகிறார்கள். அயோத்தியில் செருப்பாட்சியை நிறுவலாம் என கோமாளித்தனமாக விளம்பி விகடகவியாகிறார்கள்.

தசக்கீரிட அதிகாரம்,மொழிப்பற்று,தேவ அங்கீகாரமற்ற தனிஆட்சி, புட்பக விமானம், கைலாய கிரியை நடுங்க வைத்தமை போன்றன வானவர், வானரர், ஆரியர் உட்பட எல்லோருக்கும் உறுத்தலாக இருந்தது. இந்திரஜித்தின் சுய முடிவு ஆற்றுகை அரக்க தளபதிகளுக்குஒவ்வாமையை உண்டு பண்ணின. வீடணன் பிரிகை, நீண்டகால கும்பகர்ண உறக்கம், அரக்கர்குல நிர்ப்பந்த யுத்த சேவை இவ்வாறு எத்தனையோ குளறுபடிகள் ஒன்று கூடி இராவணனுக்கு எதிராக அமைந்து விட்டன. இராவணன் இந்திரஜித்தின் மரணத்தை தரிசித்து புத்திர சோகத்திற்கு உள்ளானான். இறுதிப் போரில் தசக்கீரிடங்கள் தொலைந்தமை குறித்த விடுகதை முடிச்சை அவிழ்க்க தினுசு தினுசுசாக காவியம் புனைகிறார்கள்.

இராவணனின் சிவ பூமியில் விஷ்ணு கோவில்கள் முளைக்கின்றன. பாண்டவர் ஐந்து பேர் பாஞ்சாலியை பிரித்து ஆண்ட கதை நிலவும் பிரபஞ்சத்தில் இராமன் மட்டும் ஏகபத்தினி விரதனாக வாழ அடம் பிடிக்கிறான். பாரதத்தில் குந்திதேவி தர்மதேவன்,இந்திரதேவன்,வாயுதேவன் என்போரால் வெவ்வேறு காலத்தில் மாறுபட்ட உரிமக் கலவிக்குள்ளானாள். கன்னிப் பருவத்தில் சூரிய தேவனைப் புணர்ந்து அச்சத்திற்குள்ளாகி அவலமானாள்.கற்புநெறி வலுப்பெற்ற கதைக்களத்தில் சுய விருப்புக் கூடுகையும் நிகழ்ந்துள்ளது. இராமனைப் பொறுத்தவரை மகரிஷிகளுக்கு செய்து கொடுத்த சத்தியத்தை மீறுவது சாத்தியமற்றது. அவதார காலம் நிறைவு பெற்ற பின்னரும் மாற்றத்தினைத் தரிசித்தல் இயலாது. இலக்குவனோ இலவனோ தான் அரசுக்கு உரிமம் கோருவார்கள். தவறின் ஆரிய குலத்தாரில் எவரேனும் ஆட்சியில் அமர்வர். அரக்க குலத்தவரை இதய சுத்தியோடு அரவணைக்க அயோத்தி மாந்தரால் இயலுமா?தம் இனத்தின் மீது திணிக்கப்பட்ட காட்டுமிராண்டித்தனத்தை முற்றும் மறந்து பரஸ்பர புரிந்துணர்வோடு அரக்கர் குலம் ஆரியரை ஏற்று உறவாடிக் களிக்குமா?அவதார புருஷனின் பேரொளிப் பரவலாக்கத்தில் துன்பியல் நாயகனின் விம்பம் தொலைதூரத்தில் மின்னுகிறது. மாரீசம் மட்டும் மறையவில்லை.துன்பியல் நாயகனிடமிருந்து மாரீச தந்திரத்தைக் கற்றுக் கொண்டோர் நகல் மான்களை உலாவ விட்டுள்ளனர். இராமன் சூடு கண்ட பூனை! மற்றொரு தடவை மயங்கப் போவதில்லை. பாவம் பாமர மாந்தர்,மறுபடியும் மறுபடியும் பொய்மானுக்குப் பின்னால் பயணிக்கிறார்கள்.


அபூர்வன்

# வர்மக் கலையும் தமிழ் சினிமாவும் -கால்கோள் நிலைக் குறிப்புகள்-



கலை மரபியல் காப்பு போலிமையைக் காலம் அப்பட்டமாக கேலிக்குள்ளாக்கும் சூழலிலும் பண்பாட்டு நீட்சியில் நிரந்தர விரிசல் தென்படும் தருணத்திலும், தொன்மம் சார் புகழ்ச்சியூடான மகிழ்நெறியில் தமிழினம் திளைத்துக் கொண்டிருக்கிறது. தமிழ் இறும்பூது உரிமம் கோரும் மருத்துவக் கலைகளில் ஒன்றாகவே "வர்மக் கலை" சுட்டப்படுகின்றது. எனினும் குறித்த இனக் குழுமத்தின் ஏகபோகமாக வர்மக் கலை யினை நிறுவ முற்படும்போது, புராதன காலத்தில் கலைகளின் பரஸ்பர பரிமாற்றச் செல்நெறியினையும் கவனத்தில் எடுக்க வேண்டியது அவசியமாகின்றது.

தமிழினம் வர்மக் கலையினை முதுசொமாக வரித்துக் கொள்ள பிரயத்தனப்பட்டாலும் அக்கலை குறித்த கனதியான நூல் எதுவும் தற்போது கைவசமில்லை. சிவபெருமானே வர்மக் கலையின் "பிதாமகன்" என்றும் அகத்தியர், போகர் போன்ற முனிவர்களின் எழுத்துருவாக்கமே வர்ம சாஸ்திர மென்றும் பல்வேறு கர்ண பரம்பரைத் தகவல்கள் இயம்பு கின்றன. வர்ம சூத்திரம், வர்ம சூட்சுமம், வர்மப் பீரங்கி, வர்மக் கண்ணாடி என வர்மக் கலை நுட்பத்தினைக் கட்டவிழ்க்கும் சில நூல்கள் கிடைத்துள்ளன. எனினும் அவையனைத்தும் வழுக்களும் சுயமுரண் பாடுகளும் மிகுந்து யாப்பின் சீர்மை தகர்த்த பிரதிகளாக அமைந் துள்ளன. மேலும் விருத்த வடிவத்தில் அமைந்து அகத்தியர் காலம் குறித்த கருத்தியலை நொறுக்கி விடுகின்றன. ஒவ்வொரு நூலிலும் சில வர்மங்கள் முரணி நிற்பதோடு, வர்மப் புள்ளிகளின் எண்ணிக்கையிலும் மாறுபடுகின்றன. சித்தர்களிடத்தில் தோற்றமெய்தி வாய்மொழி மரபில் கடத்தப்பட்டு பிற்காலத்தில் ஏட்டுருவம் பெற்றிருக்கலாம் என சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.



சரீரத்திலுள்ள வர்மப் புள்ளிகள், பிரயோக நுட்பம் என்பவற்றின் அடிப்படையில் படுவர்மம், தொடுவர்மம், தட்டுவர்மம், நோக்குவர்மம் என வர்மக் கலை நான்கு வகுதிகளுக்குள் அடக்கப்படுகிறது (தடவுவர்மம், நக்குவர்மம் என்னும் உப பிரிவுகளும் நாடிகளை ஆதாரமாகக் கொண்டு வாத வர்மம், பித்த வர்மம், ஐய வர்மம், உள்வர்மம் என்னும் பிரிவுகளும் சில நூல்களில் இடம்பெறுகின்றன.). சரீரத்திலுள்ள வர்மப் பகுதிகளில் மோதுகை நிகழ்த்துவதே படுவர்மமாகும். உயிரிழக்கும் விழுக்காடு உபரியானது என்பதால் மிக நுணுக்கமாக ஆளுகைக் குரிய ஆபத்தான வர்மமாகும். மீத்தேர்ச்சியுடைய ஒருவராலேயே செய்யக் கூடியது. படுவர்மப் புள்ளிகளில் அடிபட்டால் மறு கணமே மயங்கி விழ நேரிடும். உயிராபத்து குறைந்த தொடுவர்மப் புள்ளி களில் மோதுகை நிகழ்த்துவதே தொடுவர்மமாகும். படுவர்மம் போலவன்று சாதுவான வர்மமாக அமைவதால் எளிதில் குணப்படுத்தலாம். விரலை நுட்பமாகப் பயன்படுத்தி ஒருவரின் உடலில் மிக மிக லேசாகத் தட்டுவதனூடாகப் பாதிப்பினை


ஏற்படுத்துவதே தட்டுவர்மமாகும். பார்வையினை ஒன்றுகுவித்து உற்று நோக்கி அதனூடாக விளைவினை வருவிக்கக் கூடியதாக நோக்குவர்மம் அமைகின்றது. மீநுண்தேர்ச்சியின் எல்லையில் நோக்குவர்மப் பரிச்சயம் சாத்தியப்படும்.

புதிர்ப் பிணிகளின் பரிபாலனத்தில் அகப்பட்ட மக்களை விடுவிக்கும் மருத்துவமாகவே வர்மப் பரிகார முறை இருந்துள்ளது. எந்தெந்த வர்மப் புள்ளிகள் எங்கெங்கு ஒடுங்குகின்றன, அவற்றுக்குச் சமாந்தரமான அலைவரிசையையுடைய இதர வர்மப் புள்ளிகள் எவை என்பன குறித்த துல்லியமான புரிதலின் பின்னரே வர்மப் பிரயோகம் அனுகூலமாகும். கிழிந்த காயத்திலிருந்து வெளியேறும் குருதியை கட்டுப் போடாமல் வர்ம நரம்பால் நிறுத்த முடியுமாம்! தற்கால மருத்துவத்தின் நரம்பியல் முறையே பழங்காலத்தில் வர்ம முறையாகச் சுட்டப்பட்டுள்ளது.

கிரேக்கம், சீனம் முதலிய தேசங்களில் வர்மக் கலை பரவியுள்ளது. கேரளத்தில் ஈழவர் என்ற குழுமத்தினர் வர்மக்கலையில் மீத்திறன் பெற்றவர்களாக இருந்துள்ளனர். வர்மக் கலையைப் பயின்று மீநுண்தேர்வடைந்தோர் "வர்மாணி ஆசான்" என அழைக்கப்படுவர். கேரளாவின் திருவிதாங்கோடு சமஸ்தானத்தின் ஒரு பகுதியாக அமைந்த, இன்றைய கன்னியாகுமரி மாவட்டத்தில் வர்மாணி ஆசான் பரம்பரையினரைக் காணலாம். கேரளத்தில் வர்மக் கலையானது களரிப் பயிற்று என்னும் சமர் முறை தற்காப்புப் பயிற்சியின் மீவித்தை வகுதியைச் சேர்ந்ததாகும்.

தமிழ்த் திரைப்படங்களில் இயக்குனரின் மேதமைக்கு பொருத்தமாக, நாயக விம்பத்தினை மெருகூட்ட வர்மக் கலை குறித்த காட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தியன், ஏழாம் அறிவு, கில்லி ஆகிய படங்களில் வர்மப் பிரயோகம் குறித்த புனைவுகள் இடம் பெற்றுள்ளன (வேறு சில படங்களில் "எள்ளல்" சார் மீட்டெடுப்பாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது.). வர்மக் கலை குறித்த அத்திபாரத்தினை சறுக்கலின்றி முதன்மைப் புள்ளியாக வைத்த படமாக "இந்தியன்" திகழ்கிறது. ஓரளவு ஏற்புடைய நூல் வழி சார் செய்திகளை புனைவாக்கியுள்ளது (படத்தின் வசனகர்த்தா "சுஜாதா" வர்மக் கலை குறித்த நுண்செய்திகளை வாசிப்புத் தளத்தில் நன்கறிந்தவர்.).




தட்டுவர்மத்தின் ஆளுகை படத்தில் முனைப்புப் பெற்றுள்ளது. முதுமை நாயகனிடம் வீரத்தின் நீட்சியைத் தக்க வைக்கவே வர்மத் தகைமை உத்தி கையாளப்பட்டுள்ளது. இந்தியன் தாத்தா (அமெரிக்கக் கலைஞர் மைக்கேல் வெஸ்ற்மோரின் ஒப்பனையில் கமல்ஹாசன்) "கோப்ரேசன் கொமிஸ்னரை" கொல்லுமிடத்தில் தொலைபேசி, அழைப்புமணி என்பவற்றை கையாள விடாது விரலினால் தாக்கி செயலிழக்கச் செய்கிறார். பிரேதப் பரிசோதனை அறிக்கையில் நரம்பு மண்டலத்தில் விநோதமாகத் தாக்கப்பட்டு இறந்தமை தெரிய வருகிறது. C. B. I. அதிகாரியான கிருஷ்ணசாமி (நெடுமுடிவேணு) விபரமறியக் கேரளா செல்கிறார். தற்காப்புக் கலைக் குரு ஒருவரின் வாய்மொழியாக வர்மக் கலை குறித்த செய்திகள் பார்வையாளனுக்கு புரிய வைக்கப்பட்டு விடுப்பார்வம் தகர்க்கப்படுகிறது. "எங்க ஆசான் கிட்ட ஒன்றிரண்டு தீவிரவாதிங்க வந்து கத்துக்கிட்டு போனாங்க" என்ற துப்புக் கிடைக்க, 40களில் வெளிவந்த பத்திரிகைகளை தூசி தட்டி, சேனாபதி (கமல்ஹாசன்–இந்தியன்) என்ற கொலையாளியைக் கிருஷ்ணசாமி கண்டறிகிறார்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இக்கலைக்கு தடை விதிக்கப்பட்டிருந்ததாகவும் (தமக்கு எதிராகப் பயன்படுத்தப்படலாம் என ஆங்கிலேயர் அஞ்சினர்.) பன்னிரு வருடக் குருகுல வாசத்தில் மாணவனின் நற்பழக்க வழக்கங்களை இனங்கண்ட பின்னரே கற்றுக் கொடுக்கப்படும் கலையாகவும் நூல்வழித் தரவுகள் குறிப்பிடுகின்றன. எனவே, தீவிரவாதியான சேனாபதி (பின்னர் தான் இந்திய தேசிய இராணுவத்தில்–I. N. A.– இணைந்து கொள்கிறார்.) வர்மக் கலையினைச் சுலபமாகப் பயின்று ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் பயன்படுத்தும் காட்சி நம்பகத்தன்மைக்கு முரணானது.

வர்மக் கலையின் அடிப்படை யதார்த்தத்தை

மீறி இருட்சாயை உட்சரடுகளை புனைவாக்க இயக்குனர் விரும்பவில்லை என்பதையும் ஒரு காட்சியில் தெளிவாக்கியுள்ளார். சேனாபதி கைவிலங்கு போடப்பட்ட நிலையில் தப்பிக்கத் தவிக்கிறார். "என்ன சேனாபதி? நோக்குவர்மத்தாலயே விலங்கை உடைச்சிடலாம் எண்ணு பார்க்கிறீங்களா?" என கிருஷ்ணசாமி கேலி செய்கிறார். மிகை மனோபாவத்தின் தலைமை இயக்குனரான "ஷங்கர்" வர்மக் கலையின் எல்லையினை அபரிமிதமாக கடந்து பயணித்து பார்வையாளரின் காதில் பூச்சுற்ற முனையாமைக்காகப் பாராட்டப்பட வேண்டியவர்!

வர்மக் கலையினை தமிழினத்தின் உரிமமாக நிறுவும் திரைப்படமாக "ஏழாம் அறிவு" அமைகிறது. பல்லவ மன்னனின் மூன்றாம் இளவரசனான போதிதர்மன் இந்தியாவிலிருந்து சீனா சென்று



"நான்ஜென்" கிராமத்தில் வாழ்ந்து Shaolin Temple என்ற புத்த மதக் கோயிலையும் சீன தற்காப்புக் கலைகளையும் உருவாக்கியதாகப் படம் எடுத்துரைக்கிறது. சீனா தற்காப்புக் கலையில் நீண்ட நெடிய வரலாற்றினை உடைய தேசம்! தென் தமிழகத்தில் "சீனடி" என்ற சொல்லின் வழங்குநிலை சீனத் தற்காப்புக் கலையின் பரவலாக்கத்தினை வெளிப்படுத்துகிறது. மேலும் "போகர்" சீனாவிலிருந்து இந்தியா வந்ததான மரபுவழிக் கதை "ஏழாம் அறிவு" என்ற நாணயத்தின் (?) இன்னொரு பக்கமாக இருக்கிறது (குங்ஃபூ இந்தியாவிலிருந்து உலகம் முழுமைக்கும் பரவியதான செய்தியினை அறிந்து, அக்கலையின் நுணுக்கங்களை அறிய புரூஸ் லீ இந்தியா வந்து அதீத ஏமாற்றத்தோடு திரும்பினார்.). மயிலை சீனி, வேங்கடசாமி, கா. இந்திரபாலா ஆகியோர் போதிதர்மன் காஞ்சிபுரத்திலிருந்து இந்தியா சென்ற வரலாற்றுத் தகவலினை வெளிப்படுத்தியுள்ளனர். எனினும் வர்மக் கலையினை தமிழரின் ஏகபோக உரிமமாக நிறுவுவதில் தான் சிக்கல்கள் தென்படுகின்றன.

7ம் அறிவு திரைப்படத்தில் "நான்ஜென்" கிராமத்தை "Hong See" என்ற வைரசு தாக்குகிறது. போதிதர்மன் தமிழ் மருத்துவத்தினூடாக மக்களைக் காப்பாற்றுகிறார். கிராமத்தை அழிக்க வரும் எதிரிகளை நோக்குவர்மத்தினூடாக கொல்கிறார். நோக்குவர்மம் படம் முழுமையும் ஆக்கிரமித்துள்ளது. சரீரத்தில் உயிர் ஒடுங்கி நிற்கும் புலங்கள் அமிர்த நிலைகள் எனப்படும். அமிர்த நிலைகளில் மோதுகை நிகழின் மரணம் சம்பவிக்கும். அமிர்த நிலைகள் இடம்பெயரும் தன்மையுடையன. அவற்றினை ஏகாக்கிர சிந்தையூடாக உற்றுநோக்கி நகர வைப்பதே நோக்குவர்மம் என நூல்கள் குறிப்பிடுகின்றன. 7ம் அறிவு திரைப்படமோ நோக்குவர்மத்தின் எல்லைகளைத் தாண்டி சொப்பன சஞ்சாரம் புரிகிறது. போதிதர்மன் விரல்களை அசைக்க சருகுகள் சிறு புயலாகி எதிரிகளை தாக்குகின்றன. எதிரி எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் நோக்குவர்மத்தால் கட்டுப்படுத்தலாம் என்பதெல்லாம் வர்மக் கலை குறித்த உயர்வு நவிற்சிக் கருத்துக்களே! படத்தில் சுபா (ஸ்ருதி ஹாசன்) அரவிந்திடம் (சூர்யா) மிகத் தெளிவாக "Hypnotism! நோக்குவர்மம் என்பது இங்கிருந்து போனது தான்" என்று புரிய வைக்கிறார். பிறகு எதற்கு மாயாஜால வித்தைக்காரனாக டோங் லீ (ஜானி ட்ரை நுயென்) செயற்படுகிறார்?

Land mark ஊழியர், CREDIT CARD பிரிவிலுள்ள ஊழியர் என்னும் இருவர் மீதும் நோக்குவர்மம் பிரயோகிக்கப்படுவது நம்பகத்தன்மையோடு அமைகிறது. குறித்த நபரைத் தன்வசப்படுத்தி வினாக்களுக்கு விடை பகர வைக்கிறார். ஆனால், எதிர்நாயகனின் மனதில் நினைப்பது எல்லாமே மற்றையோர் செய்வது "நோக்குவர்மம்" குறித்த எல்லை தாண்டிய அபரிமிதமான வெளிப்பாடேயாகும். "பல வருடக் கடினப் பயிற்சிக்குப் பின் கைவரக் கூடிய குங்ஃபூ கலையை ஒரு அப்பாவிப் பெண்ணை அரை வினாடி உற்றுப் பார்ப்பதன் மூலமே பெற்றுக் கொடுத்து விடுகிறார்" என்று B. R. மாதவன் நோக்குவர்மம் குறித்த சண்டைக் காட்சியினை கிண்டல் செய்துள்ளார் (இங்கே திரைக் கதைகள் பழுது நீக்கித் தரப்படும் – பக்கம் – 117). டோங் லீயால் நாயகனை மட்டும் நோக்குவர்மத்தால் கட்டுப்படுத்த முடியவில்லை. போதிதர்மனின் குருதி எனப் போலிக் காரணத்தைக் கூறி "இயக்குனர்" ஏ. ஆர். முருகதாஸ் தப்பித்துக் கொள்கிறார். ஆனால், உண்மை அதுவல்ல! இருமை எதிர்நிலை உறவின் மோதுகையில் நாயகன் MASS HERO என்பது தான் நிஜக் காரணம்! நோக்குவர்மம் குறித்த எல்லைகளை தன்னிச்சையாகத் தாண்டிச்

சென்றாலும் –ஆணி வேர் கூட அரிப்புக்குள்ளான பின்பும் பூக்களுக்கு ஏங்கும் தமிழின இரும்பூது தளத்தில்– போதிதர்மன் குறித்த ஆவணப் பதிவினை (?) சில நிமிடங்களாவது காட்சிப்படுத்தியமைக்காக ஏ. ஆர். முருகதாஸ் பாராட்டுக்குரியவர்.

வர்மக் கலை என்ற வார்த்தையினை ஒட்டு மொத்தமாக சலவை செய்து நீக்கி விட்டு, நரம்பினைக் குறி பார்த்துத் தாக்கும் அங்க வெட்டுமுறையின் காட்சிப்படுத்தல்களை "கில்லி" திரைப்படத்தில் காணக் கூடியதாகவுள்ளது. முத்துப்பாண்டி (பிரகாஸ்ராஜ்) என்ற ஒழுக்கமற்ற கதாபாத்திரத்திற்கு வர்மத்தின் புனிதம் வசப்படா தென்பதால், பெயரைப் பிரித்தெடுத்து விட்டு



பாணியை மட்டும் "கில்லி" அகத்துறிஞ்சியுள்ளது. நாயகனை விட மேம்பட்ட தகுதிகளை எதிர்நாயகனிடம் செப்பனிட்டு, அதன் பின்னர் எதிர்நாயகனின் வீழ்கையினைப் பதிவு செய்தலே பாமர மக்களிடம் போலி விம்ப வழிபாடுகளை காவிச் செல்ல துணை செய்யும் என்பதால் "நரம்படி வித்தை" கில்லியில் இணைக்கப்பட்டுள்ளது (ஜடா வர்மன் என்ற பாண்டியன் வர்மக் கலையில் சிறப்புத் தேர்ச்சியுடையவன் என்னும் செய்தி மதுரையில் வழக்கிலுள்ளது. "மதுரை முத்துப்பாண்டிக்கு" இயக்குனர் தரணி வர்மத்தை பொருத்திப் பார்த்திருக்கிறார்.).

இறுதி காட்சியில் விரல் வழியே தட்டு வர்மத்தைக் கையாண்டு வர்மப் புள்ளிகளைக் குறி வைத்து முத்துப்பாண்டி தாக்க வேலு (விஜய்) மயங்கி விழுகிறான். எனினும் பொதுப் புத்தியை விசனத்திற்கு உள்ளாக்கும் வகையில் வர்ம அடியிலிருந்து தன்னிச் சையாக விடுவித்துக் கொண்டு (கையையும் காலையும் சுழற்றுகிறார். அனைத்தும் இயல்பு நிலைக்கு வந்து விடுகிறது. பிறிதொரு காட்சியில் "பிஸ்கெற்" வைத்துக் கொண்டு பின்பக்கத்தை கோமாளித்தனமாக ஆட்டும் நகைச்சுவையை (?) விடப் பெரிய நகைச்சுவை இது தான்!) எதிர்நாயகனை துவம்சம் செய்கிறார். படத்தின் நகர்வில் வேகம் இருக்குமளவுக்கு வர்மக் கலையில் துளியும் விவேகம் தென்படவேயில்லை!

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது வர்மக் கலையினை வணிக நோக்கிலே காட்சிப் படுத்தி யிருக்கும் படங்களில் "இந்தியன்" இயன்ற வரை தட்டு வர்மத்தின் எல்லைகளை மீறாத தன்மையோடு அமைந்துள்ளது. "நோக்குவர்மம்" குறித்த படிமங்களை 7ம் அறிவு தந்திரக் காட்சிகளைச் சமன் செய்யும் நுட்பத்தோடு கையாண்டுள்ளது. "கில்லி" கோமாளித் தனத்தின் நீட்சியாகப் பதிவு செய்துள்ளது என்பது புலப்படுகிறது.


## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 60/= ஆண்டுச்சந்தா - 1000/= வெளிநாடு - $ 45U.S

மணியோடரை அல்வாய் தபால் நிலையத்தில் மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி

**K .Bharaneetharan, Kalaiaham , Alvai North west, Alvai.**

வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்

K.Bharaneetharan
Commercial Bank -
Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY

# நான் அழவேண்டும்

நான் அழவேண்டும்...
சாதலின் சாதாரணம் கண்டு
சலிப்படைந்த வாழ்க்கையினில்
வாழ்தல்தான் அவசியம் எனில்
நான் அழவேண்டும்.

மனிதரெனும் முகமூடிபோர்த்த
மனிதம் என்பதறியா ஜடங்கள்
நனிதரும் மலர்களையும்
நுனியிலே பிய்த்தெறியும் கரங்கள்

நான் என்றும் நீ என்றும்
அவன் என்றும் அவள் என்றும்
சாதி என்றும் மதம் என்றும்
சாக்கடைக்குள் தள்ளப்படும்
சாதனை முகங்கள்

சட்டத்தின் பெயரால்
சாகடிக்கப்படும் நீதிகள்
பட்டத்தின் பெயரால்
புத்திஜீவிகளாக்கப்படும் மனிதர்கள்

திறமையின் பெயர் கொண்டு
ஆசனமேறிய பதவிகள்
பதவியின் பெயர் கொண்டு
உள் நுழைந்திடும் உறவுகள்
தமிழராகப் பிறந்ததினால்
தற்கொலை செய்யப்படும் எதிர்பார்ப்புக்கள்

இன்னும் இன்னுமாகவுள்ள யாவுமே
மறந்துபோய்... கழிந்துபோய்...
கடந்துபோய் - நான்
புதிதாகப் பிறக்க வேண்டும்.

மனங்களோடு உறவாடவல்ல - உண்மை
மனிதர்கள் சிலருக்கும்
சிரித்து சிங்காரித்திடினும்
அகமதனை முகமதில் காட்டும்
கண்களும் தாமறிந்த - என்
சுயத்தின் விசும்பல்களுக்கு
மெய்யாகவே ஒரு தீர்வு வேண்டும்.

இறைவா...
வாழ்தல்தான் உன் தீர்ப்பு எனில் - ஒருமுறை
அழுவதற்காவது வாய்ப்பளி எனக்கு.

- வானதி சந்திரா



# பச்சை மஞ்சள்

குடலை பருவத்து வேளாண்மை விடலை
அண்ணாந்து
ஆகாயத்தைப் பார்த்த மேல் நோக்கு

குருத்தோலை தோரணம்
கோவில் திருவிழாவுக்கு ஆபரணம்
மங்கல சடங்குகளுக்கு மணக்கோலம்
கொழுத்த குட்டி ஆடுகள்
பொய்த்த மாரி கால வானம்

பழுத்த ஓலைகள் நிழல்
சருகுகள் வெளிச்சம்
நெற்கதிர்களின் குனிவு நிமிர்வு
பழக்கிளைகளின் குனிவு உயர்வு

பச்சை நிற வேளாண்மை இளமை
மஞ்சள் நிற வேளாண்மை முதுமை
தலை குனிந்த நெற்கதிர்கள் நிறைவு
பழங்களும் அதுபோலதான் செறிவு

முட்டையிட்ட பேடு குறுக்குத்தான்
ஓலைக் கூந்தலை குண்டியில் தட்டி
பேடுவை ஓடவிட்டால் சரி
சேவல் கூவி ஆடிக்காட்டும் சரசம்!

- அன்புமன்

“திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்ற பட்டுக்கோட்டை கலியாணசுந்தரத்தின் கவிதை வரிகள் திருட்டுக்கு மட்டுமல்ல, பாலியல் வன்முறைக்கும் பொருந்தும்.

# பாலியல் வன்முறைகளை இல்லாதொழிப்பது ஆண்கள் கைகளிலேயே தங்கியுள்ளது

–சந்திரகாந்தா முருகானந்தன்

ஆம்! பாலியல் வன்முறைகள் ஒழிய வேண்டுமாயின், வன்முறையாளர்கள் திருந்திட வேண்டும். இதற்கான முயற்சியை சமூகம் மேற்கொள்ள வேண்டும். மனிதநேயமே பாலியல் வன்முறைக்கு முடிவு கட்டும்.

இன்றுபெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிரான பாலியல் வன்முறைகள் பரந்தளவில் அதிகரித்து வருகின்றன. தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் இவை தொடர்பான செய்திகள் ஊடகங்களில் வெளியாகின்றன. அதிலும் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் மனதை நெருட வைக்கின்றன. இவ்வாறான வன்முறைகள் வேலைக்கு அமர்த்தப்பட்ட இடங்களிலும், பயணங்களின் போதும் ஏற்படுவதை விட வீட்டுச் சூழ்நிலைகளிலும், பாடசாலைகளிலும் கணிசமாக ஏற்படுகின்றமை பல கேள்விகளை எழுப்பு கின்றன. ஒருவருக்கு பாதுகாப்பான இடம் வீடு தான். அதற்கு அடுத்தபடி பிள்ளைகளுக்கு பாதுகாப்பான இடம் பாடசாலை. ஆனால் இன்று பல பாலியல் துஷ்பிரயோகங்கள் இவ்விரு இடங்களிலுமே நிகழ் கின்றன. உறவினர்களும், ஆசிரியர்களும், பதின்மப் பருவ இளைஞர்களும் மூட பாலியல் துஷ்பிரயோகங் களில் ஈடுபடுகின்றனர். பெண்களையும், பெண் சிறார்களையும் சமத்துவமாக ஏற்றுக் கொள்ளாத நிலையே இவ்வாறான அநாகரிகமான வன்முறை களுக்கு காரணமாகும். பாலியல் ரீதியில் பெண்ணை அடக்கி, அவளது உரிமைகளைப் புறம் தள்ளி, ஆண்வர்க்கம் பெண்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதும், பெண்களையும், சிறுவர்களையும் போகப் பொருள் போல மதிப்பதும் வன்முறை மனப்பாங்கை ஆண்களிடையே வலுவடைய வைக்கின்றது எனலாம்.

ஆணாதிக்கத்தை வேரறுக்காத வரை, பாலியல் சமத்துவம் எட்டப்படாத வரை, எவ்வளவு தான் விழிப்புணர்வை ஏற்படுத்தினாலும் பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் எதிரான பாலியல் வன்முறைகள் குறைவடையப் போவதில்லை. பாலியல் வன்முறைகள் பற்றிய விழிப்பூட்டல் மற்றும் சிறுவர் பெண்கள் உரிமை பற்றிய தெளிவூட்டல் மூலம் பாலியல் வன்முறைகளைக் குறைக்கும் நடவடிக்கைகளை சில அமைப்புக்கள் முன்னெடுத்து வருகின்றன. சிறுவர் உரிமை தொடர்பான அறிவூட்டல், பெண்கள் பால் சமத்துவம் பற்றிய விழிப்பூட்டல் மூலம் ஆரோக்கியமான ஒரு நற்சமூகத்தை உருவாக்கும் முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன. அத்துடன் பெற்றோர் களின் கடமைகள்பொறுப்புக்கள் தொடர் பாகவும் பிள்ளைகளைத் தமது கண் காணிப்பில் வைத்திருப்பது பற்றியும் கூறப்படுகின்றது. இதற்கு மேலாக பாலியல் அறிவூட்டல் என்பது இன்றைய காலத்தின் தேவையாகும் அத்துடன் ஆண்சிறார்களை மனக் கட்டுப்பாடு உள்ளவர்களாகவும் வன்முறைகளால் ஏற்படக்கூடிய தீமைகளையும் பின்விளைவுகளையும் உணரக் கூடியவர்களாகவும் பெண் சிறார்களை மதிப்பவர்களாகவும் கண்ணியமானவர்களாகவும் வளர்த்தெடுக்க வேண்டும். அத்துடன் சிறுமிகளுக்கு வன்முறைகளின் பாதிப்பு, அதற்கு இடம்கொடுக்காது, சந்தர்ப்பம் அளிக்காது தப்பித்துக் கொள்ளும் வழிமுறைகளைப் புகட்டும் அதே வேளை இருபாலாருக்கும் ஒழுக்கம் பற்றியும், ஒழுக்கக் கட்டுப் பாடுகளை மீறாது பண்பாளர்களாக வாழவேண்டியது பற்றியும் எடுத்துரைக்க வேண்டும். ஐந்தில் பதிவது ஆயுள் வரை தொடரும் என்பார்கள் பெற்றோர்களின் அருகாமையும், நல் வழிகாட்டல்களும் எதிர்கால நற்பிரஜைகளை உருவாக்கும் வன்முறைகள் அற்ற பாலியல் வன்செயல்கள் அற்ற ஒரு சமூகம் இதனால் உருவாகும். இதில் ஆசிரியர்களின் வகிபாகமும் முக்கியமானதாகும்.

பாலியல் கல்வி இன்று காலத்தின் தேவை. பாலியல் கல்வி அறிவூட்டல் பற்றிய முரண்பாடான கருத்துக்கள் உண்டு. எமது காலாச்சாரம் பாலியல் விவகாரங்களை உரையாடுவதற்கு தடையாக உள்ளது. பாலியல் கல்வியூட்டலும் இதனால் தடுக்கப்படுகின்றது. பாடசாலை மட்டத்தில் பாலியல் கல்வி ஊட்டப்படுவ தானது எதிர்விளைவுகளைக் கொண்டு வந்து விடும் என சிலர் கூறி வருகின்றார்கள். அதாவது சிறுவர் களுக்கு தெரியாதவற்றை நாமே ஊட்டி விடுகின்றோம் என்று இவர்கள் மறுவளமாக சிந்திக்கின்றார்கள். ஆனால் இவர்களது கூற்று அர்த்தமற்றது. இன்றைய


தகவல் தொழில் நுட்ப உலகில் சிறுவர்கள் பாலியல் பற்றி அதிகமாக தெரிந்தே வைத்திருக்கின்றார்கள் . எனவே இது பற்றி அஞ்சுவதில் அர்த்தமில்லை. பாடசாலை மட்டத்தில் இவை தொடர்பான நல்லது கெட்டதுகளை நாம் எடுத்துரைக்கலாம். பாலியல் கட்டுப்பாடு அவசியம் என்பது பற்றியும் கட்டுப்பாடுகளை மீறுவதால் ஏற்படும் தீமைகள் பாதிப்புக்கள் பற்றியும் எடுத்துக் கூற முடியும். கல்வியின் பிரதான நோக்கம் ஒருவனை சமூகத்தில் நல்ல மனிதனான உருவாக்குவது தான். அந்த வகையில் வெறும் கல்வியையும் பட்டங்களையும் அதனூடாக பதவிகளையும் ஈட்டு வதையும் மட்டும் குறிக்கோளாகக் கொள்ளாமல் எதிர்கால சமூகத்தில் நல்லவனாக வாழ வழிவகுத்தலும் ஆசானின் கடமையாகும். அந்த வகையில் நவீன உலகில் பாலியல் கல்வியை அளவான மட்டத்தில் வழங்குதல் நல்ல விடயம்.

பாடசாலையில் பாலியல் கல்வி பற்றி குறிப்பிடுகின்ற வேளையில் வேலியே பயிரை மேய்வது போன்று ஒரு சில ஆசிரியர்களும் பாலியல் துஷ்பிர யோகங்களில் ஈடுபடுவது பற்றியும் கவலையுடன் குறிப்பிட வேண்டியுள்ளது. இந்த வெகுசில புல்லுருவிகளால் ஆசிரிய சமூகமே வெட்கித் தலை குனியும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் மாற்றம் தேவை. சக ஆசிரியர்கள் கண்டும் காணாமல் இருத்தல் ஆகாது.

எமது நாட்டில் கடந்த சில ஆண்டுகளில் பாலியல் துஷ்பிரயோகங்களும், பெண்கள் சிறுவர் களுக்கு எதிரான வன்முறைகளும் ஏன் அதிகரித்து வருகின்றன என்பதைப் பற்றி சிந்தித்தால் பல காரணங்கள் உள்ளமையை அவதானிக்கலாம். மூன்று தசாப்தங்களாக நீடித்த கொடிய யுத்தம் மக்களுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்பட்டதை அறிவோம். கட்டுபாடற்ற வன்முறைகளும், தட்டிக் கேட்க முடியாத பயங்கரவாத தடைச்சட்டமும், இனவாதமும் இணைந்து மக்கள் மனங்களை குரூரப்படுத்தியுள்ளது. இதன் காரணமாக போராடும் தரப்பினர் மாத்திரமன்றி சாதாரண பொது மக்களும் வன்முறைகளுக்கு பழக்கப்பட்டு உள்ளனர். போராளிகள் இருந்த காலத்தில் இருந்த சில கட்டுப்பாடுகளும் கூட தளர்வடைந்துள்ளன. இந்த நிலையில் விகாரப்பட்ட மனங்களில் குரூரசிந்தனைகள் மேலோங்கியுள்ளன.

இவற்றோடு உலகமயமாதல், தகவல் தொழில் நுட்பம், உல்லாசப் பயணத்துறை, எனப்பலவும் இணைந்து பாலியல் துஷ்பிரயோகங்களை அதிகரித் துள்ளன. இவற்றோடு சேர்ந்து சட்டம் ஒழுங்கின்மை யும், அரசியல் வாதிகளின் அடாவடித்தனங்களும், குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாமையும் வன்முறைகளை அதிகரிக்க வைத்துள்ளன.

அன்பு, மனித நேயம், ஜீவகாருண்யம் என்பன கொடுநாச யுத்தத்தால் கொள்ளையிடப்பட்டு விட்டமையால் மனித மனங்களில் மனிதமும் மரணித்துவிட்டது. வீதிக்கு வீதி கொலை செய்து வீசப்பட்டதைப்பார்த்தும், ஷெல் வீச்சுக்கள், விமானக் குண்டு வீச்சுக்கள் என்பவற்றால் உறவுகளை



இழந்ததும், இறுதியுத்தத்தில் கண் முன்னே குருதி ஆறு ஓடி பல பிணங்களைக் கண்டும் மனித மனங்கள் குழம்பிப் போய் விட்டன. இந்த நிலையில் இன்னமும் ஆறுதல் கிடைக்காத, தீர்வு கிட்டாத நிலையில் மனம் சலித்துப்போய் உள்ளனர். சட்டத்தின் மீது இருந்த பயமும் நம்பிக்கையும் குறைவடைந்துள்ளன. வாழ்வு பற்றிய நிச்சயமற்ற தன்மை, விசாரணையின்றி சிறைகளில் வாழுகின்ற அப்பாவிகள் ஒரு புறம், வறுமையில் வாடும் மக்கள் மறுபுறம் என மனிதர்கள் குழப்பம் அடைந்துள்ளார்கள்.

வாழ்க்கைச் செலவின் சுமையும், இதனால் ஏற்படும் குடும்ப சுமையும், இளைஞருக்கான வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழுக்க வரம்புகளை மீறிச் செயற்பட வைக்கிறது. பாலியல் வன்முறை களுக்கும், துஷ்பிரயோகங்களுக்கும் முடிவு ஏற்பட மனித மனங்களின் மனிதாபிமான மனிதநேயம் மிக்கதான மாற்றங்கள் அவசியமானதாகும்.

மூதூர் மொகமட் ராபி

# தூக்கணாங் குருவிகள்



"வாப்பா..! வாப்பா! உங்களைத் தேடி யாரோ வந்திருக்காங்க...எழும்புங்க!" கிணற்றுக்குள்ளிருந்து ஒலித்த ஷைனுக்குட்டியின் குரலைத் தொடர்ந்து யாரோ என்னைப் பலமாக உலுப்பியது போலிருந்தது.

"யா..யாரும்மா.. வந்திருக்கிறது?" கண்ணைத் திறக்காமலே கேட்டேன்.

இன்று விடுமுறை என்ற தைரியத்திலே இரவெல்லாம் டீவியில் லண்டன் ஒலிம்பிக்சும் இன்டர் நெற்றில் நாஸா றோவர்-க்யுரியோஸிட்டியின் செவ்வாய்த் தரையிறக்கமும் பார்த்துவிட்டுத் தூங்கச் சென்றிருந்தேன். திரும்பத்திரும்ப ஒரு நூறுதடவை யாவது செவ்வாயில் இறங்கியதால் ஒத்துழைக்க மறுத்த கண்களுடன் தட்டுத்தடுமாறி எழுந்து நின்றபோது எதிரிலிருந்த நிலைக்கண்ணாடியில் சற்றே உப்பியிருந்த முகத்துடன் தலைகலைந்த நான் தெரிந்தேன்.

"முன் ஹோல்ல இருக்கச் சொல்லும்மா அந்த அங்கிள் இந்தா வாறேன்" என்றபடி கிச்சன் குழாயைத் திறந்து முகத்தில் தண்ணீரை விசிறியடித்தேன். " அது அங்க்கிள் இல்ல வாப்பா.. ஒரு ஆன்ரி தான் வந்திருக்காங்க! அவங்கதான் என்னோடு சேர்ந்து உள்ள வந்து உங்களைப் போட்டு ஆட்டியாட்டி எழுப்பிட்டு அந்தா வெளியே போய் நிக்கிறாங்க!" கையிலே பாதி தின்ற புதிய வகை சொக்லேட்டுடன் கலகலவென்று சிரித்தாள் ஷைனுக்குட்டி.

"ஆன்ரியா..? பெட்றூமுக்குள்ளேயே வந்து தொட்டு எழுப்புகிறளவு யார்டா அது?"

வாய்க்குள்ளெடுத்த தண்ணீரை கொப்புளிக்க மறந்து சில வினாடிகள் திகைத்துப்போய் நின்றவன் அடுத்த நிமிடத்தில் சட்டெனப் பல்துலக்கி முகம் கழுவி விரல்களால் தலைவாரி கையில் கிடைத்த டீ சேர்ட்டை மாட்டிக் கொண்டு முன்னறைக்கு விரைந்து சென்று பார்த்தேன்.

அங்கு போர்ட்டிக்கோவில் தொங்கிய சிறு பூந்தொட்டியொன்றை ஆராய்ந்தபடி நின்றிருந்தாள் வெகு ஸ்டைலாக ஆடையணிந்த ஓர் அழகிய இளம் பெண். என்னைப் பார்த்ததும் நிமிர்ந்தவள் சட்டெனப் புன்னகைத்தாள். வெகுசுத்தமான அவளது அழகிய பல்வரிசையின் பளிச்சீடு எனது மூளையின் ஞாபக இடுக்குகளுக்குள் வேகமாகப் புகுந்து பல வருடங் களைப் பின்தள்ளிவிட்டுத் திரும்பிய அந்த மில்லி செக்கன்களின் முடிவிலே,

"ஹேய்...! நொய்லீன்!" என்று என்னை மறந்து கூவினேன். "வா! வா நொய்லீன்! இது எப்ப.. எப்ப வந்த நீ..?"

"ம்! பரவாயில்லையே, என்ட பேராவது நினைவிருக்குதே...!" என்றவாறு அந்தரத்திலே தொங்கிச் சுழன்று கொண்டிருந்த பிரம்புக்கூடைக் கதிரையிலேறி அமர்ந்தாள் அவள். மார்புச்சட்டை யிலே ஊஞ்சலாடிக்கொண்டிருந்த குளிர்க் கண்ணாடியை ஒரு தடவை துடைத்து அணிந்து பார்த்துவிட்டு நெற்றிக்கு மேலே தள்ளிவிட்டாள்.

அந்த இடமே அவளால் பளிச்சென்று

தோன்றியது எனக்கு. அவள் வந்திருப்பதை என்னால் நம்பவே முடியவில்லை. ஷைனுவைப் பிடித்துத் தன் மடியிலே அமர்த்தி தனது கைப்பையைத் திறந்து மற்றொரு சொக்லேட் ஒன்றைக் கொடுத்தாள்.

"என்ன பேர், பிள்ளைக்கு?"

"ஷைனப் குட்டி!" என்றாள் ஷைனப், நான் சொல்வதற்குள் முந்திக்கொண்டு.

"ஆ! ஷைனப்குட்டியா? ஓகோ! குட்டியும் ஒங்கட பேர்தானா..?"

"அது வாப்பா மட்டும் கூப்பிடுற செல்லப்பேர்... உங்களுக்கும் அப்பிடி பேர் இருக்கா..?"

"ம்! இருக்கே...! "வயலின்" என்று... அதுவும் உங்க வாப்பாதான் செல்லமா முந்தி எப்பவோ வச்சது எனக்கு தெரியுமா?" என்றபடி குறும்பாக என்னைப் பார்த்தாள் நொயிலின்.

" அட! அதெல்லாம் இன்னும் நீ மறக்கல்லயா? அதுசரி, வந்ததும் வராததுமா இவளைப் பழக்கம் பிடிச்சு உள்ளயே வந்து என்னை எழுப்பத் தெரியுது...ஆனா அவள்ட பேரைக் கேட்கத் தெரியலியா?"

"அட! நான் வந்து எழுப்பினதைச் சொல்லிட்டாளா.. இந்த க்யூட் ஷைனுக்குட்டி?" என்று கன்னத்தைக் கிள்ளி, "யு ஆர் ஸோ நோட்டி யா! குழப்படியா இவ?"

"ஆமாம்! அவள்ட அக்கா மாதிரியே!" என்றேன் லேசாகக் கண்ணடித்து. ஆனால் அதைக் கவனிக்கத் தவறியதிலே எனது ஹாஸ்யம் புரியவில்லை அவளுக்கு.

"எனக்கென்டா.. ஷைனுக்குட்டி அப்படியே அம்மா மாதிரிதான் தெரியுறா.. அம்மாவை அவட சின்ன வயசுப்போட்டோவுல பார்க்கிற மாதிரியே இருக்கு.." என்றவள் சட்டென, "நான்.. அவங்களை அப்பிடிக் கூப்பிடலாம்தானே..?" என்று கேட்டாள் அவள்.

"ஹேய் டோன்ட் பி ஸில்லி நொய்லீன்..! ஷீ இஸ் ஓல்வேய்ஸ் யுவர் மதர்!"

"அதுசரி... பிறகு எப்படியிருக்கீங்க..?" ஷைனப் அவள் மடியிலிருந்து இறங்கி வீட்டுக்குள் ஓடியதும் புன்னகை மாறாமலே கேட்டாள்.

நான் பதிலேதும் கூறவில்லை.

நொயிலின் எனது இளைய தங்கையின் வகுப்புத்தோழி. ஊரிலே எங்களது வீட்டுக்கு அருகிலே தான் நொயிலினின் குடும்பமும் குடியிருந்தது. வெளியூரில் தங்கிப் படித்துக்கொண்டிருந்த நான் இரண்டாவது தடவை உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு முடிவுக்குக் காத்திருந்த காலத்தில் எனக்கு அறிமுக மானவள்தான் நொயிலின். அப்போது இருந்ததற்குச் சற்று மினுமினுப்பாய் பூசினாற்போல இருந்தாள். ஆனால் அந்த வசீகரமான புன்னகை மட்டுமே இன்னும் பிடிவாதமாக, "நான் பழைய நொயிலின்தான்" என்றது.

உடனே, "இந்த நொயிலின் என்னுடைய பழைய காதலி இவளைக் காதலித்து கைவிட்டு விட்டேன். பல வருடங்களுக்குப் பிறகு இப்போது என்னைத் தேடி வந்திருக்கின்றாள்.." என்று நீங்களே ஒரு கதை பண்ணிவிடாதீர்கள். ஏனென்றால் இந்தக் கதையின் இறுதியிலே ஓர் உண்மையை நான் உங்களுக்கு...

"என்ன.. அப்படியே பாத்திட்டேயிருக்கீங்க. பதிலே சொல்ல மாட்டீங்களா..? ஓ! நான் இங்க வருவேன் என்று எதிர்பார்க்கல இல்ல?"

"இல்ல..! சத்தியமா இல்ல நொய்லின்! நீதான் திரும்பவும் கனடாவுக்குப் போயிட்டியே.. நீ எப்ப வந்தது? எங்கதான் இருக்கிறாய் இப்ப?" எனக்கு எதை முதலில் கேட்பது என்றே தெரியவில்லை.

"தேங்க்யூ வெரி மச்! அதுசரி! இன்னுமொரு கேள்வி மிச்சமிருக்குதே... "எப்பிடி வந்தாய்" என்று..? அதையும் கேட்டுவிடுங்களேன்!" அவளது பழைய குறும்பு இன்னும் போகவேயில்லை.

"சரி, அதையும் நான் கேட்டதாய் நினைச்சு பதிலைச் சொல்லு!"

"ஓகே, போன ஏப்ரல்லதான் நானும் அப்பாவும் கனடாவுலருந்து வந்தோம். தம்பி அங்கேயேதான் இருக்கிறான். இப்ப அவன் உங்களோட கோபமில்ல.. அவனுக்கு உங்க விஷயம் எல்லாம் தெரியும்.. உங்களை எப்பவும் நினைச்சுக் கதைச்சுட்டே இருப்பான் அவன். நாங்க இப்ப கம்பளையில இருக்கிற மேபிள் மாமி வீட்லதான் தற்காலிகமாக தங்கி இருக்கிறோம். நான் போன வியாழக்கிழமை பின்னேரம்தான் கம்பளையிலருந்து ஒருவேலையா மூதூருக்கு வந்தேன் அத்தோட சில முக்கியமான முடிவுகளையும் நான் எடுக்க வேண்டியிருந்த..."

" அப்ப நீ பாத்ததுக்கு இப்ப மூதூர் எப்படியிருக்கு நொய்லீன்?"

"அதையேன் கேட்கிறீங்க? பஸ்ஸில போய் மெயின்ரோட்ல போய் இறங்கினா.. என்ட கர்த்தரே! எங்கட சொந்தக்காரங்கள் இருக்கிற இடங்களையே த்ரீவீல்காரங்களுக்கிட்ட கேட்டுத்தான் தெரிஞ்சு கிட்டேன் என்டா பாருங்க.. அந்த ஆஸ்பத்திரி ரோட்டை எவ்வளவு அகலமா ஆக்கிட்டாங்க.. புதுசா நெறைய கடையெல்லாம் வந்து... மூதூர் இப்ப எப்படி மாறிப்போயிருக்கு பாத்தீங்களா... ஷகீ..ப்.. ப்..?" என்றவள் சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டு நிறுத்தி விட்டாள்.

"நோ ப்ரொப்ளம் ஐ ம் ஸ்டில் யுவர் ஷகீப்!"

"தேங்க்யூ ஷகீ, ரெண்டு மூணுநாள் அங்க உங்க வீட்டுக்குப் பக்கத்துல இருந்தாங்களே மனோ ரஞ்சி அக்கா.. அவங்க வீட்ல தங்கிட்டு இப்ப காலையில பஸ் ஏறி கம்பளைக்கு போறதுக்காகத்தான் ட்றிங்கோ வந்தேன்.. வழியில இங்க வந்து இறங்கினேன். நேற்று டவுனுக்கு வந்த நேரம் தீபன்

அங்கிள்தான் உங்க அட்ரஸ்ஸ யாரிட்டயோ கேட்டு வாங்கிட்டு வந்தாரு.. அப்பாவுக்கு பைபாஸ் செய்ய வேண்டியிருந்திச்சு.. இங்க மாதிரி இல்ல அங்க கனடாவுல ஹொஸ்பிடல் செலவு.. அதனாலதான் இங்கயே வந்து செய்த நாங்கள்.. போன மாதம் 23ம் திகதிதான் கலம்ப்ல அப்பல்லோவுல செய்தது..." சொல்லிக் கொண்டே சென்றவளை,

" ஏன் நொய்லீன், அப்பாவோட ஒப்பரேஷனப் பத்தி எனக்கு நீங்கயெல்லாம் எதுவும் சொல்லவே இல்ல..?" என்றேன் இடைமறித்து.

"அட! சொல்லியிருந்தா மட்டும் என்ன.. உங்க வில்லனைப் பார்க்க ஓடோடி வந்திருப்பீங்களோ..?" மீண்டும் கலகலத்தாள்.

"நொய்லீன் ப்ளீஸ்! இப்ப எப்படி இருக்கு அவருக்கு?"

"ம்! அவர் நல்லாத்தான் இருக்காரு.. பரவாயில்லயே.. இவ்வளவு நடந்தும் பாசம் இருக்கே அவர்மேல! அவரோட இடது கால்ல இருந்துதான் ஒபரேஷனுக்கு தேவையான வெயின் எடுத்தது... அதால நடக்கிறது கொஞ்சம் சிரமம்.. மாதத்துக்கு ஒருதடவை கலம்ப்புக்கு க்ளினிக் போய் வரணும். மம்..! நாங்க கனடாவுல கஷ்டப்பட்டு உழைச்சதெல்லாம் வைத்தியத்துக்கே போகுது..."

"சரி.. உங்களையெல்லாம் பெத்து வளர்த்த அப்பாவுக்குத்தானே செய்றீங்க...?"

"ம்ம்! காசை மட்டும்தான் அள்ளி இறைக்கிறோம்...! ஆனாலும் பொம்பிளைப் பிள்ளை என்னால மட்டும் அவருக்கு வேண்டிய எல்லாத்தையுமே செய்ய முடியல.. தெரியுமா? எவ்வளவுதான் நான் மேபிள் மாமி மற்ற எல்லாரும் கவனிச்சிட்டாலும் இப்பல்லாம், "அடியே! உங்கட அம்மா அவனோட.. ஐ ம் ஸொறி டு ஸே திஸ் ஷக்கீப்.." என்று சொல்லவந்ததை நிறுத்தி விட்டாள்.

"பரவாயில்ல.. நீ சொல்லு நொய்லீன்"

"உங்க அம்மா அவனோட போய்த்தொலை யிறதுக்கு முந்தியே நான் போய்ச் சேந்திருக்கலாம்டீ!" என்று அடிக்கடி கத்திறாரு தெரியுமா. எங்களால என்ன செய்றதுண்டே தெரியல்ல"

"அவரு நெனைக்கிறதுலயும்..நியாயம் இருக்குத்தானே..?"

"நான் மட்டும் இல்லை என்று சொன்னேனா ஷகீப்..? வயசுபோன காலத்தில துணை இல்லாமல் போனதுதான் அவருக்குள்ள பிரச்சினையே... அதைத் தான் கோபமா எங்க மேலே கத்தித் தீர்க்கிறாரு!"

சிறிது நேரம் நாங்கள் இருவரும் பேசிக் கொள்ளவில்லை. ஷைனப் முற்றத்தில் இறங்கிச் சைக்கிளை வைத்து தள்ளி விளையாடிக் கொண்டிருக்க மாமரத்தின் கிளையொன்றிலிருந்து பச்சைக்குருவி ஒன்று, "கொட்றுாாா.... கொட்றுாாா...." என்றது.

"உடம்புக்கு முடியாமப்போகிற நேரம்தான் ஒரு ஆம்பிளைக்குத் தன்ட துணையோட அருமையெல்லாம் புரியும் போல.. இளம் வயதில அதைப் பத்தியெல்லாம் யோசிக்கவே மாட்டாங்க." என்று மீண்டும் பேச்சை ஆரம்பித்தேன்.

"இப்ப என்ன உங்களுக்கு... அப்பாவைக் குத்திக் காட்டணும் அதுதானே?" சட்டென அவளது உதடுகள் துடிக்க ஆரம்பித்தன. அதுவரை இருந்த கலகலப்பான முகம் மெல்ல வாடிப்போக ஆரம்பித்தது. பார்வையை வேறு எங்கோ திருப்பிக் கொண்டாள்.

"ஹேய்.. வாட்ஸ் தீஸ்? ஐ ம் ஸொறி நொய்லீன்.. ஐ ரியலி டிடுண்ட் மீன் தட். இவ்வளவு நேரம் எவ்வளவு சந்தோஷமாகப் பேசிட்டிருந் தோம்... இதுதான் இந்த விசயத்தையே.."

"ஓகே! ஐம் ஓல்ரைட்..! விடுங்க ஷகீப்...! நீங்க என்னதான் செய்வீங்க..? அவருக்கு நல்லாவே வேணும்.. உங்களை எப்படியெல்லாம் அவமானப் படுத்தினாரு.. அந்தநேரம் நாங்கல்லாம் சின்னவங்க.. உண்மையில என்னதான் நடக்குது என்று அப்பல்லாம் எங்களுக்குத் தெரியவே இல்ல.." அவள் தொடர்ந்து பேசியவாறே இருந்தாள்.

"அப்பாவோட வீண் அவமானப்படுத்தலை யும் தொல்லைகளையும் பொறுக்காமத்தானே அன்டைக்கு நாலுமாதம் வாயும் வயிறுமா இருந்த எங்க அம்மா துணிச்சலா யாராலயும் நெனச்சிக்கூடப் பார்க்க இயலாத அந்த முடிவை எடுத்தாங்க. ஆனால் பாவம் நீங்கதான்...! உங்க படிப்பு.. எதிர்காலத்தைக் கூட யோசிக்காம..! சே! அப்பல்லாம் அப்பாவோட சேர்ந்து நாங்க கூட உங்களைத்தான் ஷகீப் தப்பா நினைச்சோம்.. எங்களைச் சின்னப் பிள்ளைகள் என்று நினைச்சு நீங்ககூட உங்க நியாயத்தைக் சொல்லவே யில்ல..." அவள் பார்வை எங்கோ வெறித்தபடி இருந்தது.

"........................."

"அப்பா உங்களை அவமானப்படுத்திறதா நெனைச்சிட்டு உண்மையில பிள்ளைகள் எங்களைத் தான் அவமானப்படுத்தினாரு.. இப்ப இருக்கிற அறிவு அந்த நேரம் எனக்கெல்லாம் இருந்திருந்தா....!" அவள் கண்களின் ஓரத்திலே லேசாக நீர் துளிர்த்தது.

வெளியே இலேசான மழை தூற ஆரம்பித்து ஷைனப்பை நான் உள்ளே கூப்பிடுவதற்குள் சட்டென ஓய்ந்தது. புதுமழையின் ஈரலிப்பில் எழுந்த மண் வாசனை நாசியைத் துளைத்தது.

"இட்ஸ் ஓகே நொய்லீன்.. அதெல்லாம் முடிஞ்சுபோன கதை.. லெட்ஸ் சேன்ஜ் த டொப்பிக்? இப்ப என்னவாவது குடிக்கிறியா? கூல் ஓ ஹொட்?"

"சம்திங் கூல் இஸ் பெட்டர்! அதுசரி, நீங்க ரமழான் நோன்பு இல்லயா ஷகீப்?"

"ஹேய்! ஏதும் குடிக்கிறியான்டு நான்

கேட்டது உனக்குத்தான்! ஷைனப் குட்டி! இங்க வாங்கம்மா, ரஸாக் மச்சான்ட கடைல ஆன்ரிக்கு கூல்ட்ரிங்ஸ் ஒண்டு வாங்கிட்டு வாறீங்களாடா"

"வாப்பா...எனக்கு ஜெலியும் வேணும்..?"

"சரி, டொக்டர் மாமா நேற்று என்ன சொன்னவருண்டு தெரியும்தானே...? நிறைய வேணாம்.. கொஞ்சம் நில்லுங்க. நொயில், வாட்ஸ் யுவர் பராண்ட்... ஸெவனப் ஓ ஸ்ப்ரைட்..?"

"பாத்தீங்களா ஷகீப்... எல்லாமே மறந்திட்டீங்க நீங்க?"

" ஓ! ஐ ம் ஸொறி.. ஐ ரியலி போர்கொட் தட்! அது இங்க உள்ள கடைகள்ல இருக்காது. சந்திக்குத்தான் போகணும் ஷைனுவோட பேசிட்டேயிரு..இதோ நானே வாங்கிட்டு வர்ரேன்..ஆனா என்ன இப்படியே கடைக்கு நான் போனால் எல்லாருமே பயந்திடுவாங்க.." என்றபடி உள்ளே சென்று குளித்து முடித்து சேர்ட் டெனிம் ஜீன்ஸை மாட்டிக்கொண்டு வந்து நான் பைக்கை உதைத்த போது,

"யூ ரியலி லுக் வெரி ஸ்மாட் இன் திஸ் ப்ளு ட்ரெஸ் ஷகீ!" என்றாள் நொயிலின்.

***

அனுராதபுரச் சந்தியிலிருந்த கடைகள் முழுவதும் சல்லடைபோட்டும் தேடியது கிடைக்கவே யில்லை எனக்கு.

வேறுவழியின்றி நான்கு கிலோமீற்றரில் இருக்கும் ட்றின்கோ டவுனை நோக்கி பைக்கில் பறந்தேன். போகும் வழியில் அபயபுரத்தைத் தாண்டியதும் நான் வழமையாக தயிர் வாங்கும் ஒரு சிறிய பெட்டிக்கடை ஞாபகம் வந்தது. நொயிலினுக்குத் தயிரென்றால் உயிர். டவுனுக்குப்போய் வரும்போது வாங்கிக் கொள்ளலாம் என்று யோசித்தவன் சில வேளை வரும்போது தயிர் விற்று முடிந்துவிடும் என்ப தால் சட்டென அந்தக் கடையோரமாக பைக்கை நிறுத்தினேன்.

"ஆ! இஞ்சினியர் மல்லி! கொஹாட்டத மே உதே பாந்தர? அத நிவாடு தவஸ நேத?" வெற்றிலைக் காவியேறிய பற்கள் பளிச்சிடக் கேட்டார் அவரிடம் தயிர் வாங்கிச் செல்வதாலேயே அறிமுகமாகிப்போன கடைக்காரர் சுனில் ஐயா.

நான் வந்த விசயத்தைச் சுருக்கமாகச் சொன்னேன்.

"ஹொந்த வெலாவ! ஏக்க மே ஹரிய எத்தி மஹத்தயோ...!" என்றவாறு உள்ளே சென்று ப்ரிட்ஜைத் திறந்து இரண்டு போத்தல்களை எடுத்துவைத்தார். அவற்றைப் பார்த்ததும்தான் எனக்கு உயிர் வந்தது. மிகுந்த சந்தோஷத்துடன் அவற்றுடன் தயிரும் வாங்கிக்கொண்டு பைக்கிலேறி ஸ்டார்ட் செய்தபோது,

"அஸ்ஸலாமு அலைக்கும் மச்சான்!" என்றது பரிச்சயமான ஒரு குரல். அது வந்த திசையிலே நின்றிருந்தான் அஸ்லம், என் பள்ளிக்காலத்து பால்ய நண்பன். இருவரும் சிறுவயதிலிருந்தே ஒருவரோடு ஒருவர் மனம்விட்டுப் பேசிப் பழகுபவர்கள். இப்போதும் கூட விடாமல் தொடரும் நட்பு எங்களுடையது.

அஸ்லம் இப்போது திருகோணமலை நகரிலுள்ள பிரபல நகைக்கடை ஒன்றிலே மேலாளராக வேலை செய்கின்றான். வார இறுதியிலே மட்டும் ஒரு தடவை ஊருக்குச் சென்று திரும்புவது அவன் வழமை. நகரிலுள்ள கடைத்தெருவுக்கு நான் ஏதாவது வேலை யாகச் செல்லும்போதெல்லாம் அவனது நகைக்கடை யிலேசந்தித்து இருவரும்மனம்விட்டுப்பேசிக்கொள்வோம்.

"என்னடா! ஞாயிற்றுக்கிழமையில இங்க நிக்கிறா? சனிக்கிழமை இரவே மனிசியைப் பார்க்க பஸ் ஏறி ஓடிருவியே.. என்ன வீட்ல ஏதும் சண்டையா?" என்றேன் நக்கலாக.

"இல்லடா மச்சான், இரவு கடையில கணக்குக் கூட்டினதுல ஒரு ஆயிரம் ரூபாய் குறைஞ்சிட்டுதெண்டு கணக்கைச் சரி செய்யும் வரைக்கும் போக விடவே மாட்டனுண்டாண்டா அந்த எருமை.. கடைசியில ஊருக்குப்போற கடைசி பஸ்ஸையும் விட்டுட்டன்டா.." என்றான் பரிதாபமாக.

"யாரு உன்ட அந்த முதலாளியா..? அவந்தான் காசு மட்டுந்தான் வாழ்க்கையென்று நெனைக்கிற கூட்டத்துல உள்ளவன்தானே... அப்பிடித்தான் இருப்பான்.. சரி, வந்து ஏறு என்ட வீட்டுக்குப் போயிட்டுப் போகலாம். வாடா! வா! என் வீட்டடியிலேயே நின்று மூதூர் பஸ்ஸைப் பிடிக்கலாம்"

"ஹெல்மெட்டும் இல்ல.. வேணாண்டா மச்சான், அதோட நான் இப்பவே மூதூருக்குப் போயா கணுண்டா.. இன்னொரு நாள் வாறேன்" என்று மறுத்தவன், "அது சரி, என்னடா தயிர், நெல்லி-ரச மெல்லாம் வாங்கிட்டுப் போறியே.. நோன்பு திறக்கவா? இந்த விடியக் காலத்திலேயே..?"

வீதியோரமாக மோட்டார் சைக்கிளுடன் போக்குவரத்துப் பொலீஸ் அதிகாரிகள் சிலர் நின்றிருக்க அந்தப்பகுதி முழுவதும் புகையைக் கக்கிய படி இரைச்சலுடன் கடந்து சென்றது ஓர் இராணுவ கனரக வாகனம்.

"வீட்ல ஒரு கெஸ்ட் வந்திருக்கான்டா மச்சான்"

"டேய் சரியாச் சொல்லு! கெஸ்ட் வந்திருக் கானா வந்திருக்காவா? யாருக்கிட்ட மறைக்கிறாய் நீ? உன்ட பழைய ஆள் நொயிலின்தானே? கனடாப் பார்ட்டி!" என்றான் பாவி குறும்புடன்.

"டே....ய்ய்!" என்று கூவினேன் மயக்கம் வராத குறையாக. "உனக்கு எப்பிடிடா இது தெரியும்?" ஆச்சரியத்திலே பைக்கின் ஸ்டார்ட்டைக்கூட நிறுத்தி விட்டேன்.

"அவளுக்கு இஞ்ச நீ இருக்கிற அட்ரஸ்ஸைக் குடுத்து விட்டதே நான்தான் தெரியுமா?" என்றான்

சிரித்தபடி. "என்னடா இப்படி முழிக்கிறா..? நேத்து மத்தியானம் நம்மட நிக்கலஸ் விதானையார்ட மகன் தீபன் தெரியுந்தானே.. அவன் வெளிநாட்டு நகைகள் கொஞ்சம் விக்கிறதுக்கு எடுத்துக்கிட்டு பசார்ல என்ட கடைக்குத்தான்டா வந்தான். அவ்வளவும் பெஸ்ட் தங்கம் மச்சான்.. ஏதுடா இவ்வளவு நகை என்று விசாரிச்சதுல நொயிலின் கனடாவிலிருந்து வந்த விசயத்தைச் சொன்னான். நான் உனக்கு விசயத்தைச் சொல்றதுக்கு கோல் அடிச்சேன். ஓஃப்ல இருந்திச்சுடா உன்ட போன்.. பிறகு நாந்தான் பசார்ல கூடுதலாப் பேரம் பேசி வித்துக் காசு எடுத்துக் குடுத்தேன் தெரியுமா?"

"ஓ! அப்பிடியா.. சேதி?"

"என்ன அப்பிடியா? அப்ப உனக்கிட்ட இதைப்பத்தியே அவள் சொல்லவே இல்லயாடா..?"

"அதெல்லாம் சொன்னதுதான் நாந்தான் சரியாக் கேட்கல்லபோல.. சரிடா! நான் வாறேன்" என்று பைக்கை மீண்டும் ஸ்டார்ட் செய்து புறப்பட்டத் தயாரானவுடன், "கொஞ்சமிரு! கொஞ்சமிரு..!!" என்று என்னை மறித்துப் பிடித்துக் கொண்டான் அஸ்லம்.

"டேய் ஷகீப், அவள்ற குடும்பத்துக்காக எவ்வளவு விசயங்களை இண்டைக்கு வரைக்கும் பொறுத்திட்டிருந்த நீ.. இப்பிடி ரெண்டு குடும்ப ஆதரவு மில்லாம இன்னும் எத்தனை காலத்துக்குத்தான்டா உன்ன வாப்பாண்டு கூப்பட்டுக்கிட்டிருக்கிற அந்தச் சின்னப்பிள்ளையையும் வச்சிட்டு நீ இப்பிடியே இருப்பாய்? இப்பதான் எல்லாமே க்ளியர்தானே.. நொய்லினை ஒருதடவை கேட்டுப் பாரேண்டா.. உனக்கு அவள்மேல இருக்கிற விருப்பத்தை மறைக்க நினைக்காத... அது உனக்குத்தான் பாதகமா முடியும்.. யாரோ வேற ஆக்களுக்கிட்ட சொல்ற மாதிரி எல்லாம் தெரிந்த எனக்கிட்டயும் பொய் சொல்லுவியாடா...?"

என்னால் எதுவுமே பேச முடியவில்லை.

அவன் சொல்வது உண்மைதான். அந்த நாட்களிலே ஊரில் நாங்கள் ஒன்றாக இருந்தபோது நொயிலினின் குடும்பம் தொடர்பாக நடந்த சகல விடயங்களையும் எனது உற்ற நண்பனாக இருந்த இந்த அஸ்லம் ஒருவனிடம்தான் பகிர்ந்து கொண்டிருந்தேன்.

நொயிலின் குடும்பத்தினர் எங்கள் ஊருக்கு வந்த காலப்பகுதியில் நான் எனது வீட்டார்களுடன் சிறுசிறு பிரச்சினைகள் பட்டுக்கொண்டிருந்தேன். குறிப்பாக உயர்தரக் கல்வி தொடர்பாக எனக்கும் வாப்பாவுக்கும் அடிக்கடி தர்க்கம் ஏற்படுவதும் அதன் காரணமாக நான் மனமுறிவு கொள்வதும் வழமையானதாக இருந்து வந்தது. அதனால் விளைந்த மனக்கசப்பிலே நான் வீட்டிலே இருக்கப் பிடிக்காமலும் அதேவேளை வெளியிலே எங்கேயாவது சென்று நண்பர்களுடன் பொழுதைக் கழிக்க இயலாத நிலையிலும் குமுறிக் கொண்டிருந்தேன்.

அந்தவேளையிலே நொயிலின் குடும்பத்தி னரின் வரவு எனக்குப் புதிய உணர்வைத் தந்தது. குறிப்பாக, நொயிலினின் தாய் ஸ்டெல்லா அக்காவின் கனிவான தோற்றமும் அனுசரணையான குணங்களும் எனக்கு மட்டுமன்றி எங்கள் குடும்பத்தினருக்கும் அயலவர்களுக்கும் கூடப் பிடித்துப்போனது. ஸ்டெல்லா அக்கா அவரது பிள்ளைகளை எப்படி நேசித்தாரோ அதே போலத்தான் என்னையும் நேசித்தார். எனது உறவுகளின் தர்க்கங்களால் சலிப்படைந்திருந்த எனக்கு அவரின் பாசம் பூட்டிக்கிடந்த ஓர் இருட்டறைக்குள்ளே திடீரென புதிய சாரளம் ஒன்றைத் திறந்து விட்டதைப் போலிருந்தது.

ஸ்டெல்லா அக்காவும் அவரது இருபிள்ளை களும் எங்கள் அனைவரினதும் நட்புக்குரியவர் களானார்கள். முதலில் எனக்கு அறிமுகமானவன் என்னைவிட எட்டு வயது குறைந்த நொயிலினின் தம்பி சில்வஸ்டர்தான். அவ்வாறே எனது தங்கைக்கு நொயிலினும் தாய்க்கு ஸ்டெல்லா அக்காவும் நண்பர்களாகினர். ஆனாலும் வியாபார முயற்சிகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்தவரான எனது வாப்பாவும் நில அளவைத் திணைக்களத்திலே வேலை செய்த நொயிலினின் அப்பா ஜோர்ஜ் ஸேர்வையரும் தத்தமது வீட்டில் தங்கியிருப்பது மிகவும் குறைவாக இருந்தமை யால் அவர்களுக்கிடையே பெரிதாக நட்புறவு ஏற்பட வழியில்லாமல் போயிற்று.

எனக்கும் சில்வஸ்டருக்கும் வயது வித்தியாசம் பெரிதாக இருந்தபோதிலும் கிரிக்கட்டில் இருந்த அதீத ஆர்வம் இருவரையும் ஒன்று சேர்த்து வைத்திருந்தது. அவர்கள் வீட்டிலிருந்த பெரிய தொலைக்காட்சியில் போட்டிகளைக் கண்டு களிப்பதற் காக அவனோடு அங்கு செல்வதிலே ஆரம்பித்து மெல்ல எனது வீட்டுக்கு அவனும் அவனது வீட்டுக்கு நானும் சென்று வருவது வாடிக்கையாகிப்போனது. நாளடை விலே இந்த நெருக்கம் வலுப்பட்டு நான் எனது வீட்டி லிருப்பதே மிகவும் குறைந்து போனது. சொல்லப் போனால் சாப்பிடும் வேளை உறங்கும் வேளை தவிர மற்ற நேரங்களிலெல்லாம் ஸ்டெல்லா அக்கா வீட்டு டீவியில் கிரிக்கட் மெட்ச் அல்லது வேறு ஏதாவது நிகழ்ச்சிகள் பார்த்துக்கொண்டு கிடக்கலானேன்.

அவர்கள் வீட்டிலிருக்கும் வேளையிலே சில்வஸ்டருக்கும் நொயிலினுக்கும் அவர்களது வீட்டுப் பாடங்களைச் செய்வதற்கு நான் உதவ ஆரம்பித்தேன். இதனால் அவர்களின் பாடசாலை அலகுப்பரீட்சைப் புள்ளிகளிலே கணிசமான அதிகரிப்பு இருந்தது. இதன் காரணமாக ஸ்டெல்லா அக்காவுக்கு என்மீது இருந்த கரிசனை மேலும் உயர்ந்துவிட்டிருந்தது. அதுமட்டு மல்லாது நான் அவர்களது வீட்டிலே அதிகநேரம் செலவிடுவதையும் அவர் பெரிதும் விரும்பியிருந்தார்.

நொயிலினின் அப்பா ஜோர்ஜ் ஸேர்வையர் தனது தொழில் நிமித்தம் அடிக்கடி வெளியூர் செல்ல

வேண்டியிருந்தது. இதனால் மாதத்தில் அரைவாசிக் காலம் அவரால் வீட்டில் இருக்க முடிவதில்லை. அவர் இல்லாத நாட்களிலே நானும் எனது இளைய தங்கையும்தான் நொயிலின் வீட்டிலே துணைக்குச் சென்று தங்கியிருப்பதுண்டு.

பொதுவாக வயதுக்கு வந்த பெண் பிள்ளைகள் இருக்கும் வீடுகளுக்கு அவசியமில்லாமல் அடிக்கடி போகக்கூடாது தங்கக்கூடாது என்பது எனது உம்மாவின் கண்டிப்பான சட்டம். ஆனால் எங்கள் இரு குடும்பங்களுக்கிடையிலே உருவான அந்நியோன்னியம் காரணமாக ஸ்டெல்லா அக்கா வீட்டில் தங்குவதிலேமட்டும் அந்த விதி எனக்குச் சற்றுத் தளர்த்தப்பட்டிருந்தது. நானும் அந்தச் சலுகைக்கு பங்கம் ஏற்படாதவாறுதான் நடந்து கொண்டிருந்தேன். ஆனாலும் விதி வேறு வடிவத்தில் என்னைக் குறிவைத்திருந்ததை அப்போது நான் அறிந்திருக்கவில்லை.

அப்போது நொயிலினின் வயது வெறும் 14 தான். அவள் எல்லோருடனும் சகஜமாகவே பழகக் கூடியவள் என்பதால் என்னோடும் அதேபோலவே வெகு இயல்பாக நட்புடன் பழக ஆரம்பித்தாள். எங்கள் இருவருக்குமிடையிலே கலந்துரையாடுவதற்கு பொதுவான பல விடயங்கள் இருந்த காரணத்தால் காலப்போக்கிலே அந்த நட்பு மேலும் வலுப்பெற்றது. அந்த நாட்களிலே எங்கள் இருவருக்கும் இடையில் சிநேகிதத்தையும் மீறிய பருவவயதுக்குரிய ஒருவித ஈர்ப்பு இருக்கத்தான் செய்தது. ஆயினும் அந்த ஈர்ப்பு ஒரு திட்டமான உறவுவடிவத்தை அடைவதற்கு முன்னமே நாங்கள் இருவரும் பிரிந்துவிட வேண்டிய நிலைமை உருவானது.

ஆம்! என்ன காரணத்தினாலோ திடீரென்று நொயிலின் அவளது பெற்றோரால் எங்கள் ஊரிலுள்ள பாடசாலையிலிருந்து திருகோணமலை நகரிலுள்ள ஒரு கிறிஸ்தவ மிஷன் பாடசாலை விடுதியிலே சேர்க்கப்பட்டாள். அந்த திடீர் முடிவுக்குரிய காரணம் நொயிலினுக்குக் கூட அப்போது தெரிந்திருக்கவில்லை. நொயிலின் விடுதிக்குச் சென்றபிறகு எங்கள் தொடர்பு ஏறக்குறைய விடுபட்டுவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். ஆனாலும் சில்வஸ்டருடன் எனது நட்பு எதுவித குழப்பமுமின்றித் தொடர்ந்தது. குறிப்பாக நொயிலினின் தந்தை வீட்டிலே இல்லாத காலங்களில் நாங்கள் இருவரும் நொயிலின் வீட்டில் தொலைக் காட்சியே கதியெனக் கிடந்தோம். இப்படியே சில மாதங்கள் கழிந்தன.

அந்த நேரத்தில்தான் யாருமே எதிர்பார்த்திராத ஒரு விடயம் நடந்தது.

ஒருநாள் மாலை வெளியூரிலிருந்து திரும்பிய ஜோர்ஜ் ஸேர்வையருக்கும் ஸ்டெல்லா அக்காவுக்கும் என்றுமில்லாதவாறு பலத்த வாய்த் தர்க்கம் ஒன்று ஏற்பட்டது. அக்கம் பக்கமே ஆச்சரியத்திலாழும் வகையிலே இரவு வெகுநேரம் வரை நீடித்த அவர்களது தர்க்கத்திற்கு என்ன என்ன காரணம் என்று யாருக்கும் தெரியவில்லை. அது ஒரு தம்பதியரின் தனிப்பட்ட விடயம் என்பதால் நாங்கள் யாருமே அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

அடுத்த நாள் காலையிலே நொயிலின் வீட்டிலிருந்து யாருமே வெளியலே வரவில்லை. எனது வீட்டில் உள்ளவர்களும் இரண்டொரு நாட்களுக்கு என்னை அங்கு செல்ல வேண்டாம் என்று தடுத்து விட்டனர். அடுத்த நாள் மதியம் வரை பொறுத்துப் பார்த்த எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. எப்படியாவது சில்வஸ்டரைக் கண்டால் என்ன விடயம் என்பதை அறியலாம் என்று எங்கள் வீட்டில் யாருக்கும் தெரியாமல் அவர்கள் வீட்டுக்குப் போனேன்.

நான் அங்கு சென்றபோது அவர்களது வீடு திறந்துதான் இருந்தது. ஆனால் என்றுமில்லாதவாறு மிகவும் அமைதியாயிருந்தது.

"சில்வஸ்டர்! சில்வஸ்டர்!" என்று கூப்பிட்டேன். ஆனால் பதிலே இல்லை.

ஏதோ தப்பாக நடக்கப்போகிறது என்று என் உள்ளுணர்வு உந்தித்தள்ள சட்டென்று திரும்பிச் சென்று விடுவோமா என்று கூட நினைத்தேன். ஆனால் அதற்குள் திடீரென வெளியே வந்தார் நொயிலினின் அப்பா ஜோர்ஜ் ஸேர்வையர். அவரை அதற்கு முன்பு வரை நான் அப்படி ஒரு கோலத்திலே பார்த்திருக்கவில்லை. அவரது கண்கள் இரண்டும் சிவந்திருக்க ஓர் அடிபட்ட புலிபோல ஆவேசத்துடனிருந்தார்.

"ஆ! ஷகீப்! வாங்க ராஜா! நல்ல நேரத்திலதான் வந்திருக்கீங்க! இப்படி.. வாங்க!" என்று குரலில் ஒருவித நையாண்டி தொனிக்க எனது கையைப்பற்றித் தரதரவென்று இழுத்துக் கொண்டு உள்ளே கொண்டு சென்றார். உள்ளே படுக்கை யறையினுள்ளிருந்த கட்டிலிலே அழுது சிவந்த முகத்துடனிருந்த ஸ்டெல்லா அக்கா என்னைக் கண்டதும் திடுக்கிட்டு எழுந்து, "வேணாம் ஷகீப்! வராதீங்க... வராதீங்க..!" என்று வெறிபிடித்தவர் போல அலற...

அங்கு என்ன நடக்கின்றது என்று புரிந்து கொள்வதற்கு முன்பே எனது வலது கையைப் பிடித்து ஸ்டெல்லா அக்காவின் கையிலே திணித்து, "இந்தா பிடி! நான் போறேன்.." என்று சுருக்கமாகக் கூறிவிட்டு அவர் விடுவிடுவென்று தயாராகக் கட்டி வைத்திருந்த பெட்டி மற்றும் தனது நிலஅளவை உபகரணங்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறிச் சென்று விட்டார். நடப்பது எதுவுமே புரியாமல் நான் திகைத்து நிற்க ஸ்டெல்லா அக்கா ஓடிச்சென்று கட்டிலிலே விழுந்து முகம் புதைந்து "ஓ...!" வென்று சத்தமாய்க் குலுங்கியழ ஆரம்பித்தார்.

நான் பயந்துபோய் வெளியே வந்தபோது

வீட்டு முற்றத்தில் அக்கம் பக்கமே கூடிநின்றது.

"என்னடா ஷகீப், ஒண்ணுமே சொல்லாம யோசிச்சிட்டேயிருக்க பதில் சொல்லவே மாட்டியாடா நீ?"

"ம்ம்? என்ன கேட்ட நீ..? இல்லடா.. அஸ்லம், அவளை நான் இப்பவும் அதேபோலத்தான்டா விரும்புறேன்.. அதில மாற்றமில்ல.. ஆனால் அவள் நொயிலின் என்ன ஐடியாவுல இருக்கிறாள் என்டு இப்பகூட எதுவுமே எனக்குத் தெரியாதுடா.."

அஸ்லம் ஆச்சரியமாகப் பார்த்தான்.

"நம்புடா! நான் கொழும்பு கெம்பஸ்ல பைனல் இயர்ல இருந்தநேரம் தாய் தவறிப்போன நேரம் மையத்துக்கு தம்பியோட வந்திட்டு உடனே போனதுக்கு இப்பதான்டா எத்தனையோ வருஷம் கழிச்சு கனடாவு லிருந்து வந்திருக்கிறாள்.. அந்தநேரம் என்னோட கோபத்தில இருந்ததால ஒரு வார்த்தை கூட பேசவே யில்லை..தெரியுமா உனக்கு..? இப்ப அவள்ட அப்பாவுக்கும் பைபாஸ் முடிஞ்சு ஒரு மாதம் கூட ஆகல்ல.. தவிர இப்ப அவள் என்ன நோக்கத்தில இருக்கிறாளென்டு கூடத் தெரியாம எப்படிடா நான்..?"

" அப்ப நான் வேணுண்டா ஒருக்கா கதைச்சுப் பார்க்கட்டா ஷகீப்..? இப்ப அப்படியே மூதூருக்குத்தானே வருவாள்? நான் பேசிப்ப பாக்கிறண்டா! அவள்ற நம்பர் வச்சிருக்கியா.."

"இல்லடா.. இன்னும் கேக்கல்ல... ஆனா அவள் இன்டைக்கு கம்பளைக்குப் போகிறாள்றா மச்சான். எதுக்கும் நீ இப்ப எதையும் அவசரப்பட்டு கேட்டு வச்சிடாதடா!"

உடனே அஸ்லம் சிறிது யோசித்து விட்டு,

"சரி, நீ இப்ப நேர உடனே வீட்டுக்குப் போகணுமா ஷகீப்? நீ பைக் தானே வச்சிருக்கிறாய்.. எனக்கொரு உதவி செய்ய மாட்டியாடா?"

"சொல்லுடா! செய்றேன்.!"

"மச்சான், இதில ஒரு பன்னிரண்டாயிரம் இருக்குடா. எச். என். பீ. டவுண் பிராஞ்ச்ல போய் இதை நான் தாற எக்கவுண்ட் நம்பர்ல ஒருக்கா டிப்பொசிட் பண்ணிவிடு மச்சான். இன்டைக்கே இப்பவே போட வேண்டிய காசுடா.. எனக்குப் போய் வர நேரமாகிடும்.." என்று பணத்தையும் நம்பரையும் நோட் பண்ணித் தந்தான்.

"சரிடா ஷகீப்! அந்தா ஒரு பஸ் வருது. நான் நாளைக்குக் காலைல திரும்பி வந்திருவேன்.. பகல் கடையிலதான் இருப்பன்..அந்தப்பக்கம் வந்தா வா கதைப்பம் ஸொறிடா உன் கெஸ்ட் காத்திட்டிருப்பா என்ன..?" என்று அவன் விடைபெற்றுப் பஸ்ஸி லேறியதும்,

" இட்ஸ் ஓகே! நீ போ! நான் இந்தா இப்பவே போய் காசைப் போட்டுட்டு வந்து விடுறன்.." என்று பைக்கை டவுண் பக்கம் திருப்பினேன்.

***

"என்ன ஷகீப் எனக்காக நெல்லிரசம் தேடி மிச்ச நேரம் அலைஞ்சீங்களா..?

பைக்கை முற்றத்தில் நிறுத்திவிட்டு நான் இறங்கியதும் ஷைனப்வை மடியில் வைத்து அவளது பிஞ்சுக் கைகளுக்கு டியூப் மருதாணி இட்டவாறே கேட்டாள் நொயிலின்.

"ம்! கொஞ்சம் அலைச்சல்தான்!"

அவளது அரவணைப்பிலே ஷைனப்குட்டி வெகுசந்தோஷமாக இருப்பதைப் பார்த்ததும் அஸ்லம் கூறியதுதான் ஞாபகம் வந்தது எனக்கு. அவன் சொன்ன படியே அவளிடம் நேரடியாய்க் கேட்டுவிடலாமா என்றுகூட ஒரு கணம் நினைத்தேன். பின்பு தயிரையும் நெல்லிரசப் போத்தல்களையும் உள்ளேயிருந்த மேசையிலே வைத்துவிட்டு கிச்சன் உள்ளே சென்று இரண்டு கிளாஸ்களைக் கழுவியெடுத்தேன். ப்ரிட்ஜ்ஜைத் திறந்து ஐஸ்க்யூப்ஸ் போட்டு நெல்லி ரசத்தை ஊற்றிக்கொண்டு வந்து அவள் முன்னே ட்ரேயை வைத்தேன்.

"இது என்ன ஷகீப்! இதெல்லாம் நான் செய்து தரவேண்டியது...நீங்க..போய்" என்று சிணுங்கினாள்.

"இல்ல இன்டைக்கு லீவு நாள் என்டதால நான்தான் வழக்கமா வர்ற சேர்வண்ட் பொம்பிளைய வரவேணாம் என்று சொல்லிட்டேன்"

"இருங்க ஷகீப், கையெல்லாம் மருதாணி பேஸ்ட் பட்டிருக்கு கழுவிட்டு வாறேன்" என்று உள்ளே சென்றதும், "வாப்பா, ஏன் இந்த அன்ரி மட்டும் ஒங்களைப் பேர் சொல்லிக் கூப்பிடுறாங்க..?" என்று கேட்டாள் ஷைனப்.

எனக்கு உடனடியாக என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை.

"அதுதானே! சரி நம்ம ஏனென்று கேட்டுடலாம்.. முதல்ல நீங்க இந்த ட்ரிங்க்க் குடிங்கடா" என்று ஒரு க்ளாஸை எடுத்து இரு கைகளிலும் மருதாணி இட்டிருந்த ஷைனப்புக்குப் பருக்கிவிட்டேன். அந்தப் பச்சைநிறத் திரவத்தை அவள் புதிதாகப் பார்த்து, "இது என்ன புது ட்ரிங்ஸ்.. இன்டைக்கு மட்டும் இதையேன் வாங்கியிருக்கீங்க வாப்பா?" என்றாள்.

"ஏன் தெரியுமா ஷைனப்குட்டி? அது எனக்கு மிச்சம் விருப்பமான ட்ரிங்க்!அதனால உங்கட வாப்பா டவுண்ல எச். என். பீ. பேங்க் வரைக்கும் போய் தேடியலைஞ்சு வாங்கி வந்திருக்காரு தெரியுமா?" என்று அபிநயித்தபடியே நொயிலினும் எங்கள் உரையாடலில் வந்து சேர்ந்து கொண்டாள்.

எனக்குத் திக்கென்றது!

"ஹேய்! இது எப்படி உனக்குத் தெரியும்?" என்று திகைத்த என்னைச் சிறிதும் பொருட்படுத்தாமல், "அதோட, உங்கட வாப்பாவுக்கும் பிடிச்ச ட்ரிங்க்தான்

அது.. தெரியுமா? அப்படித்தானே ஷகீப்?" என்று சொல்லிக்கொண்டே போனாள் நொயிலின்.

"ய்யாக்!..நல்லாவே இல்ல.. ஆன்ரி ஏன் நீங்க வாப்பாவை பேர் சொல்லிக் கூப்பிடுறீங்க?"

"மாட்டிக்கிட்டாயா?" என்ற தொனியிலே நொயிலினைப் பார்த்துப் புன்னகைத்தேன் நான். அவளும் சிறிது திகைத்துவிட்டு சிரித்தபடியே, "பேர் வச்சிருக்கிறதே கூப்பிடத்தானே?" என்றாள்.

"அப்போ நானும் உங்களை பேர் சொல்லிக் கூப்பிடவா?" மடக்கினாள் என் ஷைனப்குட்டி.

"சரி, நொயலீன் என்றே கூப்பிடு எனக்கென்ன?" என்று எனது மடியிலிருந்த ஷைனுவின் கன்னத்தைக் கிள்ளிவிட்டு வாய்விட்டுச் சிரித்தாள். அவளது சந்தோஷம் எனக்கும் தொற்றிக் கொண்டது. இப்போது கூட "பேசாமல் கேட்டுவிடுவோமா" என்று துடித்த மனதை கட்டுப்படுத்திக் கொண்டு,

"அதெல்லாம் இருக்கட்டும், அப்பாவுக்கு ஒபரேஷன் நிறையச் செலவாயிட்டுதா நொயிலின் ?" என்று கேட்டேன்.

"ஆமாம்! ஒரு மூன்றுதான் செலவாகு மென்டுதான் நினைத்தோம்..ஆனால் கடைசியில ஏழு ஏழரைக்குக்கிட்ட தேவைப்பட்டுட்டுது தெரியுமா.. ஏன் கேட்டீங்க ஷகீப்?"

"ஓ! அதனாலதான் உன்ட நகையெல்லாம் வித்திட்டியா?" என்று வாய்வரை வந்ததை கேட்காமல் விட்டுவிட்டேன்

"என்ன யோசனை?"

"ஒன்றுமில்லை.. நீ எப்படி இந்தச் செலவை யெல்லாம் சமாளிக்கிறாய் என்றுதான் யோசித்தேன்.." என்றேன் உண்மையான கரிசனையோடு.

அவள் முகம் சட்டென மலர்ந்தது. உடனே ஷைனப்பை பார்த்துக் கண்ணடித்தாள். அவர்கள் இருவருக்குமிடையிலே எனக்குத் தெரியாத ஏதோ ஒரு மௌன உரையாடல் போய்க்கொண்டிருப்பது இலேசாகப் புரிந்தது.

"ஷகீப்! நீங்க இன்னமும் என்மேல உண்மையான அக்கறையோடதான் இருக்கிறீங்களா.. சொல்லுங்க?" என் கண்களை நேருக்கு நேராய்ப் பார்த்துக் கேட்டாள் நொயிலின். அவளது விழிகளின் கூர்மையை ஏனோ என்னால் தாங்கவே முடியாதிருந்தது.

"ம்! ஏன்?" என்றேன் வெகு சுருக்கமாக.

"அது..வந்து அது உங்களையும் ஷைனப் குட்டியையும் இப்படித் தனியா விட்டுட்டு போக எனக்கு ஏனோ மனசு வருகுதேயில்ல.."

"..................."

" ஓம்! வாப்பா.. இந்த ஆன்ரி நம்மளோடையே இருக்கட்டுமே வாப்பா! நல்ல ஆன்ரி?"

"யேய் ஷைனப்.. பெரிய கிழவி மாதிரி பேசாத..!"

"ஏன் சும்மா அவளை அட்டுறீங்க ஷகீப்? அதோட ஏன் இப்படி நடிக்கிறீங்க ஷகீப்?" என்று கேட்டவளைச் சட்டென்று அதிர்ந்துபோய் பார்த்தேன்.

"எனக்கு எல்லாம் தெரியும் ஷகீப்! உங்களை பேங்குக்கு அனுப்பிட்டு உங்க ப்ரெண்ட் அஸ்லம் அண்ணா போற வழியில இங்க இறங்கி வந்து எல்லாம் சொல்லிட்டுத்தான் போனாரு தெரியுமா...?"

"அடப்பாவி அஸ்லம்! இதுக்குத்தானா.. என்னை நீ ஞாயிற்றுக்கிழமையில பேங்குக்குப் போய் நோண்டியாக்கி அலைக்கழிய வச்சாய்?" அவனது குறும்பை நினைத்துக் கோபமும் சிரிப்பும் ஒன்றாக வந்தது.

"ஏன் ஷகீப், உங்க மனதில இருக்கிறது எதையும் என்னிடம் வெளிப்படையாகச் சொல்லவே மாட்டீங்களா நீங்க?" என்றபடி என்னருகிலேயே வந்து அமர்ந்து கொண்டாள் நொயிலின். அவளது அழகிய விழிகளிலே கண்ணீர் குளம்கட்டியிருந்தது.

"நீயும் கூடத்தான்... இன்னும் வெளிப்படையாக எதையும் சொல்லவே இல்லையே, மக்கு வயலின்! " என்று நான் சொன்னதுதான் தாமதம். அதற்குமேல் அவள் ஒரு வினாடியும் தாமதிக்கவில்லை.

பாய்ந்தோடி வந்து என்னை இருகைகளாலும் அணைத்துக்கொண்டு எனது மார்பிலே தலை புதைத்து ஓ வென்று குலுங்கிக் குலுங்கி அழத்தொடங்கினாள். என்னால் அவளைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. அவளது அழுகை இப்போதைக்கு நிற்காது என்பதால் அப்படியே விட்டுக்கொண்டிருந்தேன். எனது விழிகளிலும் கண்ணீர் பெருக்கெடுத்தது.

அங்கு நடப்பது புரியாமல் திகைத்துப் போயிருந்த ஷைனப்பை இருகைகளையும் நீட்டி நான் அழைக்க அவளும் ஓடிவந்து தனது சின்னஞ்சிறு மருதாணிக் கைகளால் எங்கள் இருவரையும் சேர்த்துக் கட்டிக்கொண்டாள்.

நாங்கள் மூவரும் ஒருவரையொருவர் கட்டியணைத்துக் கண்ணீர் சொரிந்து கொண்டிருப்பதையெல்லாம் எதிர்ச்சுவரில் சதுரவடிவச் சட்டகத்தினுள்ளேயிருந்து ஒரு மாறாப் புன்னகையோடு பார்த்துக் கொண்டேயிருந்தார், நொயிலின் மற்றும் ஷைனப்பானு ஆகியோரைப் பெற்றெடுத்தவரும் என்னுடைய வளர்ப்புத் தாயுமான ஸ்டெல்லா அக்கா.

**நூல் அறிமுகத்திற்கு தங்கள் நூலை அனுப்புபவர்கள் 2 பிரதிகளை அனுப்பவும்**

முருகபூபதி

# எம்மவர்: அயராது இயங்கும் கலைவளன் சிசு.நாகேந்திரன்

தொன்னூற்றி ஒரு வயதிலும் அயராமல் இயங்கி கலை, இலக்கிய மற்றும் சமூக நிகழ்வுகளுக்கு வருகைதரும் எழுத்தாளர் சிசு. நாகேந்திரன் அவர்கள், அவுஸ்திரேலியாவில் வருடந்தோறும் தமிழ் எழுத்தாளர் விழாவை நடத்திவரும் தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் காப்பாளர். சில வருடங்களுக்கு முன்னர் இந்த அமைப்பின் தலைவராகவும் பணியாற்றியவர்.


தமிழ் எழுத்தாளர் ஒன்றுகூடல் நிகழ்வுகளில் தவறாமல் கலந்துகொள்ளும் இவர், நிகழ்ச்சிகளிலும் பங்கேற்பார். எழுத்தாளர் விழா மெல்பனில் சிட்னியில் கன்பராவில் நடந்தாலும் சாக்குப்போக்குச்சொல்லாமல் தமது உடல் நலத்தையும் பொருட்படுத்தாமல் அர்ப்பணிப்பு உணர்வுடன் பங்கேற்று கருத்தரங்குகளில் கட்டுரையும் சமர்ப்பிப்பார்.

யாழ். நல்லூர் இவரது பூர்வீகம் எனச் சொல்லப்பட்டாலும் பிறந்தது கேகாலையில் 1921 ஆம் ஆண்டில். அவரது தந்தையார் தொழில் நிமித்தம் இப்பிரதேசத்தில் வாழ்ந்த காலத்தில் பிறந்த சிசு. நாகேந்திரன் அவர்களின் வாழ்வில் அவரது ஒன்பதாவது வயதில் எதிர்பாராத சம்பவம் ஒன்று நிகழ்ந்திருக்கிறது.

நாகேந்திரனின் தந்தையார் முற்றும் துறந்த துறவியாகி குடும்பத்தையும் உத்தியோகத்தையும் துறந்து, வட இந்தியா நோக்கி ஒரு சந்நியாசி கோலத்துடன் புறப்பட்டுவிட்டார். ஒன்பது வயது நாகேந்திரன் அருமைத்தாயாரினதும் அன்பு அண்ணனினதும் அரவணைப்பில் வளர்ந்திருக்கிறார்.

தந்தையார் இந்தியா வடக்கு நோக்கிச் செல்லவும் தாயார் இலங்கை வடக்கு நோக்கி குழந்தைகளை அழைத்துக்கொண்டு வந்துவிட்டார். அந்நாளைய அரிவரி தொடக்கம் லண்டன் மற்றிக்குலேஷன் வரையில் யாழ். பரமேஸ்வரா கல்லூரியில் (இன்றைய பல்கலைக்கழகம்) படித்த நாகேந்திரன், பின்னர் யாழ். மத்திய கல்லூரியில் வர்த்தக முகாமைத்துவம் கற்று, London Chamber of Commerce உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றினார்.

1944 இல் மன்னார் அரசாங்க அதிபராக கடமையாற்றிய சிற்றம்பலம் அவர்களிடம்



தட்டச்சாளராக பணியாற்றும் அரச நியமனம் கிடைத்தது. பின்னர் கொழும்பில் அரச திணைக்களம் ஒன்றில் பணிபுரியும்போது கணக்காய்வாளராக பதவி உயர்வு பெற்றார். அதனைத்தொடர்ந்து, 1979 இல் சேவையிலிருந்து ஓய்வுபெறும் வரையில் பல்வேறு திணைக்களங்களில் பணியாற்றியிருக்கிறார்.

நான்கு பிள்ளைகளின் தந்தை. ஒரு சாதாரண எழுதுவினைஞருக்குரிய ஊதியம். எளிமையான வாழ்க்கை. இவற்றுக்கு மத்தியில் பிள்ளைகளை படிக்கவைத்து நல்ல நிலைமைக்கு அவர்களை உயர்த்தி விட்டு, தமது தந்தையைப் போன்றே ஒரு துறவுக்கோலம் பூண்டு அமைதியாக தனது பணியைத்தொடருகிறார். தமது துறவு வாழ்க்கையை சமூகத்திற்கு பலவழிகளிலும் பயன் படும்விதமாக இவர் அமைத்துக்கொண்டிருப்பதுதான் அவரது சிறப்பு. அத்துடன் மற்றவர்களுக்கு முன்மாதிரி யானதாகவும் திகழுகிறது. அதனாலும் அவர் எமது நெஞ்சத்துக்கு நெருக்கமானவராகின்றார். இளமைக் காலத்தில் படிப்பில் படு சுட்டி எனப்பெயரெடுத்த இவர், மாணவர் தலைவராகவும் பல்துறை விளையாட்டு வீரராகவும் திகழ்ந்திருக்கிறார். உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், டெனிஸ், டேபிள் டெனிஸ் முதலானவற்றிலும் வல்லவராகியிருக்கிறார். அயராது இயங்கும் இவரது சூட்சுமும் இந்தப் பின்னணிகள்தான் என்பது எமக்குப்புரிகிறது.

தொன்னூறு வயது கடந்த நிலையிலும் தினமும் காலையில் உடற்பயிற்சி தொடக்கம் யோகா சனம் வரையில் செய்வதை அவதானித்திருக்கின்றேன்.

இவரது கலை உலக வாழ்க்கையும் ஆரோக்கியமானது. தேடல் நிரம்பியது. கொழும்பில் தொழில் நிமித்தம் வாழ்ந்த காலத்தில், "ராஜ் நகைச் சுவை நாடக மன்றம்" இவரை உள்வாங்கியிருந்தமையால் இம்மன்றம் மேடையேற்றிய பலநாடகங்களில் தோன்றினார். யாழ்ப்பாணம் திரும்பியதும் அச்சுவேலி ராஜரட்ணத்துடன் இணைந்து அந்நாட்களில் பிரபல்யமாகியிருந்த "சக்கடத்தார்" என்னும் நாடகத்தில் ஒரு பாத்திரமானார்.

1960 களில் நீர்கொழும்பில் வானொலிக் கலைஞர்களை அழைத்துக்கொண்டு வந்த "சாணா" சண்முகநாதன் மத்தாப்பு, குதூகலம் முதலான வானொலி நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவுசெய்ய வந்தபோது சிசு. நாகேந்திரன் இணைந்து நடித்த சக்கடத்தார் நிகழ்வை பார்த்து ரசித்திருக்கின்றேன். ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை வீட்டில் வானொலிப்பெட்டி இல்லாவிட்டாலும் சக்கடத்தார் ஒலிபரப்பாகும் நேரம் அயல்வீட்டுக்குச்சென்றாவது கேட்டு ரசிப்பது எனது வழக்கம். இலங்கையில் ஒரு காலத்தில் சக்கடத்தார் தமிழ் நேயர்களிடம் நன்கு பிரபல்யம் பெற்றிருந்தார். இந்நாடகம் ஆயிரம் தடவைகளுக்கு மேல் மேடையேறியிருக்கும் என்பது நாகேந்திரனின் அபிப்பிராயம். யாழ்ப்பாணத்தில் கலைஞர்கள் தாசீசியஸ், குழந்தை சண்முகலிங்கம், திருநாவுக்கரசு (நந்தியின் சகோதரர்) ஆகியோருடனும் இணைந்து இயங்கியிருக்கிறார். ரகுநாதனின் **நிர்மலா**, வி. எஸ். துரைராஜா தயாரித்த **குத்துவிளக்கு** முதலான திரைப்படங்களிலும் தோன்றியிருக்கிறார்.

ஆச்சிக்குச்சொல்லாதை, வா கோட்டடிக்கு, கவலைப்படாதே, மின்னுவதெல்லாம் பொன்னல்ல, தொடாதே, அவமானம், ஊர் சிரிக்குது, அது அப்ப... இது இப்ப.. முதலான பல நகைச்சுவை நாடகங்களிலும் நடித்திருக்கும் நாகேந்திரன், யாழ். திருநெல்வேலி நாடக அரங்கக்கல்லூரியினால் தயாரிக்கப்பட்ட வையத்துள் தெய்வம், கந்தன் கருணை, அன்னத்துக்கு அரோஹரா, கூடி விளையாடு பாப்பா, இனி என்ன கலியாணம், கவிஞர் அம்பியின் வேதாளம் சொன்ன கதை முதலானவற்றிலும் நடித்திருப்பதுடன், பொறுத்தது போதும், கோடை, ஆகியவற்றின் மேடையேற்றத்தின் போது அரங்க நிர்மாணப்பணியையும் திறம்பட மேற்கொண்டிருக்கிறார்.

அந்நாட்களில் தமிழ் வானொலி நேயர்களின் விருப்பத்துக்குரிய நாடகங்களாகத்திகழ்ந்த சிறாப்பர் குடும்பம், லண்டன் கந்தையா முதலானவற்றிலும் நடித்திருக்கிறார். இங்கிலாந்திலும் சிறிது காலம் வாழ்ந்திருக்கும் இவர், அங்கு "களரி" நாடகப்பள்ளியின் சார்பாக மேடையேறிய புதியதொரு வீடு, அபசுரம், எந்தையும் தாயும் முதலானவற்றிலும் பங்கேற்றிருக்கிறார். இவ்வாறு ஒரு நாடகக் கலைஞனாக தமது இருப்பை வெளிப்படுத்திக்கொண்டவர், அவுஸ்திரேலியாவுக்கு புலம் பெயர்ந்த பின்னர் தன்னை ஒரு எழுத்தாளனாகவும் நிலைநிறுத்திக்கொண்டார்.

தான் இந்த கங்காருநாட்டில் ஒரு எழுத்தாளனாக மாறியதும் விந்தையான நிகழ்வுதான் என்று குறிப்பிட்டார். தமது பேத்திக்கு அந்தக்கால யாழ்ப்பாணம் எப்படி இருந்தது எனச்சொல்லிக் கொடுப்பதற்காக எழுதிய கட்டுரைகளே பின்னர் சிட்னியிலிருந்து வெளியாகும் கலப்பை இதழில் பிரசுரமானது என்றார். குறிப்பிட்ட கட்டுரைகளே பின்னர் அதே பெயரில் தமிழகத்தில் நூலுருவாகி பலரதும் பாராட்டையும் விமர்சனங்களையும் பெற்றது.

இந்நூலுக்கு கிடைத்த வரவேற்பினால் உற்சாகமடைந்த சிசு. நாகேந்திரன், **பிறந்த மண்ணும் புகலிடமும்** என்னும் மற்றுமொரு கட்டுரைத் தொகுதியையும் வரவாக்கினார். இந்நூலை எமது அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கம் வெளியிட்டது. கடந்த 2008 ஆம் ஆண்டு சிட்னியில் நடந்த எட்டாவது எழுத்தாளர்விழாவிலும் பின்னர் மெல்பனில் நடந்த இலக்கிய ஒன்றுகூடலிலும் விமர்சன அரங்கில் இந்நூல் இடம்பெற்றது.

1994 ஆம் ஆண்டு இங்கிலாந்திலிருந்து விடைபெற்று அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்த தருணத்தில் கலைஞர் தாசீசியஸ் உட்பட பலர் இவருக்கு அளித்த பிரிவுபசார வைபவத்தில் **"கலைவளன்"** என்ற பட்டமளிக்கப்பட்டார். நாடகக் கலைஞனாக அறிமுகமாகி எழுத்தாளனாக தன்னை வளர்த்துக்கொண்ட சிசு. நகேந்திரன், சிறந்த ஒளிப்படக் கலைஞருமாவார். எமது சங்கத்தின் ஆஸ்தான ஒளிப்படக்கலைஞர் பதவியும் இவருக்குத் தரப்பட்டிருக்கிறது.அவுஸ்திரேலியாவில் எமது தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தில் மட்டுமல்ல, விக்ரோரியா ஈழத் தமிழ்ச்சங்கம், தமிழர் புனர்வாழ்வுக்கழகம், இலங்கை மாணவர் கல்வி நிதியம் ஆகியனவற்றிலும் சாக்குப் போக்குச்சொல்லாத அர்ப்பணிப்புணர்வுடன் இதயசுத்தியோடு இயங்கும் இந்த உலகம் சுற்றும் இளைஞர் கடந்த ஆகஸ்ட் 9 ஆம் திகதி தனது 91 ஆவது பிறந்த தினத்தை அமைதியாக வீட்டில் நினைவு கூர்ந்தார். அவுஸ்திரேலியா தமிழ் எழுத்தாளர் விழாவில் இவரது சேவைகளை பாராட்டி கௌரவித்து விருது வழங்கினோம். ஞானம் இதழ் இவரை அட்டைப்பட அதிதியாக கௌரவித்துள்ளது.

கலை, இலக்கியம் மற்றும் சமூகப்பணிகளில் சகலராலும் நேசிக்கப்படும் சிசு. நகேந்திரன் விதந்து போற்றுதலுக்குரிய பண்பாளர். முன்மாதிரியானவர்.



# சிரித்து வாழ வேண்டும்

ச.முருகானந்தன்

சங்கரப்பிள்ளை அண்ணையை அந்தக் கோலத்தில் பார்த்த போது நெஞ்சு உறைந்து போனது.யாருக்கும் தீங்கு இழைக்காத இந்த மனுசனுக்குமோ இந்தக் கதி? மனது கனத்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து வன்னிக்கு அகதிகளாகச் சென்ற போது அபயம் அளித்தவர் சங்கரப்பிள்ளை அண்ணை தான். வன்னேரிக்குளத்தில் இவரது இரண்டேக்கர் காணியில் ஒரு புறத்தில் தற்காலிகக் குடிசை அமைத்து தங்கியிருந்த காலத்தில் அவர் செய்த உதவிகளை மறக்க முடியாது.

வன்னேரியிலே சங்கரப்பிள்ளை அண்ணை பெயர் பெற்ற விவசாயி. தனது கமத்திலே நெல் விதைத்து உச்ச அறுவடை செய்து அந்த நாளையில் விவசாய மன்னன் என்று பட்டம் பெற்றவர்.ஒரு போதும் சும்மா இருக்காமல் ஓடி ஓடி உழைத்துக் கொண்டிருப்பார். ஆள் வலு சிக்கனம். ஆனால் கஞ்சன் அல்ல, இதனால் இவரை "பட்டினி" என்று சிலர் அழைப்பார்கள். அவருடைய மனது கள்ளம் கபடமற்றது. யாருடனும் முரண்படவோ உரத்துப் பேசவோ மாட்டார். இதனால் இவரை "பச்சைத்தண்ணி" என்றும் அழைப்பர்.

யாழ்ப்பாணத்தில் தோட்டம் செய்வதே எனது தொழிலாக இருந்தது. மிளகாய், வெண்காயம், மரக்கறி எனப் பயிர் செய்வோம். வாழைத்தோட்டமும் கை கொடுத்தது.இதனால் குறையின்றி வாழ்ந்து வந்த எம்மை யுத்தம் போட்டு உடைத்து விட்டது. பொருளாதாரத் தடை,போக்குவரத்துத் தடை, எரிபொருள் தட்டுப்பாடு என விவசாயம் முடங்கிப் போயிருந்தது. இந்த நிலையில் இடப்பெயர்வும் வந்தது.



வன்னியிலே தொழில் இல்லாமையினால் எமது கையிருப்பும் கரைந்தது, நிவாரணமும் போதாமல் நாம் கஸ்ரப்பட்ட போது சங்கரப்பிள்ளை அண்ணை தான் கை கொடுத்தார். தமது வயல், தோட்டங்களில் கூலி வேலை செய்ய அனுமதித்ததோடு தனதுமண்ணியாகுல மானாவாரி வயலில் விதைக்கவும் இடம் தந்தார்.

இந்த மனிசனுக்கா இப்படி...?


சங்கரப்பிள்ளை அண்ணையின் உதவிகள், மனிதாபிமானங்கள், பெருந்தன்மைகள் எல்லாமே மனதில் நிழலாடின. வன்னியில் அவரோடு வாழ்ந்த காலங்களில் அவரோடு வயலிலும் தோட்டங்களிலும் வேலை செய்த ஞாபகம் இன்ப ஊற்றாய் என் மனதில் நிழலாடுகிறது.

வயல் விதைப்பென்றால் சாரத்தை மடித்து சண்டிக்கட்டுடன் அதிகாலையிலேயே வயலுக்குள் இறங்கி விடுவார்.

காலையில் உழத் தொடங்கினால் ஓயாமல் உழுது கொண்டேயிருப்பார். பஞ்சிப்படும் குணம் அவரிடம் இருந்ததில்லை.

"எய்க்...கெய்...கெய்க்...எய்க்..." மாடுகளை விரட்டி உசார்ப் படுத்திய படி கலப்பையின் முனையை நிலத்தில் ஆழமாகப் பிடித்த படி இளைஞன் போல சுறுசுறுப்பாக இயங்குவார். அப்போது அவருக்கு நாற்பது வயதிற்கு கிட்டவாக இருந்த காலம்.

ஊரில் நான் வயல் விதைத்ததில்லை. அவரிடம் தான் வயல் விதைப்புக்களின் சூட்சுமங்கள் பற்றி எல்லாம் கற்றேன். வரம்பு கட்டுவது, உழுவது, சிறுபோக விதைப்புக் காலங்களில் எருமை மாடுகளைப் பயன்படுத்தி பலகையடித்து சிரத்தை செப்பனிடுவது,வாய்க்கால் நீரை பக்குவமாப் பாய்ச்சுவது எனப் புதுப்புது அனுபவப் பாடங்கள் நிறைய அவரிடமிருந்து கிடைத்தது.



ஒரு போதுமே செய்து பழக்கப்படாத வயல் வேலைகளை கரிசனையோடு சொல்லித் தருவார். காலம் காலமாக நிலத்தோடு கிடந்து வயலும் நெல்லு மாய் மண்ணை கிண்டி வாழ்ந்த அவரது அனுபவம் விவசாயத்தின் இன்னொரு பக்கத்தை எனக்குப் புகட்டியது.

விதைப்பு இல்லாத காலத்தில் திக்காய் குள சிறுபயிர் செய்கையிலும் ஈடுபடுவது வன்னேரி விவசாயிகளின் வழமை. நாங்கள் யாழ்ப்பாணத்தில் கிணற்றை நம்பிச் செய்யும் தோட்டத்தை, இங்கே சிறு வாய்க்கால் நீர் விநியோகத்தை நம்பி இவர்கள் செய்வார்கள். வன்னி காட்டுப்புற கிராமத்தில் நுளம்புக் குள்ளேயும், பாம்புக்குள்ளேயும் போராடி வாழ்ந்து வரும் வன்னி மக்களை நினைக்க எனக்கு பெருமிதமாக இருந்தது.

எங்கள் ஊரைப் போலன்றி இங்கே விதைப்பும் காலங்களிலும், தோட்ட பயிர்ச்செய்கைக் காலத்திலும் காவல் காத்து பயிர் செய்வார்கள். மானும், பன்றியும், முயலும் மாத்திரமன்றி சமயங்களில் யானையிட மிருந்தும் பயிரைக் காத்திட வேண்டும். காவல் கொட்டிலமைத்து குளிரினும் மழையிலும் காவல் காத்துத் தான் விவசாயத்தைக் காக்க வேண்டும்.

சங்கரப்பிள்ளை அண்ணையோடு சேர்ந்து



வேலை செய்தால் களைப்பே தெரிவதில்லை. வெடிச்சிரிப்பை ஏற்படுத்தும் பகிடிகளை எடுத்து விடுவார். அவரோடு சேர்ந்து வேலை செய்வதென்பதே ஒரு தனியான மகிழ்ச்சி தான் மனிசன் அதிகம் படிக்காதவர் எனினும் உலகத்தை நிறையப் படித்திருந்தார். வானொலியும் பத்திரிகையும் அவரது உலக ஞானத்தை விசாலித்திருந்தது.அவர் அத்தோடு பண்டைய இலக்கியங்களிலும்,இதிகாசங்களிலும் பரிச்சயம் அதிகம். காத்தான் கூத்தில் சில வரிகளை எடுத்து விட்டார் என்றால் வைரமுத்து தோற்றுப் போவார். இராமாயணத்தில் அவர் எப்போதும் செஞ்சோற்றுக் கடன் தீர்த்த கும்பகர்ணனையும், பாரதத்தில் கர்ணனையும் பாராட்டுவார்.கர்ணனைக் கொல்ல கண்ணன் செய்த சதிகளைச் சாடுவார்

சினிமாவிலும் அவரிடம் நிறைய சினிமா இருந்தது. சிவாஜியின் நடிப்பை பாராட்டும் அதே வேளை எம்.ஜி.ஆரையே பிடிக்கும் என்பார் பாட்டு என்றால் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தை எப்போது சிலாகிப்பார். "அவன் பிறவிக் கவிஞன் தம்பி. 29 வயதிலேயே போய்ச்சேர்ந்திட்டான்."

சில வேளைகளில் வேலை செய்யும் போது சினிமாப் பாடல்களையும் பாடுவார்.

வேப்பமர உச்சியிலே பேயொன்று
ஆடுதென்று
விளையாடப் போகும் போது சொல்லி
வைப்பாங்க
அந்த வேலையற்ற வீணர்களை...

வேலையில் ஈடுபட்டிருந்த எல்லோரும் அவரது பாட்டினை ரசிப்பார்கள். அவரும் உற்சாக மாகப் பாடுவார்.

காடு விளைஞ்சென்ன மச்சான் நமக்கு
கையும் காலும் தானே மிச்சம்...

எம்.ஜி.ஆர் போல கையை உயர்த்தி உயர்த்திப் பாடும் போது அவரது பாவனையும் அப்படியே இருக்கும்.

நினைவுகள் மனதை உருக்க என் கண்கள் பனிக்கின்றன. நிலைமை சுமூகமாகி நாம் யாழ்ப் பாணம் திரும்பிய பின்னர் அடுத்த சில வருடங்களில் வன்னியில் கடுமையான யுத்தம் நடந்தது. என்னென்ன எல்லாமோ நடந்து எத்தனையோ மரணங்கள்... இழப்புக்கள்...என் நினைவை அறுத்தன அவரது வார்த்தைகள்: "ஏன் தம்பி கலங்கிறீர்...எனக்கு ஒரு கால் தானே போச்சு...எங்கட இனத்திற்கு ஏற்பட்ட இழப்போட பார்க்கிற போது இது தூசு..." தொடை யோடு கால்கள் துண்டிக்கப்பட்டிருந்தாலும் அவர் உற்சாகமாக சிரித்துக் கொண்டு சக்கர நாற்காலியில் அமர்ந்த படி "தம்பி...தேத்தண்ணி குடியும்..."அதே அன்பான உபசரிப்பு...அதே கலகலப்பு...ஹீம்...கால் தான் இல்லை!



## சிரிப்பின் மறுவாசிப்பு

எங்கள் கிராமத்தின்
அழிந்து வெதும்பிக்
கருகிய
பெருநில வெளியில்
புற்கள் சோகச் சுமையுடன்
மெல்ல நிமிரத்
தலையை உயர்த்தின.

அவ்வேளை
புல் தின்னும் ஓநாய்கள்
மெல்லச் சிரித்தன.
சிரிப்பின் மறுவாசிப்பில்
நீதி ஓலைச் சுருளாய்ச்
சுருண்டு கொண்டது.

## அழகின் கிறுக்கு

அழகின் விளம்பில் நின்று
ஆகாயம் நோக்கிய கவிஞர்
நித்திய அழகைத் தேடி
நெடுந்தூரம் நடந்தனர்
கடதாசிச் சோர்வாய்க் களைத்தனர்

அழகு என்ற மாயைப் பொறி
ஆகாயத்திலிருந்து
வாராதோ என்று ஏங்கினர்.

அப்போது நிகழ்ந்த
பேரதிர்ச்சியை
அவர்களாற் கண்டு கொள்ள
முடியவில்லை

காலிழந்து கையிழந்து
அணியணியாய்ச்
சிறு குஞ்சுப் பறவைகள்
காட்டின்
இரும்பு இடைவெளியூடே
வந்து கொண்டிருந்தன.

## ஒற்றை இறக்கைப் பறவைகள்

சூரியன் வெய்யிற் பழங்களைச்
சொரிந்த கிராமத்து வெளியில்
அந்தப் பறவைக்கு அசட்டுத் துணிச்சல்.
அதனிடம் இருந்தது
ஒரு பக்க இறக்கை மட்டுமே
ஆயினும்,
அதன் துணிச்சல் விசையில்
பறந்து நிமிர்ந்த அதிசயமோ
நீண்ட வினா...

அதனை விழுங்க நின்ற
பெருங் கழுகுக்கும்
ஒரு புக்க இறக்கை மட்டுமே.

மறுபக்க இறக்கையைப்
பரதேசம் குத்தகைக்கு கொடுத்தது.

காலம் சுழன்றது
நலிந்தவரின் உயிர் தூசிகளும்
சுருண்டன.
சூரிய மணலிலே
பிக்காசோவின் சித்திரங்கள்.

**சபா.ஜெயராசாவின் 3 கவிதைகள்**

# கடலோரத் தென்னை மரம்



பதுங்கிப் பதுங்கி...
தாளம் பற்றைக்குள் மறைந்திருந்து
தருணம் பார்த்து காற்று
என்னைத் தள்ளத் துடிக்கும்.

ஓங்கி எழுந்து உயரத்தில் முகம் காட்டி
ஆங்காரமாக அலை ஏந்தி கடல் அன்னை
தன்னோடு என்னை கொண்டோட தரைக்கு வரும்

இன்று வரைக்கும் இதுதான் நடக்கிறது.
என்றாலும்... துண்டாட, எவராலும்
முடியவில்லை.

மீன் பிடிகாரருக்குச் சிலவேளை நிழல்
கொடுப்பேன்
மீன் அள்ளும் வலைகளையும் உலர்த்த உதவி
செய்வேன்.

தனித்திருக்கும் என்னைத் தழுவ வரும்
குளிர்காற்று...
களைப்பாற்றும் என் இளநீர் சுவைக்கப் பலர்
முயல்வர்.

அடியைக் கடல் அரிக்கும்
முடியை அனல் கருக்கும்
வடிவை கறைப்படுத்த
வாடை படம் வரையும்

வாழட்டும் என்று ஆர்தான் விடுகின்றார்...
பாழ்படுத்த வென்றால் பலபேர் திரண்டிடுவார்.

சூறாவளியில் சொந்தங்களை இழந்தோம்,
போர் அனலிற் பொசுங்கி பொலிவுகளை
இழந்தோம்,
சுனாமி வந்தெம் சுற்றத்தைச் சுருட்டி அள்ளிப்
போயிற்று.

அநாதைகளாய், ஒரு சிலர் நாம் ஆதரவே
இல்லாது
தனிமரமாய்...
அங்கிங்கே தங்கி உயிர் வாழ்கின்றோம்.

எல்லோருக்கும் எம்மைச் சொல்லி
இரணமணி தேடுகின்றார்.
எல்லோரும் தேட...
எங்களைத்தான் காட்டுகிறார்.

காற்று வந்து தள்ளிவிடத்
தருணம் பார்க்குது.
கடல் எழுந்து விழுங்கி விட
முயற்சி பண்ணுது.

நாற்றிசையும் முயலுகிறார்
வேர் அறுத்திட.
நாம் சுமக்கும் துயர் நெருப்பு.
யார்க்குத் தெரியுது?

நாம் சுமக்கும் துயர் நெருப்பு
யாருக்குத் தெரியுது?

நீலாபாலன்



ஆனந்தி

# வேலை வேண்டும்

கண்கள் செருகிய அரைமயக்கத்தில், களைப் பிரக்ஞையாய் அம்மாவின் குரல் கேட்டது. பகலா இரவா என்று புரியாத மயக்கம் அகல்யாவுக்கு. சடாரென்று விழிப்புத் தட்டிற்று. அம்மா நிஜமாகவே தரிசனமாக நின்று கொண்டிருந்தாள். குரலில் சலிப்புத் தட்டக் கேட்டாள்.

"பகல் தூக்கமா? அதுவும் இந்த அகால நேரத்தில்..."

"வேறு என்ன செய்யச் சொல்லுறியள்? விழித்திருந்தால் ஏக்கம் பீறிட்டு வழியுது. மூன்று வருடங்களாக வாழ்க்கையோடு போராடிக் களைத்து விட்டேன். ஒரு முடிவும் தெரியேலை. சாகலாமா என்று தோன்றுது.

"நீ எதுக்கு இப்படி யோசிக்க வேணும். உனக்கு இன்னும் காலம் இருக்கு. சீக்கிரம் உனக்கு ஒரு வேலை கிடைக்க நான் வழி சொல்லுறன்."

"எந்த நம்பிக்கையில் இதைச் சொல்லுறியள்? எவ்வளவு வேலைகளுக்கென்று தான் மனுப் போட்டிருப்பேன். எத்தனை நேர்முகத்தேர்வுகளுக் கெல்லாம் முகம் கொடுத்திருப்பேன். பலன் பூஜ்யம் தான். இனி யார் தரப்போகினம் எனக்கு ஒரு வேலை.

"எதற்கும் சிவனேசனிடம் ஒரு முறை கேட்டுப் பார்ப்பம். ஊரிலேயும் நல்ல பழக்கம் எங்களோடு. இப்ப கொழும்பிலே ஒரு தேயிலைக்கம்பனியில், நிர்வாக மனேஜராக இருக்கிறார். நான் ஆவலோடு கதைச்சால் நிச்சயம் உனக்கு ஒரு வேலை கொடுப்பார்."

"அம்மா! அதுவும் சிவனேசன் எங்களுக்குக் கிட்டிய உறவுமில்லை. ஏதோ ஊர்ப் பழக்கம். அதுவும் கனகாலத்திற்கு முந்திப் பார்த்தது. இப்ப அதை யெல்லாம் அடியோடு மறந்து விட்டிருப்பாள். எனக்கு நம்பிக்கையில்லை. உங்கடை ஆசையைக் கெடுப்பானேன். அவர் மூலமாவது வேலை கிடைகிறதா பார்ப்பம்"

அம்மா அதன் பிறகு எதுவும் பேசவில்லை. அகல்யாவுக்கு வாழ வேண்டிய வயது. மூத்த சகோதரி சரியில்லை. மனநலம் பாதிக்கப்பட்டவள். அவளோடு ஒரு நாள் போவதே ஒரு யுகம் போலக் கழியும். அதிலிருந்து மீளவே, சொற்ப நேர விடுதலையை நாடி, அகல்யா வேலைக்குப் போகத் துடித்துக் கொண்டிருந்தாள். அவள் ஏ/எல் வரை பாஸ் செய்து, கம்பியூட்டரிலும், தனியா ஒரு புரோகிராம் செய்யுமளவுக்குத் தேறியிருந்தாள். இதையெல்லாம் யார் கணக்கில் எடுக்கிறார்கள். நேர்முகமாக ஒரு சிபார்சு மட்டும் இருந்தால் போதும் வேலை தானாகவே கைக்கு வந்துவிடும்.

அப்பாவுக்கு வருகிற பென்ஷனும், வாழ்க்கைச் செலவுக்குப் போதவில்லை. அவள் வேலைக்குப் போக விரும்புவதற்கு அதுவும் ஒரு காரணம். எத்தனை நாளைக்கென்றுதான், தனிமையில் செத்தபடி, அக்காவோடு போராடிக் கொண்டிருப்பது. மற்றவர்களைப்போல வாழ்க்கை சுமூகமாக இல்லை அவர்களுக்கு. வாழ்வின் ஜீவகளையே அடியோடு வற்றிப் போய், வரண்ட பாலைவனமாக வெறுமை காய்கிறது. சிவனேசன் மட்டும் மனம் வைத்தால், ஒரு வேளை இந்த நிலைமை மாறலாம்.

அம்மா மறுநாளே சிவனேசனைக் காண்பதற்


காக வெள்ளவத்தைக்குப் போயிருந்தாள். ஐந்தாவது மாடியில் ஓர் ஆடம்பர சொகுசு வீடு. லிப்ட் ஏறிப் பழக்க மில்லாததால் அம்மா கால்கள் வலிக்கப் படியேறியே உள்ளே வந்திருந்தாள். சிவனேசன் கழுத்தில் தங்கச் சங்கிலியுடன், ஒரு மைனர் போல் காட்சி தந்தார். அம்மாவை நேரில் பார்த்த பரிச்சயம் மறவாமல் சரளமாக வரவேற்றார். அம்மா தயங்கி தயங்கி விடயத்தை கூறியதும். பம்பலப்பிட்டியிலுள்ள தனது அலுவலகத்திற்கு மறுநாளே தன்னை வந்து பார்க்கும்படி அகல்யாவிடம் சொல்லுமாறு கேட்டுக் கொண்டபோது அம்மாவுக்கு உச்சி குளிர்ந்து போனது.

நிறைய எதிர்பார்ப்புக்களோடு அகல்யா வாசலில் அம்மாவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள். களைத்துப் போய் வந்த அம்மாவைக் கண்டதும் பதறியபடியே அவள் கேட்டாள்.

"என்னம்மா ஒரு மாதிரி வாறியள். போன காரியம் என்னவாயிற்று. காயா, பழமா?"

"பழம் தான்... நாளைக்கு பம்பலப்பிட்டி யிலுள்ள தனது அலுவலகத்தில் தன்னை வந்து சந்திக்கும் படி சொல்லியிருக்கிறார். நீ பயப்படாமல் போ. எல்லாம் நல்லபடி நடக்கும்."

மறுநாள் அகல்யா எதிர்பார்த்தபடி எல்லாம்



சுமூகமாகவே நடந்தேறியது. நேர்முகத் தேர்வின்போது, சிவனேசன் ஆங்கிலத்திலேயே அவளிடம் பல கேள்விகள் கேட்டார். அவளும் தனது அறிவைப் பிரயோகித்துத் தீர்க்கமாகவே விடை பகர்ந்தாள். அவளுடைய பயோடேட்டா எல்லாம் வாங்கிப் பரிசீலித்து பார்த்து விட்டு, தனது கிளைக் காரியால யத்தில், அவளுக்கு ஒரு வேலை போட்டுத் தருவதாகக் கூறிய போது அகல்யாவுக்கு மகிழ்ச்சி நிலை கொள்ளவில்லை. நியமனக் கடிதம் விரைவில் வீடு தேடி வரும் என்று கூறி அவளை வழியனுப்பி வைத்தார்.

இது நடந்து சரியாக ஒருமாதமாகி விட்டது. நாட்கள் போனதே தெரியவில்லை. சிவனேசன் வாக்களித்தபடி, அகல்யாவுக்கு அந்த நியமனக்கடிதம் வரவேயில்லை. இடையில் என்ன நடந்ததென்று தெரியவில்லை. அவள் தனது மனோ தர்மத்திற்கு விரோதமாக ஏன் இப்படி ஒரு காரியத்தைச் செய்தார். பாவம் அகல்யா. இந்தக் கொடூரமான ஏமாற்றம், அவளை அப்படியே நிலைகுலையச் செய்து விட்டது. சிவனேசனிடம் போய், இதற்காகச் சண்டை பிடிக்கவா முடியும்? அம்மாவுக்குத்தான் புத்தி போதாது. வாழ்க்கையில் சாக்கடையாக இப்படி எத்தனையோ அனுபவங்கள். மனிதனைப் படிக்க இந்த ஒரு பாடமே போதும்.

அம்மா எதிர் மறையாக நின்று கொண்டி ருந்தாள். இந்தப் பின்னடைவு அவளையும் பெரிதாகப் பாதித்திருக்க வேண்டும். முகத்தில் வாட்டம் தெரிந்தது. அகல்யா அழாக்குறையாக, பெரும் மனவருத்தத்தோடு கேட்டாள்.

"இதுக்கு என்ன சொல்லுறியள். சிவனேசன் இப்படி முதுகில் குத்திவிட்டாரே, இது பெரிய நம்பிக்கைத் துரோகமில்லையா?"

அதற்கு அம்மா சொன்னாள்.

"அவரையும் குறை சொல்லக்கூடாது. அவர் யாரிடமாவது எங்களைப் பற்றி விசாரித்திருக்கக் கூடும். அங்கே தான் தப்பு நடந்திருக்கு."

"என்னம்மா சொல்லுறியள்?"

" எங்களைப் பற்றி, அதிலும் குறிப்பாக உன்னைப் பற்றி யாரோ பிழையான தகவலைச் சொல்லியிருக்க வேண்டும். அது யாரென்று தான் கண்டு பிடிக்க வேணும்."

"அம்மா! எரிச்சலைக் கிளப்பாதேங்கோ. நான் பட்டை தீட்டிய வைரம் மாதிரி இருக்கிறன். எவன் என்னைப் பற்றி அப்படி என்ன சொல்லியிருக்க முடியும்? அவளைக் கண்டு பிடித்துச் சிலுவையில் அறையவா முடியும்? எங்களால். பார்ப்பம். செய்தி ஒரு நாளைக்கு கசியத் தானே போகுது. அந்த அக்கிரமக் காரன் யாரென்று அறிந்தால், என் மனம் தாங்காது. அப்படியே கொதித்துப் பொங்கி விடும். இந்த நெருப்பில் விழுந்து, அவன் சாகிறானா இல்லையா பாருங்கள்"

என்றாள் அகல்யா, தாங்கவொண்ணா மன

எரிச்சலுடன்... அம்மா மௌனமாக இதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். காலம் அதற்குப் பதில் சொல்லும் என்ற நம்பிக்கையோடு காத்திருந்தாள். அதற்கான காலமும் வந்தது. ஒரு சமயம் அம்மா வேகிற வெய்யில் தெருவில் வந்து கொண்டிருந்தாள். நடந்து முடிந்து போன, மிகவும் துக்ககரமான அந்தச் சம்பவத்திற்குப் பிறகு, மனிதர் முகத்தில் விழிப்பதே பாவம் என்று தோன்றியது அம்மாவுக்கு. சாலையைக் கடந்து வரும் போது, பூரணி எதிர்ப்பட்டாள். இவள் அவர்களுக்குத் தூரத்து உறவு. அவளுடைய கணவன் குமரன் ஒரு கம்பனியில் வேலை பாத்து வருவதாக ஞாபகம். மூன்று பெண்பிள்ளைகள், மூவரையும் கட்டிக் கொடுத்து, வெளிநாட்டில் வசதியாக வாழ்வதாகக் கேள்வி. குமரன் சிரித்து சிரித்துப் பேசிப் பழகும் பாசாங்குக் காரன்.

பூரணியை அம்மா கண்டும் காணாத மாதிரிப் போக முற்படுகையில், பூரணியின் குரல் அவளைத் தடுத்தி நிறுத்திற்று.

"என்னக்கா. அவசரமே. கொஞ்சம் நில்லுங்கோ. உங்களோடு ஒரு விடயம் கதைக்க வேணும்".

அம்மா சற்றுத் தயங்கியபடியே நின்றபோது அவளே பேச்சைத் தொடர்ந்தாள்.

"சிவனேசன் மாமாவைத் தெரியுமல்லே. அவர் அன்றைக்கொருநாள், அவரிட்டை உங்களைப் பற்றி விசாரித்தவராம்."

"அவன் என்ன சொன்னானாம்?" என்று அம்மா சற்றுக் காரமாகவே கேட்டாள். பூரணி உதட்டை பிதுக்கினாள்.

"தெரியேலை..."

அம்மாவுக்கு அதைக் கேட்ட பிறகு அங்கு நிற்க மனம் வரவில்லை. சொல்லிக் கொள்ளாமலே அங்கிருந்து கிளம்பிப் போனாள்.

அகல்யா அவளை எதிர் பார்த்தபடி வாசலிலே அமர்ந்திருந்தாள். சட்டென்று அம்மாவைக் கண்டதும் எழுந்து நின்றாள்.

"என்னம்மா முகம் அழுது வடியுது. ஏதும் விபரீதமாக நடந்ததே"

"என்னத்தை சொல்ல. நாங்கள் பயந்த மாதிரி சிவனேசனிடம் எங்களைப்பற்றி, விபரீதமாகக் கோள் மூட்டியது ஆரென்று தெரியுமே"

"ஆரம்மா?..."

"பூரணியின் கணவன் குமரனைத் தெரியு மல்லோ. அவனிடம் தான் எங்களைப்பற்றி விசாரித்த வராம் சிவனேசன்"

"அம்மா! அவர் எங்களைப்பற்றி அப்படி என்ன சொல்லியிருப்பார்."

"அது தான் எனக்கும் விளங்கேல்லை. உன்னைப்பற்றி அப்பிடிச் சொல்ல என்ன இருக்கு?"

" எங்கே தவறு நடந்திருக்கென்று எனக்கு விளங்குதம்மா. குமரன் ஆள் ஒரு மாதிரி. எழுந்த மானத்தில் பேசக்கூடிய பாசாங்குக்காரன். அக்காவுக் கல்ல, எனக்குத்தான். மூளை சரியில்லை என்று அவன் சொல்லியிருப்பான். அவனை யார் தட்டி கேட்பது? இதுக்குத் தீர்ப்பெழுத நாம் யார்? எல்லாம் ஆண்டவனே பார்த்துக் கொள்வார்."

அதைக் கேட்டபடி, கண்ணீர் மழையில் நனைந்தவாறு அம்மா மௌனமாக இருந்தாள்.

## இலங்கை இலக்கியப்பேரவையின் 2011 ம் ஆண்டிற்கான இலக்கிய நூல்கள் தெரிவு

### விருது பெறும் நூல்களும் சான்றிதழ் பெறும் நூல்களும்

*1)* ஆய்வு - "தென்னிலங்கையின் புராதன கோயில்கள்" - என்.கே.எஸ்.திருச்செல்வம்
சான்றிதழ் -"எகிப்து முதல் இலங்கை வரை இஸ்லாமியர்களின் இசை ஞானம்" - காத்தான்குடி பௌஸ்
*2)* காவியம் - "வாத்தியார் மாப்பிள்ளை" - ஜின்னாக் ஷரிபுத்தீன்
சான்றிதழ் - "தோட்டுப்பாய் முத்தம்மா" - பாலமுனை பாறூக்
*3)* கவிதை - "துயரக் கடல்" - கி.பி.நிதுன்
சான்றிதழ் - "கறுப்பு மழை" - பெரிய ஐங்கரன்
*4)* நாவல் - "சொடுதா" - எஸ்.ஏ.உதயன்
சான்றிதழ் - "அலைக்குமிழ்" - அகளங்கள்
*5)* சிறுகதை - "அனுஷியாவின் கரடிப் பொம்மை - சந்திரகாந்தா முருகானந்தன்
சான்றிதழ் - "அங்கயற்கன்னியும் அவள் அழகிய உலகமும்" - தாட்சாயணி
*6)* சிறுவர் இலக்கியம் - "சந்திரன் கதை" - கேணிப்பித்தன்
சான்றிதழ் - "படைப்புக்கள் மூலம் அல்லாஹ்வை அறிவோம்" -எம்.எஸ்.எம்.நுஸைர்
*7)* சமயம் - "முன்னோர் சொன்ன கதைகள்" - யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
சான்றிதழ் - "ஸ்ரீமத் பகவத் கீதை சுலோகம்" - கே.வி.குணசேகரம்
*8)* மொழிபெயர்ப்பு - "முல்லைத்தீவு தாத்தா" - திக்குவல்லை கமால்
சான்றிதழ் - "இந்த நிலம் எனது" - கெக்கிறாவ ஸூலைஹா
*9)* அறிவியல் - "எண்ணங்களும் வண்ணங்களும்" - செ.திருநாவுக்கரசு
*10)* பல்துறை - "நேற்றுப்போல இருக்கிறது" - கே.எஸ்.பாலச்சந்திரன்
*11)* நாடகம் - " குறுங்கூத்துக்கள்" - கு.இராயப்பு

த.வசந்தன்



# ஐரோப்பிய இடைக்கால அரங்கு

மத்திய காலத்தில் இருவகையான நாடகங்கள் காணப்படுகின்றன.

## 1) சமயம் சார்புடைய நாடகங்கள்

I) மறைப்பொருள் அல்லது மறைஞான நாடகங்கள் (Mystery Plays)

II) புனிதரின் அல்லது அற்புத நாடகங்கள் (Miraicle Plays)

III) xழுக்கப்பண்பு அல்லது அறப்போதனை நாடகங்கள் (Morality Plays)

## 2) சமய சார்பற்ற நாடகங்கள்

I) கிராமிய நாடகங்கள்
II) பாணர் இசை நிகழ்வு
III)வீர நாடகம்
IV) பரிகசிப்பு நாடகம்
V) ஒழுக்கப்பண்பு இடைநிகழ்வு

### மறைப்பொருள் அல்லது மறைஞான நாடகங்கள் (Mystery Plays)

மறைபொருள் நாடகம் என்பது சமயத் தொடர்புடைய கிறிஸ்தவ திருமுறையில் அல்லது விபுலியத்தில் உளடள கதையினை உள்ளடக்கமாகக் கொண்டது. இவ் நாடகங்கள் தொழில் மன்று களால்(கில்ஸ்) பருவ சுழற்சி நாடகங்களாக சுழற்சி அடிப்படையில் மேடையிடப்பட்டன.

1) தாயோக் சைக்கிள் (The York Cycle)
2) தாசெஸ்ரேர் சைக்கிள் (The Chesters Cycle)
3) தாவேக் பீல்ட்ட சைக்கிள் (The Work Field Cycle)
4) தாரென் அவுண்ட் சைக்கிள் (The Town Cycle)

இவ்நாடகங்கள் கோப்பாஸ் கிறிஸ்ரி விழாவில் (Corpus Chrsti) ஒரு முறையாக சுழற்சி முறையில் நிகழ்த்தப்பட்டது. இவை விஸ்தாரமான தயாரிப்பு உத்திகளையும், பெருங்காட்சிப் பண்பு, ஆடம்பரக் காட்சிச் சோடனை, பகட்டுப் பேச்சுக்களையும் அறிவுத் திறனூட்டும் வசனங்களை யும் கொண்டமைந்து மக்கள் கூடும் இடம், தேவாலய முன்றல்களில் நிகழ்த்தப்படுகின்றன.

### அற்புத அல்லது புனிதரின் நாடகங்கள் (Miraicle Plays)


அற்புத நாடகம் என்பது புனிதரது வாழ்வு, தியாகம், தொண்டு, அவர்களது படைப்புக்கள் மற்றும் வாழ்க்கை வரலாற்றைப் பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளன. இங்கு பிரமாண்டமான சண்டைகள், கொலைகள், யதார்த்தபுர்வமான கதைகள், மனோரதியக் காட்சியமைப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கமாகக் காணலாம்.

உ+ம் - : சென் கத்தறின் நாடகம்
( St. Chtharine Drama)
அடைக்கலமாதா நாடகம்
(The Miracle Of The Lady Drama)
மேரி மக்டலினா நாடகம்
(Mary Makdalena Drama)

## ஒழுக்கப்பண்பு அல்லது அறப்போதனை நாடகங்கள் (Morality Plays)

ஒழுக்கப்பண்பு நாடகங்கள் என்பது மக்களின் வாழ்க்கையை நெறிப்படுத்தும் விழுமியங் களை உள்ளடக்கமாக் கொண்டவை ஆகும். இங்கு குறித்ததொரு சமூக வகுப்பின் ஒழுக்க நியமங்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படும்.

உ+ம் –: வர்த்தகரும் குடியானவரும் நாடகம்



காற்றாடியும் ஆலைக்காரனும்

சீமாட்டியும் நாடகம்

எவ்விறிமான் நாடகம்

( Every Man)

இவ் நாடகங்கள் சமய தத்துவத்தோடு தொடர்புடைய சரியான, பிழையான ஒழுக்க விழுமி யங்களைத் தலைமைப் பாத்திமம் பிரதிபலிப்பதுடன் மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்க்கை நியமங்களைப் பிரதிநிதித்துவப் படுத்து கின்றன.

## மத்தியகால சமயம் சார்பற்ற நாடகங்கள் / லௌகீகப் பண்புடைய நாடகங்கள்

I) கிராமிய நாடகங்கள்

இவை கிறிஸ்துவிற்கு முற்பட்டவரின் பிறப்பு இறப்புக்களுடன் தொடர்புடைய பருவகாலக் கதைகளை பிரதிபலிக்கின்றன. இவை கிராமிய மக்களினுடைய வாற்போர், மல்யுத்தத்துடன் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன.

II) பாணர் இசை நிகழ்வு

உரோமிய கதைப்பாடல் ஓதும் மரபு, ஊமங்களில் அடியாக கிராமிய மட்டங்களில் கதைகளை பிரதிபலிக்கின்றன. இவை கிராமிய மட்டங்களில் காணப்படுகின்ற காரணம் அடித்தல், செப்படிவித்தை காட்டுதல், கதை ஓதுதல், பாடுதல், ஆடுதலுடன் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன.

III) வீர நாடகம்

15ம் நூற்றாண்டினல் பிரபல்யமான வடிவமாக வீரர்களின் வரலாற்று வீரதீரங்களை உள்ளடக்கமாகக் கொண்ட ஓதற் பாங்கான கிராமிய மக்களின் வடிவமாகக் காணப்படுகின்றன.

IV) பரிகசிப்பு நாடகம்

பரிகசிப்பு நாடகம் என்பது மனிதனின் வாழ்க்கை அனுபவங்களை கேலிக்கிடமான முறையில் விகடப் பண்புடன் வெளிப்படுத்தும் கிராமிய மக்களின் வடிவமாகக் காணப்படுகின்றது.

உ+ம் –: யோன் கே பூட் நாடகம்

இந்நாடகத்தின் உள்ளடக்கமாக ஒரு மனைவி யாவள் தன் காதலனுடன் காதல் லீலையில் இரக்கும் வேளையில் தன் கணவனை கேலி செய்தல், பார்ப் போரிடம் பரிகசிப்பை, கேலியை ஏற்படுத்து கின்றது.

V) ஒழுக்கப்பண்பு இடை நிகழ்வு

கிராமிய மக்களின் அரங்க வடிவமாக நீண்ட நாடகங்கட்கு இடையில், பெரிய விருந்தின் இடையில் நிகழ்த்தப்படுகின்றது. இங்கு தனது மையப் பாத்திரம் தனது ஏதோ ஒரு குணாம்சம் காரணமாக பாவச் செயல்கள், காம இச்சையில் திசைமாளித் துன்பங்களை அனுபவிப்பதை உள்ளடக்கமாகக் கொண்டு மக்களை நெறிப்படுத்தும் வடிவமாகக் காணப்படுகின்றது.

## அந்தனி ஜீவாவின் அரை நூற்றாண்டு அனுபவங்கள்

# ஒரு வானம்பாடியின் கதை

8



அந்தனி ஜீவா

எனது "வீதி" நாடக முயற்சிகளை மலையகத்தில் முன் எடுத்தேன். இலங்கை தமிழ் சூழலில் வீதி நாடக செயற்பாடுகள் தீவிரமாக முன் எடுக்கப் படவில்லை. வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக மாறிய80, 90 களில் வீதி நாடகங்கள் அதிக கவனிப்பை பெற்றன. வீதி நாடகங்கள் மக்களுடன் நேரில் பேசுவதற்கு சிறந்த ஊடகமாக அமைந்தது.

கண்டியில் நான் பணியாற்றிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் மூலம் எனது வீதி நாடக செற்பாடுகளை முன்னெடுக்க முனைந்தேன். அதே வேளையில் மத்திய மாகாண கல்வி அமைச்சராக இருந்த, கலைத் துறையில் ஈடுபாடுள்ள திரு. வி.புத்திரசிகாமணி தமது அமைச்சின் நிதியுதவியின் மூலம் நிதி வழங்கி நாடகப் பயிற்சிப் பட்டறைகள் நடத்துவதற்கு உதவினார். இந்தப் பயிற்சி பட்டறை நடத்துவதற்கு கவிஞர்.சு.முரளிதரனும் ஒத்துழைப்பு வழங்கினார்.

கண்டி சத்தியோதய மண்டபத்திலும், மாத்தளை இந்து மகா வித்தியாலயத்திலும், ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில், நுவரெலியா திரியிவக் கல்லூரியிலும் வீதி நாடகப் பயிற்சிப் பட்டறைகளை நடத்தினோம். பெருந்தோட்டத்துறையைச் சேர்ந்த இளைஞர் பலர் பயிற்சி பட்டறையில் பங்கு பற்றினார்கள்.

இதன் பின்னர், கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் வீதி நாடகப் பயிற்சி பட்டறை நடத்தப்பட்டு "வெளிச்சம்" என்ற பெயரில் வீதி நாடகக்குழு ஒன்றை உருவாக்கினோம். இதன் பிரதான செயற்பாட்டாளராக நான் செயற்பட்டேன்.

"வெளிச்சம்" நாடகக் குழுவின் பிரதான செயற்பாட்டாளராக அந்தனி ஜீவா உள்ளார். இவர் நாடகங்களை இயக்குவதுடன் வீதி நாடகங்களில் பாத்திரமேற்று நடிக்கவும் செய்வார். அந்தனி ஜீவா மலையகத்தில் இன்று பல தளங்களிலும் செயற்படும் உழைப்பாளியாக உள்ளார். நாடகத்துறையில் 25 வருடத்திற்கு மேலான ஈடுபாடு கொண்டவர்.

"இலங்கை வீதி நாடக முயற்சிகள் தீவிரமாக காணப்படவில்லை. காமினி ஹத்தெட்வேகமயின் குழுவேமலையக மக்களிடையே சில வீதி நாடக முயற்சிகளை நடத்தியுள்ளது.மக்களை விழிப்பூட்டு வதற்கும் அவர்களிடையே நேரடியாகச் சென்று பேசுவதற்கும் வீதி நாடகம் சிறந்த ஊடகமாகும். மலையக பெருந்தோட்டமக்களின் பிரச்சினைகளை வீதி நாடகம் மூலம் எடுத்துச் சொல்கிறோம். இதனால் அவர்களின் பிரச்சினைகளை அவர்களே உணர்ந்து தீர்வு தேடுகின்றனர்.

"வீதி நாடகம் என்பது கூட்டு முயற்சியாகும். நடிகர் மாத்திரமன்றி பார்வையாளர்களும் முக்கிய மானவர்களாகின்றனர். நாங்கள் இந்த வீதி நாடகங் களில் மக்களின் வாழ்வியலோடு இணைந்த "தப்பு" இசைக்கருவியை பயன்படுத்துகின்றோம். பங்கு பற்றுபவர்களும் தோட்டப்புறத்தைச் சேர்ந்த நடிக, நடிகையாவர். அதனால் தோட்ட மக்களின் உணர்வு களை சிறப்பாக வெளிப்படுத்த முடியும்"."மலையக மக்களில் எமது அரங்கு" என்ற தலைப்பில் "மூன்றாவது மனிதன்" சஞ்சிகையில் (ஆகஸ்ட்-செப்ரெம்பர் 2002) இடம் பெற்ற கட்டுரையில் காணப்படும் சில குறிப்புக் களை தந்துள்ளேன்.

வெளிச்சம் வீதி நாடகக் குழு ஒவ்வொரு மாதம் தோட்டங்களுக்கு சென்று நாடகங்களை மக்கள் முன்னிலையில் நடத்தி வந்தோம்.எனது குடும்ப பிரச்சினை காரணமாக கடந்த சில ஆண்டுகளாக கொழும்பை வாழ்விடமாகக் கொண்டதால் நான் தொடக்கி வைத்த வீதி நாடக முயற்சிகள் தொடர்கின்றன.

இனி எனது கலை இலக்கிய செயற்பாடுகள் பற்றிச் சொல்ல வேண்டும். சிறிது பின்னோக்கிப் பார்க்க

வேண்டிய தேவையொன்று ஏற்படுகிறது. இதனை நான் எனது பதிவுகளில் முன்னரே சொல்லியிருக்க வேண்டும். மீண்டும் நான் கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கிறேன். கொழும்பில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் செயற்பட்டு வந்த நான் 1978ம் ஆண்டு தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் திருப்பூரில் நடத்திய இலக்கிய மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டேன். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மிகப்பெரிய இலக்கிய அமைப்பு. தமிழ்நாடு கலை இலக்கிய பெரு மன்ற மாநாடு 1978-ம் ஆண்டு ஆகஸ்ட் 12,13 ஆகிய இரண்டு திகதிகளில் 4வது மாநில மாநாடு திருப்பூரில் நடைபெற்றது. நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் வெளியிட்டுள்ள எழுத்தாளர் பொன்னீலன் எழுதிய "ஒரு ஜீவநதி" நூலினது ஒரு சிறு குறிப்பைத் தருகிறேன்.

"இந்த மாநாட்டில் வெளிமாநிலங்களி லிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் விருந்தினர்கள் சிலர் வந்திருந்தார்கள். இலங்கையிலிருந்து குறுந்தாடி யும் துடிப்பும் கொண்ட அந்தனிஜீவா வந்திருந்தார். கர் நாடகத்திலிருந்து கவிஞர் கே.வி.ராஜகோபால், கேரளா விலிருந்து எழுத்தாளர் உன்னிகிருஸ்ணன் ஆகியோர் வந்திருந்தனர். இவர்களில் தங்களின் சகோதர அமைப்புக்களின் சார்பாக தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர். தங்கள் பகுதிகளில் இழையோடும் கலை இலக்கியப் போக்குகளை ஆழமாகவும் சுவாரசிய மாகவும் பேசினார்கள். முதலில் கலைஞனை கலை ஞனாகப் பார்க்க வேண்டும். நீ இப்படி எழுது அப்படி எழுது என்று ஆணைகள் இடுவதென்பது நடக்காது என்று உன்னிகிருஸ்ணன் எடுத்துரைத்தார். தனது பேச்சினூடே கவிஞர் கே.வி.ராஜகோபால் தனது கன்னடக் கவிதையொன்றை வாசித்துக் காட்டினார். அந்தனிஜீவா இலங்கையின் இலக்கியப் போக்குகளை சுட்டிக் காட்டிப் பேசினார்.

"ஒரு ஜீவநதி" என்ற நூலில் படைப்பாளி பொன்னீலன் எழுதிய குறிப்புக்கள் இவை. திருப்பூரில் நடைபெற்ற இலக்கிய மாநாட்டில் எனக்குப் பல அனுபவங்கள் கிடைத்தன. நான் யாரைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டேனோ அந்த எழுத்துலக ஜாம்பவான் ஜெயகாந்தன் அந்த மாநாட்டிற்கு வருகை தந்திருந்தார். திருப்பூருக்கு நான் சென்ற ரயிலில் தான் ஜெயகாந்தனும் வந்திருந்தார். ரயில் நிலையத்தில் எங்களை வரவேற்ற கவிஞர் கே.வி.அருணாசலம் எழுத்தாளர் ஜெயகாந்தனுக்கு என்னை இலங்கை யிலிருந்து வந்திருப்பதாக அறிமுகப்படுத்தினார். "ஓ...நம்ப சிலோன்காரரா..." என்று அன்போடு எனது கரத்தைப் பற்றிய படி, அவருக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்த "இண்டியன் ஹவுஸ்" என்ற ஓட்டலுக்கு என்னையும்,இலக்கிய ஆய்வாளர் சிதம்பர ரகுநாதனை யும் அவருக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரில் அழைத்துச் சென்றார். எழுத்தாளர் ஜெயகாந்தனோடு இரண்டு நாட்கள் உரையாடியது, பலதும் பத்துமாகப் பேசியது பின்னர் அவரின் அழைப்பின் பேரில் சென்னை சென்று சந்தித்தது எல்லாம் இனிமையான அனுபவங்களாகும்.அதனை பின்னர் "ஜெயகாந்தனைக் கண்டேன்" என்ற தலைப்பில் தினகரன் வார மஞ்சரியில் தொடர் கட்டுரையாக சில வாரங்கள் எழுதினேன்.

அதன் பின்னர் இரண்டாவது தடவை 1980களில் வீதி நாடகப் பயிற்சியாக தமிழகம் சென்ற போது எழுத்தாளர் ஜெயகாந்தனைச் சந்தித்து அவரோடு நடத்திய நீண்ட உரையாடல்கள் இவற்றை பின்னர் நாடு திரும்பியதும் "ஜெயகாந்தன் ஒரு பார்வை" என்ற தலைப்பில் தினகரன் வார மஞ்சரியில் நான்கு வாரங்கள் எழுதினேன். ஆனால் இந்த இரண்டு கட்டுரைகளிலும் ஜெயகாந்தன் பற்றிய பல விடயங்கள் பதிவு செய்திருந்தேன். இதனை ஒரு சிறு நூலாக வெளியிட எண்ணியிருந்தேன், ஆனால் 83-கறுப்பு ஜுலை கலவரத்தில் கண்டியில் நான் சேகரித்து வைத்திருந்த இந்த ஆவணங்களை இழந்துவிட்டேன். பழைய தினகரன் இதழ்களை தேசிய சுவடிக்கூட ஆவணக்காப்பகத்தில் தேடி எடுக்க வேண்டும் என்ற கனவு இன்னும் நனவாகாமலிருக்கிறது.

மீண்டும் மாநாட்டு நிகழ்ச்சிக்கு வருகிறேன். கலை இலக்கிய பெருமன்றத்தலைவர் பேராசிரியர் நா.வானமாமலை தலைமையில் எழுத்தாளர்களான சிதம்பர ரகுநாதன், ஜெயகாந்தன் பெருமன்ற செயலா ளரான தா.பாண்டியன் முன்னிலையில் கருத்தரங்கில் "ஈழத்தில் தமிழ் நாடகம்" என்ற தலைப்பில் எனது ஆய்வுக் கட்டுரையை வாசித்தேன். மறுநாள் காலை பேராசிரியர் நா.வானமாமலை நான் தங்கியிருக்கும் அறைக்கு ஒருவரை அழைத்து வந்து இவர் தான் கவிஞர் மீரா என்று எனக்கு அறிமுகப்படுத்தியதுடன் எனது "ஈழத்து தமிழ் நாடகம்" என்ற தட்டச்சுப் பிரதியை வாங்கி இதனை நீங்கள் "அகரம்" வெளியீடாக வெளியிட வேண்டும் என வேண்டுகோள் விடுத்த துடன், கவிஞர் மீராவிடம் தட்டச்சுப் பிரதியைக் கொடுத்து இதற்கு நானே ஒரு முன்னுரை எழுதித் தருகிறேன் என்றார்.

பகல் சாப்பாட்டு இடைவேளையின் போது கவிஞர் மீரா அதனை அகரம் வெளியீடாக வெளியிடு வதாகக் கூறி,தன்னோடு தொடர்பு லைத்திருக்குமாறு அவரது முகவரியையும் தந்தார். அவரோடு கவிஞரங் கில் பங்குபற்ற வந்திருந்த கவிஞர்கள் சிற்பி, புவியரசு, சக்தி மற்றும் சிலரையும் எனக்கு அறிமுகப்படுத்தினார். தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாநாடு முடிந்ததும் கவிஞர் சக்தி(சிவசுப்பிரமணியம்) என்னை தன்னோடு சென்னை அழைத்துச் சென்று சென்னை

தாம்பரத்திலுள்ள அவரது வீட்டில் தங்க வைத்தார்.நாடு திரும்பியதும் "ஈழத்தில் தமிழ் நாடகம்" என்ற கருத்தரங்கு கட்டுரையை கவிஞர் மீரா, அகரம் வெளியீடாக அச்சிட்டு எழுத்தாளரும், விமர்சகருமான நம்மவரான எஸ்.எம்.ஜே.பைஸ்தீன் தமிழகம் சென்று கவிஞர் மீராவை சந்தித்த போது எனது நூலின் நூறு பிரதிகளை அவரிடம் கொடுத்து அனுப்பியிருந்தார். அவரும் சிரமம் பாராது என்னிடம் சேர்த்தார். நூலைப் பதிப்பித்த கவிஞர் மீராவையும் நூலின் பிரதிகளை கொண்டு வந்து சேர்ப்பித்த பைஸ்தீனையும் நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன்.

"ஈழத்தில் தமிழ் நாடகம்" என்ற சிறிய நூல் தான் எனது அச்சில் வெளி வந்த முதல் நூல், இது 1981 ஏப்ரல் மாதம் வெளிவந்தது. இதற்கு ஓர் சிறப்பான "முன்னீடு" பேராசிரியர் நா.வானமாமலை எழுதியுள்ளார்.

கலை இலக்கிய பெருமன்ற மாநாட்டில் கலந்து கொண்டு நாடு திரும்பிய பின்னர் எண்பதுகளில் கண்டியில் "மலையக கலை இலக்கியப் பேரவை"என்ற அமைப்பை நிறுவினோம். என்னோடு இந்த அமைப்பின் ஸ்தாபகராக பத்திரிகையாளர் க.ப.சிவம், கேகாலையில் பாடசாலை அதிபராகக் கடமையாற்றிய ஏ.பி.வி.தோமஸ், கவிஞர் மலைத்தம்பி, கண்டி கலாசார சங்கத்தின் தலைவரான சுப்பிரமணியம் ஆகியோர் ஆரம்ப கர்த்தாக்களாக செயற்பட்டனர்.

தொடரும்...

# சொல்லொன்றில் வாழ்தல்

சொல்லொன்றில் வாழ்தல்

காலமதன் சூத்திரத்தின்
கணக்கொன்றும் புரியாமல்
நேத்திரத்தின் பாத்திரத்தில்
சேர்த்திருந்த கனவுகளை
செலவு செய்து மகிழ்வுறு முன்...

சித்தத்தை சிதைக்கின்ற
அர்த்தமில்லா வாழ்க்கைதனை
சத்தமின்றி சாய்த்திடவே
சந்தர்ப்பம் பார்த்திருக்க...

திமிரேறி தினவெடுத்த
பாறையொன்றின் மெல்லிடுக்கில்
விருட்சிக்க விழுகின்ற
சின்னதொரு விதை போலவுன்
சொல்லொன்று என்னுள்ளே
சொல்லாமல் வந்திறங்கும்...

வாழ்வறுந்து போகுதென
வருந்தியழத் தெரியாது
மீண்டுமொரு எருவாய்
வீழுமிலை போலுந்தன்
சொல்லொன்று என்னுள்ளே
சொல்லாமல் வந்திறங்கும்...

காவோலைக் கரகரப்பாய்
சலனிக்கும் மன வெளியில்
சயனத்தின் சாந்தமாய்
மயிலிறகின் வருடலாயுந்தன்
சொல்லொன்று என்னுள்ளே
சொல்லாமல் வந்திறங்கும்...

ஈரத்தில் அமிழ்ந்தாழந்த
இமைச் சிறகை உலர்த்த வரும்
பஞ்சுப் பொதியாகவுந்தன்
சொல்லொன்று என்னுள்ளே
சொல்லாமல் வந்திறங்கும்...

(வெடி)குண்டுருவிப் போட்ட பின்பு
பொசுங்கி விட்ட புல் வெளியாய்
பண்கெட்டவென் மனத்தில்
பச்சையான புல்லொன்று
இச்சையாக நிமிர்ந்தெழவுன்
சொல்லொன்று என்னுள்ளே
சொல்லாமல் வந்திறங்கும்!

யோகேஷ்

**யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**

# கதைகள் தான் சொல்கிறேன்

8



வங்கியில் நடந்து வந்த அடகு சேவை நிறுத்தப் பட்டது குறித்து எழுதியிருந்தேன். அதற்கு சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னர் வங்கிக் கொள்ளைகள் படிப்படியாக அதிகரிப்பதை அவதானித்த மேலிடம் வேறொரு நடவடிக்கையினை மேற்கொண்டதைக் குறிப் பிடத் தவறி விட்டேன். அதை இம்முறை பதிவு செய்து விட்டு முன்னையதைத் தொடரலாம் என எண்ணுகிறேன்.

அக்காலத்தில் இன்று போல் வங்கியின் சேவை களை உபயோகிக்கும் பழக்கம் மக்களிடமுமில்லை. மக்களின் வீட்டு வாசலுக்கு அன்று மட்டுமல்ல, இன்று இலத்திரனியற்சாதனங்கள் மூலம் அவரவர் வீட்டின் உள்ளேயே சென்று சேவையாற்றும் நிலை வங்கி களிடமும் இருக்கவில்லை. குறிப்பிடத்தக்க வாடிக்கை யாளர்களை மட்டுமே கொண்டிருந்த வங்கிகள் நகரங்களிலேயே கிளைகளை அமைத்திருந்தன. மக்கள் வங்கி யாழ். குடாநாட்டிலே யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி யிலும் காங்கேசன்துறையிலுமாக இரு கிளைகளையே கொண்டிருந்தது.

இந்நிலையில் யாழ். கூட்டுறவு வங்கியை மக்கள் வங்கியுடன் இணைத்தார்கள். இதனால் கூட்டுறவு வங்கிக் கிளைகள் அனைத்தும் மக்கள் வங்கியின் கிளைகளாக இயங்கத் தொடங்கின. இதன் மூலம் கிராமப் புறத்தின் முக்கிய மையங்களிலும் வங்கிக் கிளைகள் சேவையாற்ற அப்பிரதேச மக்களும் பயனடையும் நிலை ஏற்பட்டது. எழுபதுகளின் நடுப் பகுதியில் மக்கள் வங்கி தன் செயற்பாட்டை விரிவாக்க முற்பட்டு மேலும் சில கிளைகளைத் திறந்தது. விவசாய விரிவாக்கல் நிலையங்களில் இலங்கை வங்கியின் விரிவாக்கற்கிளைகள் திறக்கப்பட்டன. இவ்வாறு விரிவு பெறத் தொடங்கினாலும் இப்போதுள்ளது போன்று பல்கிப் பெருகும் நிலை ஏற்படவில்லை. போர் என்ற நிலை தோற்றம் பெறுமுன் போராட்டம் என்ற ஆரம்ப நிலையிலேயே வங்கிச் சேவையில் பாதிப்புகள் ஏற்படத் தொடங்கின.

அடிக்கடி கொள்ளைகள் இடம்பெறுவதால் அவற்றைத் தவிர்ப்பதற்கான பல முயற்சிகளை வங்கி மேற்கொண்டது. அவற்றுள் ஒன்றாக சில கிளைகளை அவை இருந்த இடங்களிலிருந்து அகற்றி வெவ்வேறு கிளைகளுடன் இணைத்து நடைபெறச் செய்யும் அதிரடி முடிவுக்கு எம் தலைமைப் பீடம் வந்தது. இதனால் கிளைகளுக்குக் கூடிய அளவு பாதுகாப்பை நல்கலாம் என அவர்கள் கருதினர்.

மக்கள் வங்கியின் புத்தூர்க் கிளை காங்கேசன்துறைக் கிளையுடனும் சங்கானை சுன்னாகத்துடனும் பளை சாவகச்சேரியுடனும் புங்குடுதீவு யாழ். பிரதான வீதியுடனும் யாழ். நவீன சந்தியில் இயங்கிய கிளையும் நல்லூர் கிளையும் யாழ். ஸ்ரான்லி வீதியுடனும் இணைக்கப்பட்டன. 1978ஆம் ஆண்டு மார்கழி மாதம் இது நிகழ்ந்தது.

இந்நடவடிக்கையால் வாடிக்கையாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டனர். வாடிக்கையாளரின் போக்கு வரத்து வசதி பற்றிய எந்தச் சிந்தனையுமின்றி இவை இணைக்கப்பட்டதால் பெரும்பாலான மூடப்பட்ட கிளைகளின் வாடிக்கையாளர்கள் வங்கிக்கு வந்து போவதில் பெரும் சிரமங்களை அனுபவித்தனர்.

உதாரணத்திற்கு புத்தூர்க் கிளை முதலில் காங்கேசன்துறைக்குக் கொண்டு செல்லப்பட்டது. புத்தூரிலிருந்து நேரே காங்கேசன்துறைக்குப் போகக் கூடிய பொதுப் போக்குவரத்து வசதி எதுவுமில்லை. எனவே, இரண்டு மூன்று பேருந்துகளில் மாறி மாறி ஏறிப் பயணிக்க வேண்டிய நிலை. ஓர் ஊரிலுள்ள கிளையில் அந்த ஊர் மக்கள் மட்டுமே வாடிக்கை யாளர்களாக இருப்பார்களென்று கூற முடியாது. அதைச் சூழ உள்ள பெரியதோர் இடப் பரப்பில் வாழ்வோர் அங்கு வாடிக்கையாளராக இருப்பார்கள். அவர்களுள் ஒவ்வோர் ஊர் மக்களும் வெவ்வேறு

வகையான பிரச்சினைகளை எதிர்கொள்ள நேர்ந்தது.

சிறிய வங்கிக் கட்டடத்துள் இரண்டு மூன்று கிளைகளை அடக்கியதும் இட நெருக்கடி அடுத்த பிரச்சினை ஆகியது.

இவற்றைப் பற்றிய புகார்கள் சென்றதும் புத்தூர் கிளையை சுன்னாகத்துடன் சேர்த்தார்கள். இது மற்றொரு வகை அலைச்சலையும் ஏற்படுத்தியது.

வாடிக்கையாளர்கள் எல்லோரும் தினசரிகளை அன்றாடம் வாசிப்பவர்களாக இருக்க மாட்டார்கள். வாசித்தாலும் "வங்கிக் கிளை இடமாற்றம்" என ஒரு மூலையில் இருக்கும் சிறு செய்தியை அவர்கள் அவதானிப்பார்கள் எனவும் எதிர்பார்க்க முடியாது. அவர்கள் ஏற்கனவே சென்ற காங்கேசன் துறைக்குப் போய் அங்கிருந்து செய்தியறிந்து சுன்னாகத்திற்கு வர நேர்ந்தது. முன்னைய மாற்றம் பற்றி மட்டுமே அறிந்திருந்த ஒருவரின் கூற்றை நம்பி காங்கேசன் துறைக்குப் போய்த் திரும்பியவர்களுமிருந்தனர்.

இது என்ன பெரிய அலைச்சல்! பின்வந்த காலத்தில் இவர்கள் பட்டபாடுகளுடன் ஒப்பிடுகையில் இது தூசு தான்.

இவ்வாறு அகற்றப்பட்ட கிளைகளை மீள அதே இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு அனுமதி பெற, 1996-ல் யாழ்ப்பாணம் முழுமையாகக் கைப்பற்றப்பட்ட பின்புங்கூட இயலாதிருந்தது.

குடாநாட்டு நிலைமை மோசமடையும் முன்னர் 1979, 1980 ஆகிய ஆண்டுகளில் ஓரிரு கிளைகள் அவை முன்னிருந்த இடங்களில் இயங்க அனுமதியளிக்கப்பட்டு மீளத் திறக்கப்பட்டதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

சங்கானையில் பொலிஸ் நிலையம் இருந்ததால் சுன்னாகம் கொண்டு செல்லப்பட்ட சங்கானைக் கிளை மீள முன்னிருந்த இடத்தில் இயங்கத் தொடங்கியது. சுமுகமாக அது நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் ஓர் இரவு அங்கிருந்த நகைகள் வைக்கப்பட்ட இரும்புப் பெட்டகங்கள் தூக்கிச் செல்லப்பட்டு மறுநாட்காலை வல்லைவெளியில் அவை உடைந்த நிலையில் வெறுமையாய்க் காணப்பட்டதும் அடகுச் சேவையை முற்றாக நிறுத்தும் முடிவிற்கு வங்கி வர ஒரு காரணமாயமைந்தது. அத்துடன் சங்கானைக் கிளை மீண்டும் அங்கிருந்து அகற்றப்பட்டு யாழ். கன்னாதிட்டிக் கிளையுடன் இணைக்கப்பட்டது. மீண்டும் சங்கானையில் இந்த வங்கிக் கிளையை இயங்க வைக்க பல வகைகளில் முயன்றும் இயலாதிருந்தது.

வட்டுக்கோட்டை, காரைநகர், மாதகல், இளவாலை, சண்டிலிப்பாய் முதலிய இடங்களை எல்லைகளாகக் கொண்ட ஒரு பெரும்பிரதேச மக்கள் இக்கிளை இயங்காததால் வங்கியை நாடி நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருந்தது.

உதாரணத்துக்கு இக்கிளையினை எடுத்துக் கொண்டாலும் ஏனைய கிளைகள் இடம் மாற்றப் பட்டதாலும் இதே போன்ற கஷ்டங்களையே மக்கள் அனுபவித்தனர்.

நான் வளர்ந்த ஊரவரும் சங்கானைக் கிளையினால் பயன் பெற்றவர்கள் என்பதால் அப்பிரதேச மக்களின் கஷ்டங்களை நான் அதிகம் உணர்ந்தேன். இதனால் இக்கிளையை மீள ஆரம்பிக்க வேண்டுமென்ற ஆர்வம் எனக்கிருந்தது.


2000ஆம் ஆண்டு வெடித்த போரின்போது வங்கிகளும் இடம்பெயர நேரலாம் என்ற ஐய நிலையில் வலிகாமத்தில் சில சேவை நிலையங்களை மக்கள் வங்கி ஆரம்பித்தது. இதில் சங்கானை சேவை நிலையம் நான் முகாமையாளராக இருந்த கிளையின் அலகாக இருந்தது. இதைப் பயன்படுத்தி அந்த அலகை வலுவாக்கி ஒரு கிளையாக்குவதற்கான பங்களிப்பை நான் செய்தேன். இன்று சங்கானையூடாகச் செல்லும் போது பல்வேறு வங்கிகளின் கிளைகள் அங்கிருப்பதைக் காணுகையில் பழைய நினைவுகள் வந்து போகும்.

அதே போன்றே 1978ஆம் வருடம் நான் புத்தூரில் பணி புரிகையில் அக்கிளையை இடம் மாற்றிய நாள் இன்றைய புத்தூர் சேவை நிலையத்தைக் காணுகையில் நினைவில் தோன்றும்.

ஒரு சில நிமிடங்களிலோ மணித்தியாலங்களிலோ எதையும் சிதைத்தோ அழித்தோ விடலாம். அதை உருவாக்கப் பல நாட்கள் சென்றிருக்கும். அதை விட அதனை மீள உருவாக்குவதற்கு நீண்ட காலம் எடுக்கும். எமது அனுபவம் இதைத் தான் உணர்த்துகிறது.


## நூல் அறிமுகம்

**நூல்** - நெஞ்சில் பதிந்துள்ள நினைவுகளில் பேராசிரியர் கா.சிவத்தம்பி




**ஆசிரியர்** - தெணியான்

**வெளியீடு** - குமரன்

**விலை** -400/-

ம.விஜிதா

# நாளைய தீர்ப்பு?



உயர் நீதிமன்ற நீதிபதியான வசந்தாவிற்கு நாளை முடிவிற்கு வரும் விசாரணை யாருக்கு தீர்ப்பு வழங்குவது என்ற எண்ணம் அவள் மூளையைக் குழப்பி தூக்கத்தை விழுங்கியது.

எத்தனையோ தீர்ப்புக்களை வழங்கிய நீதி தேவதை அவள், ஆனால் இவ் வழக்கிற்கு மட்டும் மூன்று தவணைகளை ஒத்திப் போட்டு விட்டாள். நாளை, தீர்ப்பு முடிவிற்கு வர வேண்டும்.

வழக்கில் சம்பந்தப்பட்ட பிரதான நாயகி பதின்னான்கு வயது நந்தினி. இவள் கடந்த எட்டு வருடங்களிற்கு முன் இந்தோனேசியாவில் ஏற்பட்ட நில அதிர்வு தாக்கத்தினால் இலங்கைத் தீவில் ஏற்பட்ட "சுனாமி" என்ற கொடிய பேரழிவில் தன் பெற்றோருடன் கடற்கரைக்குச் சுற்றுலா சென்ற வேளை காணாமல் போன பாலகி.

அவளுடைய தாயும், தந்தையும் தனியார் நிதிக் கம்பனிகளில் உயர் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்கள். பணமே வாழ்க்கை என்ற நோக்கோடு கால நேரம் பாராது அயராது உழைக்கும் அவர்கள் இவள் கண் முளிக்கும் முன்னர் வெளியேறி அவள் கண் அயர்ந்த பின்னர் தான் வீட்டிற்குள் நுழைவார்கள். ஞாயிறு, போயா தினம் என வரும் எந்த விடுமுறையும் அவர்களிற்கு கிடையாது. அவளின் எந்தவொரு பிறந்த நாளையும் வெகு விமர்சையாக கொண்டாடும் தினம் மட்டுமே அவள் பெற்றோரின் முகத்தை கண்குளிரப் பார்ப்பாள். பெற்றோரின் அன்பும் அரவணைப்பும் தெரியாத இவளுக்கு அவளின் தாத்தா,பாட்டி மட்டுமே நெருங்கிய உறவாக இருந்தனர்.

ஒருமுறை அவளின் பெற்றோர் கம்பனி மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட சுற்றுலாவிற்கு அவளையும் அழைத்துச் சென்ற போதே இழப்பு ஏற்பட்டது.

சுனாமியின் தாக்கத்தைக் கண்ட அவளின் செய்வதறியாது அவளை பரிதவிக்க செய்து விட்டு தப்பிக் கொண்டனர்.

சம்பவத்தில் மாட்டிக் கொண்ட பிறிதொரு தம்பதிகளான கண்ணனும்,ராதாவும் அவளின் பரித விப்பை உணர்ந்து அவளை மீட்டு எவரிடம் கையளிப்பது என்று தெரியாமல் தம்மோடு அழைத்துச் சென்றனர்.

கண்ணன் அரச ஊழியர், ராதா தையல் தைப்பவள். இவர்களுக்கு ஒரே மகன் ஆறு வயதில் இருந்தான். இவளுக்கும் ஒரே வயதாகையால் தமது இரட்டைக் குழந்தை போல் வளர்த்து வந்தனர்.

அவர்கள் காட்டிய அன்பும் அரவணைப்பும் தமையனின் பாசத்திற்கும் கட்டுண்டு வளர்ந்தவளுக்கு அவளின் பூப்புனித நீராட்டு விழாவிலே வந்தது பெரிய பூகம்பம்.

நந்தினியின் பெற்ற தாயான சகுந்தலா, ராதாவின் பாடசாலைச் சிநேகிதி. சகுந்தலா தொழில் நிமித்தம் இடம் மாறிச் சென்றாலும் தொலைபேசி வாயிலாக அவர்கள் நட்பு விரிந்து கிடந்தது.

ராதா தன் சிநேகிதியை மகள் நந்தினியின் நீராட்டு விழாவிற்கு வருமாறு அழைப்பு விடுத்திருந் தாள். சகுந்தலாவும் பல வருடங்கள் கழித்து சிநேகிதி யைப் பார்க்கும் சந்தர்ப்பம் இது தான் என்று ராதாவின் வீட்டிற்குச் சென்றிருந்தாள்.

ராதாவின் வரவேற்பறையில் தோரணங் களின் இடையே சுவரில் மாட்டியிருந்த தன் மகளின் சிறுபராய புகைப்படங்களை பார்வையிட்ட சகுந்தலா விற்கு மகிழ்ச்சி கலந்த பேரதிர்ச்சியே தலை விரித்து நின்றது.

தன் சந்தேகத்தை ராதாவிடம் கேட்டு தெளிவு பெற்றாள்.

பட்டுச் சேலை உடுத்து ஆபரணங்கள் அணிந்து தலை நிறைய பூக்களுடன் அம்மன் போல் அலங்கரிக்கப்பட்டுக் கொண்டிருந்த ராதாவின் நந்தினியின் அறைக்குச் சென்ற சகுந்தலா,

"நந்தினி..." என்றாள்.

"............"

புதுமுகமாயிருந்த சகுந்தலாவை "யார் நீங்கள்?" என்ற தோரணையில் நந்தினியின் பார்வை கேள்வி கேட்டது.

"நந்தினி உன்னுடைய தாய் நான்" என்றாள் சகுந்தலா.

"இல்லை நீங்கள் என்னுடைய அம்மா இல்லை, அம்மா...அம்மா..." என்றவாறு முகப்பூச்சு பூசிய கன்னத்தில் கண்ணீர் வழிய நந்தினி ராதாவை தழுவிக் கொண்டாள்.

ராதாவின் கண்களில் மட்டுமல்ல அவள் இதயத்திலும் துக்கம் பிதுங்கி வழிந்தது. துயரத்தை அடக்கி விவரத்தை எடுத்துரைத்தாள் ராதா.

நந்தினிக்கு எவற்றையும் மீள் பரிசோதனை செய்ய முடியவில்லை.

"அம்மா அப்படியொன்று நடந்திருந்தால் கூடப் பரவாயில்லை.என்னால் உங்களை விட்டுப் பிரிய முடியாது. அப்பா... அண்ணா... நீங்களும் சொல்லுங்கோ நான் போக மாட்டன்." அழுது புரண்டாள் நந்தினி.

சகுந்தலாவின் பேச்சு மட்டுமே தலை நிமிர்ந்து கொடியேறியது. சமூகம் தந்தவர்களும் சகுந்தலாவின் பக்கமே பேசினார்கள்.

விழா ஏற்பாடும் முறிவடைந்து நீதிமன்ற விசாரணைக்கு கொண்டு வரப்பட்டது.

டீ.என்.ஏ பரிசோதனையில் நந்தினியின் பெற்றோர் அவர்கள் தான் என்று உறுதியாயிற்று.

இருபக்க சாட்சியங்களை பார்க்கும் போது நந்தினி சிறிய குழந்தையாக இருக்கும் போது அவளின் முதற் பெற்றோரிடம் கையளிக்க முடியும். ஆனால் நந்தினி விவரம் அறிந்த வயதிற்கு வந்த பிள்ளை. அவளின் சுய விருப்பத்தின் படியே வாழ விட வேண்டும்.

முதற் பெற்றோரிடம் நந்தினி சென்றால் பணத்துடன் பகட்டான வாழ்க்கையை அனுபவிக்கலாம். பெற்றோரின் அன்பு எட்டாக்கனி மட்டுமே.

ஆனால் வளர்த்த பெற்றோரிடம் பாசத்தையும், சகோதரனின் நேசத்தையும் அவள் தொடர்ந்து அனுபவிப்பாள்.

அதுவே அவளுக்கு இனிமேலும் தேவை என்ற உறுதியுடன் நீதிபதி வசந்தா, ஆனந்தக் கண்ணீருடன் மின்குமிழை அணைத்தாள்

---

# அர்த்தமில்லாத கவிதை

யாயும் யாயும் யாராகியரோ
ஆயினும் அன்பிற்குமுண்டோ அடைக்கும் தாழ்
பாலும் தெளிதேனுமாய் கலந்தோம்

முத்தென்ன வெண்ணகையாய் முன் வந்தெதிர் எழுந்து
என் அத்தான்
என அழைக்கும் மொழியொன்றே போதுமடி

அம்பரமே தண்ணீரே சோறே என் கற்க்கண்டே
காயுடை நெல்லொடு கரும்பமைத்துக்
கட்டி யரிசி யவலமைத்து,
அன்பினைசேர்த்தூட்டுவாய் அதுவே
மாறாக்காதலடி

பொருளும், யாழும், விளரியும், பூவையும்,
மருள, நாளும், மழலை வழங்குவாய்!
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
என்உடல் உயிரென ஆனாய்

அன்பே
போயின, போயின துன்பங்கள் - நின்னைப்
பொன்னெனக் கொண்ட பொழுதிலே -

பொன்னிறத்து மெல்லிடையில் பூவாட
பொட்டுவைத்த வண்ண முகம் நீராட
நீ வருகின்ற அழகிலே
வான் நிலவு நாணுமடி

மாயம் செய்தாயோ
நெஞ்சை காயம் செய்தாயோ

சினத்தல்கள்
மொழிகளால் சீண்டுதல்
உயிர் உடைத்து
மௌனம் நடுதல்
உன் நெறிகள்

நான் எனப்படுவது நீ ஆன போதிலும்......!
இன்று
நாம் எனப்படுவது நகர்த்தபட்டு விட்டது......!

வாயில்லாமல் போனால் வார்த்தையில்லை
பெண்ணே
நீயில்லாமல் போனால் வாழ்க்கையில்லை
கண்ணே

ஒரு குழந்தையின் கண்களுக்குள் பரவும்
கனவின் வர்ணங்கள் நீ
மீண்டும் என்கண்ணுக்குள்ளே வா...

**வேலணையூர்-தாஸ்**

எடுத்தாண்ட வரிகளுக்காக நன்றி-குறுந்தொகை திருக்குறள் திருப்பாவை திருவெம்பாவை நாச்சியார் திருமொழி திருவாசகம் கம்பராமாயணம் ஔவை பாரதி கன்னதாசன் வைரமுத்து கபிலன் ஆதிபார்த்திபன் மதுசாமாதங்கி கிரிசாந்.

அர்ச்சுனன்

# தெணியானின் "இன்னும் சொல்லாதவை" (வாழ்பனுபவங்கள்) சொல்பவை




ஈழத்து இலக்கியத்துறையில் தனக்கான பாணியில் தனித்துவம் மிக்க நாடறிந்த எழுத்தளராகத் திகழும் தெணியான் ஏற்கனவே பல சிறுகதைத் தொகுதிகள், நாவல்கள், குறுநாவல்கள், கட்டுரைத் தொகுதிகள் என்பவற்றை வெளியிட்டவர். அண்மையில் இவரது "இன்னும் சொல்லாதவை" – வாழ்பனுபவங்கள் (ஞானம் சஞ்சிகையில் தொடராக வந்த கட்டுரைகளின் தொகுப்பு) இந்தியாவின் "எழுத்து" வெளியீடாக வெளிவந்துள்ளது. மனதுக்கு ரம்மியமான அட்டைப்படம், 127 பக்கங்கள், 15 அத்தியாயங்கள், இந்தியவிலையில் ரூ.80 என பெறுமதி மிக்க நூலாக இந்நூல் வெளிவந்துள்ளது.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக் குள்ளும் பல கதைகள், சம்பவத்திரட்டுக்கள் புதைந்துள்ளன. அவனது வாழ்பனுபவங்கள் பல சுவாரசியமான விடயங்களை தன்னகத்தே கொண்டிருக்கும். ஆனால் எல்லோருக்கும் தம் வாழ்வனுபவங்களை மீட்டிப் பார்ப்பதற்கோ அவற்றை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்ளவோ சந்தர்ப்பம் வாய்ப்பதென்பதோ அரிது. ஆனால் எழுத்தாளர்கள் தமது வாழ்வனுபவங்களை சுவைபட ஏனையோருக்கு தெரிவிப்பது என்பது சுவாரசியமான விடயம். அவ்வாறே எழுத்தாளர் தெணியான் தனது வாழ்பனு பவங்களை இந்நூலில் சுவை பட பதிவு செய்துள்ளார். தெணியானின் வாழ்பனுபவங்கள் ஊடாக பல செய்திகளை, எமது பண்பாட்டு அம்சங்களை, வாழ்வியற் கோலங்களை, பழக்க வழக்கங்களை, சமூக விழுமியங்களை, பழமைகளை, சம்பிரதாயங்களை, அடக்கு முறைகளை அறிய முடிகின்றது.

தெணியான் 15 அத்தியாயங்களில் கூறும் விடயங்களை சுருக்கமாக வாசகர் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

ஆரம்ப அத்தியாயத்தில் "முகமூடி" உடன் பிறந்த குழந்தையாக தன்னை தெணியான் கூறுவதோடு, முகமூடி உடன் பிறக்கும் குழந்தை பற்றியும் முகமூடி பற்றியும் விளக்கம் கொடுக்கின்றார். முகமூடியுடன் பிள்ளை பிறந்தால் அதனை பிரித் தெடுத்து சுவரில் எறிந்து காய வைத்து பின்னர் அக்குழந்தை நல்ல காரியங்களிற்கு செல்லும் போது மடியில் கட்டிக் கொண்டு சென்றால் வெற்றி கிட்டும் என்ற நம்பிக்கை தெணியானின் எழுத்து மூலம் பலருக்கு புலப்படுகின்றது. நாவுறு பார்த்தல், மாலை சுற்றிப் பிறத்தல், கூட்டுக் குடும்ப வாழ்க்கை, ஆரம்ப கால வேலி அடைக்கும் முறை, குல தெய்வ வழிபாடு என பல்வேறு முன்னைய கால வாழ்வை எம் கண் முன்னே முதலாவது அத்தியாயத்தில் சித்திரமாக வரைந்துள்ளார்.

கிராமம் ஒன்றுக்கு அந்நாளில் கார் வருவதென்பது சிறுவர்களுக்கு மகிழ்வான விடயம். அவ்வாறே இங்கு தெணியான் அந்நாளைய காரை விபரிப்பதும் அன்றைய நாள் பிரசவ முறைகள் பற்றியும் கூறுகின்றார். சிறுவர்களை உணவு உண்ணச் செய்ய, குழப்படி செய்யாமல் இருக்க, வீட்டை விட்டு

வெளியே செல்லாது இருக்க பெற்றோர் தம் பிள்ளைகளை "உம்மாண்டி", "மூட்டை தூக்கி" உன்னை தூக்கிக் கொண்டு போய் விடுவார்கள் என்று பயப்படுத்துவது இன்றும் வழக்கத்தில் உள்ளது. அதுபோலவே தெணியான் பிரதேசத்திலும் "கள்ளத் தியாகன்" என்பவரை இனம் காட்டி பெற்றோர் தமது பிள்ளைகளை வெருட்டுவதும், ஒரு சந்தர்ப்பத்தில் தெணியானை "கள்ளத் தியாகன்" கடத்தி விட்டான் என தாய் நம்புவதும் மிகவும் நகைச்சுவை ததும்ப ஆசிரியரால் கூறப்பட்டுள்ளது.

மூன்றாவது அத்தியாயத்தில் தனது ஆரம்ப கால பாடசாலை அனுபவங்களையும், ஆசிரியரின் தோற்றத்தையும், தான் கல்வி கற்ற முறைகளையும் கூறுவதோடு வீட்டில் நடைபெற்ற மரண வீடு பற்றியும் அதனைத் தொடர்ந்து நடைபெறுகின்ற ஏற்பாடு களையும் சித்திரித்துள்ளார். "முலைப்பால்" பற்றியும், பனங்கிழங்குப்பாத்தி போடும் சம்பவங்கள், கதிர்காமக் கந்தனின் யாத்திரையும் அதன் பின்னர் நிகழும் சம்பவங்களையும் தெணியான் தனக்குரிய பாணியில் குறிப்பிடுகின்றார்.

ஐந்தாவது அத்தியாயத்தில் முடி இறக்குதல் பற்றியும், தாழ்த்தப்பட்ட மக்கள் முடி இறக்கப் பெற்ற, அவலங்களையும் விவரிக்கின்றார். ஆறாவது அத்தியாயத்தில் எம் வாழ்வோடு இணைந்த "பனை" பற்றியும், பனையூடாக மனிதன் பெறும் பயன்களை தன் வாழ்வனுபவங்கள் ஊடாகக் கூறிச்செல்கின்றார். இவரது ஒவ்வொரு அத்தியாயத்தின் ஊடாகவும் பல செய்திகளையும் தகவல்களையும் இன்றைய புதிய தலைமுறையினர் அறிய வாய்ப்பாக அமைகின்றது. உதாரணமாக–

"பிளா" பற்றி இவர் கூறுகின்ற போது,

"ஓலையில் செய்கிற ஒரு ஏதனப் பிளா அது கள்ளைக் குடிக்கிறதுக்கு பிளாவின் முன்பாக பிளாவைக் கோலி ஒரு கட்டுப்போட்டு, தளிரைக் கீழே மடித்துக் கட்டி நறுக்கினால் அது கொண்டைப் பிளா. அது உயர் சாதிக் குடிகாரர்களுக்கு. தளிரை நீட்டி இரண்டு கட்டுக் கட்டி விட்டால் அது இடைச் சாதிக்காரருக்கு, ஒரு கட்டுப் பிளா தாழ்ந்த சாதி யினருக்கு."

இவ்வாறான பல தகவல்கள் சுவை ததும்ப இவரது வாழ்வியல் அனுபவங்கள் ஊடாக அறிய முடிகின்றது.

சாதியத்தின் தீவிரம் பற்றியும்,கோயிலின் உட்சென்று நிம்மதியாக கடவுளைக் கூட தரிசிக்க முடியாத அவலத்தை ஏழாவது அத்தியாயத்தில் குறிப்பிடுகின்றார். நல்லெண்ணெய் வைத்தல், தனது ஆரம்ப வாசிப்பு, பாடசாலை நாட்களில் செய்த குறும்புகள், அதிபரின் பிரம்பால் இரண்டு வாங்கி கட்டியது மிகச் சுவாரசியமான தகவல்கள் பற்றியும், செய்வினை, பிசாசு ஓட்டுதல் பற்றியும் எட்டாவது அத்தியாயத்தில் குறிப்பிடுகின்றார்.

சமையற்கலை சில ஆண்களின் கைவசம் இருப்பது பற்றியும் அதிபரின் வழிகாட்டல், தான் ஆர்வமாக கற்ற ஆரம்பித்த நாட்கள், மரண வீட்டிற்கு சென்று வந்து பின்னர் வீட்டிற்குள் உள் நுழைய முன்னர் எம்மவர் கடைப்பிடிக்கும் சம்பிரதாயப் பழக்க வழக்கங்கள் பற்றியும் உயிரோட்டமாக ஒன்பதாவது அத்தியாயத்தில் கூறுகின்றார். பத்தாவது அத்தியாத்தில் தன் தந்தையின் "தவறணை" பற்றிய விளக்கத்தைத் தருவதோடு, தெணியானின் தந்தை தம்பிள்ளைகள் சாதித் தொழிலை செய்யக் கூடாது என்பதை கவனத்தில் கொண்டு செயற்பட்டார் என்பதையும் அறிய முடிகின்றது. கஷ்டத்தின் மத்தியிலும் எமது சமுதாயப் பெற்றோர் பிள்ளைகளின் கல்வியில் அதிக அக்கறை காட்டியுள்ளார்கள் என்பதை அத்தியாயம் பதினொன்றில் பதிவு செய்கிறார்.

தெணியான் இன்று ஒரு சிறந்த மேடைப் பேச்சாளர். 12 ஆவது அத்தியாயத்தில் கூறப்படும் பல செய்திகள் இதனை நிருபனப்படுத்துகின்றன. மரவரி பற்றியும் தனது முதலாவது ஆசிரிய நியமனம் பற்றியும் 13ஆவது அத்தியாயத்திலும் குறிப்பிடுகின்றார்.

அத்தியாயம் 14 இல், ஆசிரியராக தான் கடமை புரிந்த வகுப்புக்கள் பற்றியும், ஆசிரியராக வந்த பின்னும் தெணியான் தனக்கு கற்பித்த ஆசிரியர்கள் மீது வைத்த மதிப்பும் மரியாதையும் தெணியானின் உயர்ந்த பண்பை காட்டுகின்றன.

இறுதி அத்தியாயத்தில் தந்தையின் மரணமும் , கும்பிடு போட்டு காலத்தை ஓட்டுபவர்கள் பற்றியும், தந்தையையும், தாயையும் ஒருவன் வணங்கினால் போதும் என்ற நற்செய்தியையும் கூறுகின்றார்.

தெணியானின் இவ்வனுபவங்கள் ஒவ்வொருவரையும் தமது வாழ்பனுபவங்களையும் மீட்டி பார்க்க வைக்கும் என்பதில் ஐயம் இல்லை. தெணியான் ஒளிவு மறைவு இல்லாமல் பல செய்திகளை இங்கு குறிப்பிட்டுள்ளார். இங்கு கூறப்பட்ட ஒவ்வொரு அம்சங்களும் தெணியானால் மிக உன்னிப்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள். அவற்றை மிகச்சிறப்பாக இங்கு பதிவு செய்துள்ளார். இது தெணியானின் ஆரம்ப கால வாழ்பனுபவங்கள் பற்றியே பேசுகின்ற நூல், இது போன்று தெணியான் தனது இலக்கிய அனுபவங்களையும் எழுத வேண்டும். தெணியானின் ஏனைய நூல்கள் வாசகர்களைக் கவர்ந்தது போல இந்நூலும் வாசகர் உள்ளத்தை கொள்ளை கொள்ளும் என்பதில் ஐயம் இல்லை.



# வலை

தி. கேதீஸ்வரன்

ஜோசப்பின் முகம் முழுவதும் வியர்வையில் நனைந்திருந்தது என்னதான் பிறந்ததிலிருந்து அந்த மணல் பரப்பில் சைக்கிள் ஓடிக்கொண்டிருந்தாலும் வழமையாக ஏற்படும் களைப்பு அன்றும் ஏற்படவே செய்தது வேகமாக வீசிக்கொண்டிருந்த எதிர்காற்று வேறு அவனை மேலும் சோதனை செய்தது.

"பள்ளிக்கூடத்திற்கு நேரமாக போகுது" அவனது உள் மனம் எச்சரிக்க சைக்கிளை வேகமாக செலுத்த முயன்றான். ஜோசப், உயர்தர விஞ்ஞான பிரிவு மாணவன் உயர்தர பரீட்சையில் மாவட்டத்திலேயே முதல் மாணவனாக தெரிவாகி மருத்துவபீடம் செல்வானென ஆசிரியர்களாலும் நண்பர்களாலும் நம்பப்படுபவன்.

ஜோசப் ஒரு சாதாரண தர மீனவ குடும்பத்தை சேர்ந்தவன். அவன் இவ்வளவு தூரம் கல்வியில் முன்னேற அவன் தந்தை மரியதாசின் ஊக்கமும் உழைப்பும்தான் காரணம் தன்னைப்போல் தன் பிள்ளைகளும் கடலில் மிதக்கும் தொழிலை செய்யக்கூடாது படித்து நல்ல நிலையை அடைய வேண்டும் என்பதில் அவர் குறியாய் இருந்தார்.

ஜோசப் வாடியை நெருங்கி இருந்தான் மெல்ல கண்களை சுழலவிட்டான் அவனது தந்தையின் வள்ளம் கண்ணில்பட்டது. சைக்கிளில் இருந்து இறங்கி கையோடு கொண்டுவந்திருந்த உணவுப்பையுடன் அருகே இருந்த ஓலைக்குடிலினுள் நுழைந்தான் அங்கு வெறுந்தரையில் கைகளை தலைக்கு அணையாக வைத்து மரியதாஸ் உறங்கிக்கொண்டிருந்தார்.

இரவெல்லாம் தூங்காமல் அட்டை குளித்த அவரது களைப்பும் பசியும் அவரது முகத்தில் நன்கு தெரிந்தது. அதைக்கண்ட ஜோசப்பின் உள்ளம் கனிந்தது தங்களுக்காக தந்தை படும்பாட்டை அவன் உணராதவன் அல்ல தந்தையின் தொழிலை அதன் கடினத்தை அதிலுள்ள ஆபத்துக்களை அவன் முழுமையாக உணர்ந்திருந்தான்.

அவன் தந்தையுடன் பல தடவைகள் அட்டை குளிக்கச் சென்றிருக்கின்றான். தந்தையை போலவே பத்துப்பாதம் ஆழம்வரையில் சாதாரணமாகச் சென்று அட்டைப்பிடித்து வருவான். ஆனால் ஒவ்வொரு முறையும் கடலில் மூழ்கும்போது நிச்சயம் அட்டை கிடைக்கும் என்பதில்லை.

அதற்கு மேலாக கடல் சீற்றங்களின்போதும் திடீரென கடல் நீரோட்டத்தில் ஏற்படும் மாற்றங்களின் போதும் ஏற்படும் ஆபத்துக்கள் மிக அதிகம் எல்லா வற்றிற்கும் மேலாக சுறா மீன்களிடமிருந்தும் ஏனைய விஷமீன்களிடமிருந்தும் தப்பிப்பிழைக்க வேண்டும்.

மெல்ல தந்தையை அசைத்து எழுப்பினான் விழித்து எழுந்த மரியதாசின் முகம் ஜோசப்பை கண்டவுடன் மலர்ந்தது. கையோடு கொண்டுவந்திருந்த உணவுப்பொட்டலத்தை தந்தையிடம் கொடுத்துவிட்டு வேகமாக சைக்கிளில் ஏறி பாடசாலையை நோக்கி விரைந்தான்.


மகன் விரைந்து செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த மரியதாசின் கண்கள் கலங்கின "என்னப்போல என்ட பிள்ளைகள் கஷ்டப்படக்கூடாது" அவர் உள்மனதில் வைராக்கியம் எழுந்தது.

வகுப்பறையில் இரசாயனவியல் பாடநேரம் உயர்தர பரீட்சைக்கான முன்னோடி பரீட்சை பெறுபேறுகளை ஆசிரியர் வாசித்துகொண்டிருந்தார். அந்த பரீட்சையில் தொண்ணூற்றி ஐந்து சதவீத புள்ளிகளை பெற்றிருந்த ஜோசப்பினை அவர் பாராட்டிக்கொண்டிருந்த வேளையில் பாடசாலை சிற்றூழியன் வகுப்பறையினுள் வந்து ஆசிரியரின்

காதினுள் மெல்ல ஒரு தகவலை சொல்லத் தொடங்கினான்.

தகவலைக்கேட்டு அதிர்ச்சியுடனும் பரிதாபத் துடனும் ஜோசப்பினை பார்த்த ஆசிரியர் "ஜோசப் உன்னைதேடி உண்ட அத்தான் வந்திருக்காராம் வாசலல நிக்கிறார் போய்பார்" என்று சொல்ல விளங்காத பார்வையுடன் ஜோசப் வகுப்பறையை விட்டு வெளியேறி பாடசாலை வாயிலை அடைந்தான்.

அத்தானை கண்டவுடனேனே அவன் நெஞ்சுக்



குள் காரணம் இல்லாத ஒரு அச்சம் சூழ்ந்துகொண்டது. கலங்கியிருந்த அத்தானின் கண்கள் ஏதோ ஒரு சேதியை சொல்ல காரணம் கேட்காமலேயே அவரின் மோட்டார் சைக்கிளின் பின்னால் ஏறி அமர்ந்து கொண்டான் மோட்டார் சைக்கிள் வாடியை நோக்கி விரையத் தொடங்கியது.

வாடியை நெருங்கியதும் மரியதாஸின் குடிலைநோக்கி ஜோஸப் விரைந்தான்.ஏனைய மீனவர்கள் குடிலை சுற்றிநிற்க அவர்களை விலக்கி விட்டு குடிலினுள் நுழைந்தான். குடிலின் உள்ளே மரியதாஸின் உடல் கிடத்தப்பட்டிருந்தது பார்த்தவு டனேயே விளங்கியது மரியதாஸ் சுறாவினால் கடித்து குதறப்பட்டிருக்கிறார் என்று, ஜோசப் கால்களை மடக்கி மரியதாஸின் அருகில் அமர்ந்தான் ஓவென பெருங்குரல் எடுத்து அழத்தொடங்கினான்.

***

ஜோசப் தன்னை யாரோ தட்டியெழுப்புவதை உணர்ந்த கண்களை திறந்தான் எதிரே பாடசாலை சீருடையுடன் அவன் தம்பி நிற்பதை கண்டு புன்னகைத்தான் தம்பியின் கையில் இருந்த உணவுப் பொட்டலத்தை வாங்கிக் கொண்டான்.

ஜோசப்பின் தம்பி ரொமேஷ் பாடசாலை செல்லும் பாதையில் சைக்கிளில் விரைந்து கொண்டிருந்தான் ஜோசப் மெல்ல வள்ளத்திற்கு அருகே சென்று வலையில் சிக்கியிருந்த மீன்களை எடுக்கத்தொடங்கினான் அவன் கைகள் வலையினுள் சிக்கிக்கொள்கின்றது.

# பயணம்

அந்தி வெய்யிலில் குளித்த
மரம் செடி கொடிகளின் இலைக் கண்களில்
அச்சமும் பயமும் குடிகொள்கிறது

மல்லாந்து படுத்த பூதமொன்றாய்
மலையொன்றின் நிழல் நிலத்தில் நீள்கிறது

பகலெல்லாம்
பறவைகளுடன் உறவாடிய கனமரங்கள்
வௌவால்களின் வருகைக்காக
காத்து நிற்கின்றன

மீன் கொத்திப் பறவையொன்று
என்னை முந்திக் கொள்ள
அந்தி நேர அமைதி உடைகிறது

செக்கச் சிவந்த பந்தொன்றாய்
சூரியன் கடலில் மூழ்க
அஸ்தமனத்தைக் குறிக்கும்
"அதான்"ஒலிக்கிறது
இனி... கடலுக்கு
இருட் திரை போர்த்தப்படும்... என
அறிவிப்பது போல

இரவின் குரூரமும் குளிரின் கொடூரமும்
பிசாசொன்றாய் துரத்தி வருகிறது

அத்துமீறல்கள்... அடாவடித்தனங்கள்...
காட்டு தர்பார்கள்...
கண்ணீர்... குருதி...மரண ஓலங்கள்

இருட்தழைக்குள்ளே நடக்கும் அவலங்களை
கண்டும் கானதவனாய் அவற்றிக்கு
பரிகாரம் ஒன்று காணமுடியாதவனாக நான்

நாளும்
காடு மேடுகளில் அலைந்து
காட்டாறுகளைக் கடந்து
நாடு நகரங்களைத் தாண்டிக் கொண்டு
எனது பயணம் தொடர்கிறது

நான் காலம்
அடி...நுனி...இல்லாத
நூலொன்றைப் போல
மெல்ல மெல்ல நீள்கிறேன்.
இரவின் அவலங்களை
வெட்ட வெளிச்சத்துக்கு வரும்
உதயம் தென்படும் வரை.

உ.நிசார்

# கலை இலக்கிய நிகழ்வுகள்

1) மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையம் நடாத்திய **46 ஆவது உலகத் தொடர்பு தினவிழா** 2010.8.4 அன்று மட்.சாள்ஸ் மண்டபத்தில் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருள் தந்தை ஜேசப் பொன்னையா அவாகள் தலைமையில் நடைபெற்றது. சமூகத் தொடர்புகள் நிலைய இயக்குநர் அருட்தந்தை லெஸ்லி ஜெயகாந்தன் வரவேற்புரை வழங்கினார். சிறப்புரையை அருட்தந்தை சி.வி. அன்னதாஸ் அவர்கள் "மறைக்கல்வியும் ஊடகங்களும்" என்னும் தலைப்பில் உரையாற்றினார். கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில் 40 ஆண்டுகாலமாக இடைவிடாது இலக்கிய பணியாற்றி வரும் "அன்புமணி" (இரா.நாகலிங்கம்) மற்றும் மறைக்கல்வி கிறிஸ்தவ இலக்கியம் ஆகியவற்றில் தொடர்ந்து பணியாற்றி வரும் திருமதி மெற்றிடா ராஜேந்திரம் ஆகிய இருவரும் கௌரவிக்கப்பட்டனர். அன்புமணி பற்றிய பாராட்டுரையை "செங்கதிர்" சஞ்சிகை ஆசிரியர் செங்கதிரோன் நிகழ்த்தினார். திருமதி மெற்றில்டா இராஜேந்திரம் பற்றிய பாராட்டுரையை பெஸ்லியோ வாஸ் வழங்கினார். அதிவண ஆயர் ஜோசப் பொன்னையா இவர்களுக்கு பொன்னாடை போர்த்தி பூமாலை அணிவித்து கௌரவப்படுத்தினார். இந்நிகழ்வைத் தொடர்ந்து மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையம் நடாத்திய இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. நன்றியுரையை நில்மினி கஜேந்திரன் வழங்கினார்.

2) மட்டக்களப்பு செங்கதிர் இலக்கிய வட்டத்தின் ஆதரவில் குருக்கள் மடம் **மா.திருநாவுக்கரசு எழுதிய "மட்டக்களப்பு மாண்புறு குருக்கள் மடம் என்னும் பேரூர்" நூல் அறிமுகவிழா** 2012.08.18 அன்று மட்டக்களப்பு நூலக மண்டபத்தில் செங்கதிர் இலக்கியவட்டத்தின் தலைவர் செங்கதிரோன் தலைமையில் நடைபெற்றது. வரவேற்புரையை செங்கதிர் இலக்கியவட்டச் செயலாளர் அன்புமணி நிகழ்த்தினார். நூலாசிரியர் அறிமுகவுரையை திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு.க.ஞானரத்தினம் நிகழ்த்தினார். நூல் அறிமுகவுரையை பிரதம விருந்தினர்களில் ஒருவராக கலந்து சிறப்பித்த தொல்லியல் ஆய்வாளர் செல்வி க.தங்கேஸ்வரி நிகழ்த்தினார். பின்னர் பிரதமவிருந்தினர் உரையை பேராசிரியர் சி.மௌனகுரு நிகழ்த்தினார். நிறைவாக நூலாசிரியர் ஏற்புரை, நன்றியுரையை வழங்கினார்.

3. மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ணமிஷனைக் கட்டி எழுப்புவதில் 40 வருடங்களுக்கு மேலாக ஆத்மார்த்தமான பணியாற்றி அமரரான **சுவாமி ஜீவனானந்த பற்றிய கட்டுரைகள் அடங்கிய "ஜீவனானந்தம்" என்னும் பாரிய நூலின் வெளியீட்டு விழா** 2012.8.05 அன்று சுவாமி விபுலானந்தர் மணி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நூல் வெளியீடு மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ண குருகுல பழைய மாணவர் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்விற்கு இம்மன்றத்தின் தலைவர் க.மதிவண்ணன் தலைமை வகித்தார்.பிரதமவிருந்தினராக ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் இலங்கைக் கிளையின் உபதலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தா மஹாராஜா கலந்து கொண்டார். சுவாமிகளுடனான அனுபவப் பகிர்வு என்னும் தலைப்பில் சுவாமி ஜீவனானந்தாவுடன் நெருங்கிப் பழகிய அருட் சகோதரர்ஏ.ஐ.மத்தியூ, பேராசிரியர் தட்சணா மூர்த்தி, சகாதேவ ராஜா ஆகியோர் தமது அனுபவப் பகிர்வினை வெளியிட்டனர். அதைத் தொடர்ந்து நூல் வெளியீடு இடம்பெற்றது. வெளியீட்டுரையை குருகுல பழையமாணவர் விவேகானந்தராசா வழங்கினார். 330 பக்கங்கள் கொண்ட இந்நூலில் அமரர் ஜீவனானந்தாவின் 40 வருடப் பணிகளை வெளிப்படுத்தும் கட்டுரைகளும் அவரது காலத்து நிகழ்வுகளின் வர்ணப் புகைப்படங்களும் இடம் பெறுகின்றன. இது ஒரு வரலாற்றுப் பொக்கிஷம் ஆகும். அடுத்து நூல் மதிப்பீட்டுரை இடம்பெற்றது. கல்குடா வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி.சுபா சக்கரவர்த்தி மிகவும் சிறப்பாக இவ்வுரையை நிகழ்த்தினார். அதைத்தொடர்ந்து பிரதம அதிதியின் உரை இடம்பெற்றது.இவ்வைபவத்தின் நிறைவுவிழாவாக "ஜீவகானம்" என்ற இசைக்கச்சேரி இடம்பெற்றது. சிவயோகச்செல்வன் சாம்பசிவம் இசைக்கச்சேரியை வழங்கினார்.

4) அவை (குழசரஅ) கலை இலக்கிய வட்டத்தின 42 ஆவது ஒன்று கூடல் 2012.8.26 அன்று அல்வாயில் உள் கலை அகத்தில் எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலாநிதி த.கலாமணி அவர்கள் வருகையாளராகக் கலந்து கொண்டு "கட்டுடைப்பு வாதம்" என்னும் தலைப்பில் உரையாற்றினார். கருத்துரையை க.ஜீவராஜா தெரிவித்தார். சிறப்பு நிகழ்வாக பட்டி மன்றம் நடைபெற்றத. " காலத்தால் அழியாதது இலக்கியமே...! என்னும் அணி சார்பில் மஇபாஇ மகாலிங்க சிவம், பெரிய.ஐங்கரன், க.தர்மதேவன் ஆகியோரும், காலத்தால் அழியாதவை ஆற்றுகைக்கலைகளே... ! என்னும் அணி சார்பில் அ.பௌநந்தி, எஸ்.தனேஸ்வரி, வேல் நந்தகுமார் ஆகியோர் உரையாற்றினார்கள். நடுவராக தழிழாசான் கி. நடராஜா செயற்பட்டார்.

5) ந.மயூரரூபனின் "நீயுருட்டும் சொற்கள்" கவிதைத்தொகுதி வெளியீட்டு விழா 2012.8.26 அன்று நெல்லியடி தடங்கள் புளியடி முருகமூர்த்தி ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. உரைகளை இணுவையூர் சிதம்பர திருச் செந்தி நாதன், துவாரகன்,த. அஜந்தகுமார், ஈ.குமரன், சித்தாந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

# யாருக்கோ மனைவியானாய்

விழி நிறைந்த ஏக்கத்தோடு
என்னைப் பார்த்தாய் - நான்
வேதனைக்கும் விரக்திக்கும் நடுவில் நின்றேன்
மொழியெதுவும் தோன்றவில்லை
எங்கள் நாவில் - நாம்
மௌனத்தின் பாஷையிலே பேசலானோம்

உனக்கான போராட்டம் எந்தன் வீட்டில் - என்
உயிர் நிரப்பும் பாத்திரமோ நீதான் என்றேன்
எனக்காக என் செய்தாய் கூறு பெண்ணே - உன்
இமை இடுக்கால் நீர் வடித்தால் போதுமாமோ?

உன் தந்தை தாயோடு பேசச் செய்தாய் - என்
உழைப்பில்லா நிலையெண்ணிக் கூசச் செய்தாய்
விண்மீனைக் காதலித்த
விழியற்றான் போல் - உன்
வீட்டவர்கள் எனைக்கருத விடையும் பெற்றேன்

உன் வீட்டில் நான் பேசி என்ன லாபம் - எனை
ஊர் பேச வைத்ததுதான் என்ன நியாயம்
மண் போட்டுப் புதைத்திட்ட பொன்னூசியை - நீ
மறுபடியும் தேடென்றால் என்ன செய்வேன்

கண் காணாத் தூரத்துக்
காதல் பூவே - உனைக்
கலங்காமல் காப்பாற்ற முடியும் என்றேன்
என் மீது நம்பிக்கை இல்லையென்றால் - நான்
எதைச் சொல்லி எதைச் செய்தும்
ஆவதென்ன?

துன்பங்கள் தோள் சுமந்து பழகியாச்சு - கடும்
துயரங்கள் என் மனது தாங்கியாச்சு
இன்பமே உன் சுமையும் நான் சுமந்து - உன்
உயிராகத் துணையிருப்பேன் ஏன் வீண் பேச்சு

என் எண்ணம், என் வார்த்தை
எடுபடவில்லை - இந்த
ஏழை சொல் அம்பலத்தில் ஏறிடவில்லை
கண்ணாகக் கிளி வளர்த்துப்
பூனை கையில் - அள்ளிக்
கொடுத்துவிட நாம் மூடர் தானா என்றார்.

பூனையைத் தன்மானம்
புலியாய் மாற்ற - நானும்
புறப்பட்டேன் என் வாழ்க்கை
நிலையை ஏற்ற
யானையாய் நான் மாறித்
திரும்ப வந்தேன் - நீ
யாருக்கோ மனைவியாய்ப்
போயிருந்தாய்.

**-மன்னார் எம்.ஷிபான்**

# பேசும் இதயங்கள்

1)ஜீவநதி ஆவணி இதழில் "காலமான கவிஞர் சு.வில்வரத்தினத்தின் குறிப்பேட்டிலிருந்து சில பக்கங்கள்" என்ற தலைப்பில் இடம்பெற்ற குறிப்புகளில் தவறான ஒரு தகவல் இடம்பெற்றுள்ளது.

"மலையகத்தை சேர்ந்த கே.இராமநாதன் ஆங்கிலத்தில் எழுதிய இன்னொரு படைப்பாளி. இவரது சிறுகதை ஒன்று என்கவுண்டர் ஆங்கில இதழ் நடத்திய சிறுகதைப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றது அவர் தேசாபிமானி ஆசிரியராகவும் இருந்தார்" எனக் காணப்படுகிறது.

கே.இராமநாதன் என்பவர் கவிஞர் கே.கணேஷ் நடத்திய "பாரதி" சஞ்சிகையுடன் செயற்பட்டவர். தேசாபிமானி ஆசிரியர் பின்னர் தமிழகம் சென்று கம்யூனிஸ்ட் கட்சியில் இயங்கியவர். ஆனால் என் கவுண்டர் நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றவர் டி.ராமநாதன். அவர் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர். Daily New's பத்திரிகையில் பணியாற்றினார். இவரை தினகரன் ஆசிரியர் திரு.ஆர்.சிவகுருநாதன் லேக்ஹவுசில் வைத்து அறிமுகப்படுத்தினார். பின்னர் நான் வாழ்ந்த பிரதேசத்தில் தான் இவரும் தங்கியிருந்தார். இவரை அங்கு சந்தித்தும் உரையாடியுள்ளேன்.

ஆங்கிலத்தில் எழுதும் ஆற்றல் படைத்த டி.ராமநாதன் ஆங்கிலத்திலும் ஒரு நாவல் எழுதியதாக கூறியது ஞாபகத்தில் உள்ளது. இவர் ஆங்கிலத்தில் எழுதிய அழகு. சுப்பிரமணியத்தின் நண்பரும் கூட, இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் விரிவாக எழுதினால் நன்று.

– அந்தனி ஜீவா (கொழும்பு – 06)

2) சின்னப்ப பாரதி அறக்கட்டளை நிறுவனம் நடாத்திய போட்டியில் சிறந்த சஞ்சிகையாக "ஜீவநதி" தெரிவு செய்யப்பட்டது, ஈடிணையற்ற சாதனையாகும். இப்பரிசு ஜீவநதி ஆசிரியரான உங்களுக்கு கிடைத்த கௌரவமாகும். எத்தனையோ பிரபலமான சஞ்சிகைகளுக்கு மத்தியில் "ஜீவநதி" பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டது ஒரு உயர்மட்ட அங்கீகாரம் என்றே கொள்ள வேண்டும். 50 ஆவது இதழ் ஜீவநதிக்கு இது ஒரு கிரீடமாகும். பாராட்டுக்கள்! வாழ்த்துக்கள்.

– அன்புமணி (மட்டக்களப்பு)

3) திரு முருகபூபதி அவர்கள் இலக்கிய வாழ்வில் பங்குபற்றிய கருத்தரங்குகளில் ஏற்ப்பட்ட சலிப்பால் கருத்தரங்குகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் தீர்வுகளும் எனும் கட்டுரையை எழுதியிருந்தார். தமிழ் இலக்கியத்தை வளர்க்கும் பொறுப்புள்ள எழுத்தாளர்கள் மாநாட்டிலே நடக்கும் பிரச்சினைகளை பொதுமக்களும் அறியக்கூடியதாக இருந்தது. மங்கல விளக்கேற்றல் பொன்னாடைகள், பூமாலைகள், வெறும் புகழாரங்கள் அத்தனையும் கருத்தரங்கிற்கு சம்பந்தமில்லாத சம்பிரதாயங்கள் பற்றிக் கூறியிருந்தார். இதை வாசித்தபோது நான் அறிந்த விசயத்தை பிறரும் அறிந்திருக்க வேண்டும் என எண்ணுவதால் இங்கு அதைப் பகிர்ந்து கொள்கிறேன்.

நான் சென்னையில் கல்வி கற்றபோது பாதுகாவலராக இருந்தவர் திரு கண முத்தையா அவர்கள். இவர் தமிழ்ப்புத்தகாலயம் என்ற பிரபல நூல் வெளியீட்டு நிறுவனத்தின் அதிபர்மட்டுமல்ல யுத்த காலத்திலே நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் அவர்களின் செயலாளராகவும் பணிபுரிந்தவர் நேதாஜி சுபாஸ் சந்திரபோசுடன் இணைந்து வேலை செய்யும்போது தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை கூறியிருந்தார். இந்திய சுதந்திரத்திற்கு ஆயுதம் ஏந்தி போரிட தயாரானவர் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ்.

இதற்காக பர்மாவிலே இந்தியப்படையைத் திரட்டி பயிற்சியும் அழிக்கப்பட்டது. பர்மாவிலே இருந்த இந்தியர்கள் இந்த அணியில் சேர்ந்தார்கள். அவ்வாறே திரு கண முத்தையாவும் சேர்ந்தார். இவர் தமிழகத்தின் செட்டிமார் பரம்பரையில் வந்தவர். தமிழக செட்டிமாருக்கு வரவு செலவு கணக்கு எழுதுவதற்கு ஒரு தனிப்பாணி உண்டு. பலநூறு ஆண்டுகளாக வியாபாரமே தொழிலாகக் கொண்டு திரைகடல் ஓடி திரவியம் தேடியவர்கள்

அல்லவா? இன்றும் இந்த செட்டிகளின் கணக்கு வைக்கும் முறை இந்தியன் வருமான வரி இலாகாவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.அதனால் நேதாஜின் indian national army யின் வரவுசெலவை பராமரிக்க படையில் சேர்ந்த சில செட்டிகள் நியமிக்கப்பட்டனர். அவ்வாறே திரு கண முத்தையாவும் நியமிக்கப்பட்டார். இவ்வாறு நியமிக்கப்பட்ட வெவ்வேறு இலாகாக்களுக்கு அப்பப்போ நேதாஜி வருவதுண்டு. ஒவ்வொரு தடவை அவர் வருகை தரும்போதும் அவருக்கு மாலை மரியாதை சம்பிரதாயமாக நடைபெறும்.


ஒருமுறை அவர் வரஇருந்தபோது திரு கணமுத்தையா சகாக்களிடம் கூறினாராம் “நாம் யாவருமே நாட்டு விடுதலைக்கு எமது உயிரை தியாகம் பண்ண வந்துள்ளோம் எம்மை வழிநடத்துபவர் நேதாஜி எமக்குள் என்ன சம்பிரதாயம் அவருக்கு மரியாதை செய்ய வேண்டுமா?என. யாவரும் மாலை மரியாதை வேண்டாம் என முடிவு செய்தனராம். நேதாஜியும் வந்தார் வழமையாக நடைபெறும் மாலை மரியாதை நடைபெறவில்லை, மற்றப்படிகணக்கு வழக்கு யாவும் வழமைபோல் ஆராயப்பட்டது.நேதாஜியும் விடைபெற்று சென்றுவிட்டார்.

மாலை மரியாதை தேவையில்லை என்ற எண்ணத்தை முன்வைத்தவர் யார் என அறிய விரும்பினாராம்நேதாஜி. அவருக்கு கண முத்தையாவே அந்த அபிப்பிராயத்தை கூறியவர் எனவும் தெரியவந்தது.

உடனடியாக திரு கண முத்தையாவை அழைத்து தன்செய்கைக்கு அதாவது இத்தனை நாட்களும் மாலை மரியாதையை ஊற்றதற்கு தான் வெட்கப்படுவதாக கூறியதுடன் அவரைத் தனது செயலாளராகவும் நியமித்துக்கொண்டார். அத்துடன் நில்லாது சகல இலாகாக்களுக்கும் நான் இனிமேல் வரும்போது மாலை மரியாதை செய்யவேண்டாம் என்னையும் உங்களில் ஒருவனாக நடத்துங்கள் என்று எழுதியதுடன் இத்தனை நாளும் மாலை மரியாதை பெற்றத்ற்கு வெட்கப்படுகிறேன் எனவும் எழுதி அனுப்பினார்.

உள்ளத்தால் நேர்மையாக உழைப்பவன் மாலை மரியதையை பெறத் தேவையில்லை அவனது உழைப்பே அவனை உயர்ந்தவனாக்கும். என்பதற்கு நேதாஜியே எமக்கு எடுத்துக்காட்டாக உள்ளார்.

**– கார்த்திகா கணேசர் (சிட்னி, அவுஸ்திரேலியா)**



கு.சின்னப்பபாரதி இலக்கியக் கருத்தரங்க நினைவு அறக்கட்டளை
1/77,வெந்தகோஸ் சாச அருகில்.
முல்லை நகர், நாமக்கல் - 637002.

நாள் 14/08/12
நாமக்கல்

பெறுதல்
[illegible]

ஐயா,

வணக்கம்,

கு.சின்னப்பபாரதி இலக்கியக் கருத்தரங்க நினைவு அறக்கட்டளையின் 4ஆம் ஆண்டு இலக்கியப் பரிசுக்கு நீங்கள் முதல்/சிறப்புப் பரிசுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளீர்கள் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தங்களின் [illegible] நூலுக்காக வாழ்நாள் சாதனைப் பரிசு ரூ.10,000/-(ரூபாய் பத்தாயிரம்)மும், கேடயமும், சான்றிதழும் பெறுகிறீர்கள் என்பதை பெருமையுடன் அறிவிக்கிறோம்.

தங்கள் வருகையை 15/09/2012க்குள் தெரிவிக்க வேண்டுகிறோம்

விழா நாள்: 02/10/2012, வியாழக்கிழமை


நேரம் : காலை 9.00 மணிமுதல்

தொடர்புக்கு. 9942099109, 944362211 email tamilnsk@gmail.com

தலைவர்
டாக்டர்.செ.செல்வராஜு

## எமது புதிய வெளியீடுகள்

### யாழ்ப்பாண இராச்சியம்: ஒரு சுருக்க வரலாறு — சி. பத்மநாதன்





அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ள தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் யாழ்ப்பாண இராச்சியத்தின் உருவாக்கம் பற்றிய முன்னைய கருத்துக்களை மறுபரிசீலனை செய்யும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சியோடு ஒரு மத்தியமயமான ஆட்சி முறையின் அழிவில் யாழ்ப்பாண இராச்சியமும் வன்னி இராச்சியங்களும் எழுச்சி பெற்றன என்ற கருத்தை இப்பொழுது முற்றாக நிராகரிக்கும் இந்நூலின் ஆசிரியர் பூர்வீக காலம் முதலாக ஏற்பட்ட தமிழர் குடியேற்றங்களும் அவை தொடர்பான அரசியல், சமூக, பொருளாதார முறைகளுமே அவற்றின் எழுச்சிக்கு அடிப்படையானவை என்ற சிந்தனைக்கு இந்நூலில் வலு சேர்க்கின்றார்.

ISBN 978-955-659-308-2 விலை 490.00 பக்கங்கள்: viii + 202

---

### யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் — சாந்தசீலன் கதிர்காமர்





யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் (1924-1934) பற்றிய இந்த வரலாறானது சாந்தசீலன் கதிர்காமரால் எழுதப்பட்டு 1980இல் வெளியிடப்பட்ட ஹன்டி பேரின்பநாயகத்தின் ஞாபகார்த்த நூலின் ஒரு பகுதியாகும். இது இந்த வருடம் மீள்பிரசுரம் செய்யப்பட்டதோடு யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் பற்றிய இந்தப் பகுதி சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்த்தும் வெளியிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் 1924இல் ஸ்தாபிக்கப்பட்டது. சீலன் அவர்கள் இதன் தொடக்ககால அமர்வுகள், யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசின் நோக்கங்கள் மற்றும் செயல் அட்டவணைகள், காந்தியின் வருகை, சாதி மற்றும் இனத்துவ ஒற்றுமை பற்றிய பிரச்சினைகள், 1931இல் இடம்பெற்ற தேர்தலை யாழ்ப்பாணம் பகிஷ்கரித்தமை, அதைத் தொடர்ந்து வந்த வாதப் பிரதிவாதங்கள், வேண்டுமென்றே உண்மையாக நடந்தவை சிதைக்கப்பட்ட முறை ஆகியனப் பற்றி விளக்கிச் செல்கிறார்.

ISBN 978-955-659-316-7 விலை 400.00 பக்கங்கள்: xxii + 161

---

### திருகோணமலை கலை, இலக்கிய வரலாறு — திருமலை நவம்




திருகோணமலைப் பிரதேசத்தின் கலை இலக்கிய வரலாற்றினைப் பற்றியும் அதனுடன் ஊடாடிய ஆளுமைகளைப் பற்றியும் இந்நூல் கூறுகின்றது. கவிதை, சிறுகதை, நாவல் ஆகியவற்றை மட்டுமல்லாது இப்பிரதேசத்தில் இடம்பெற்ற நாடகம், தொலைக்காட்சி நாடகம், குறும்படம், இசை, மெல்லிசை, சிறுபத்திரிகை போன்ற ஏனைய கலை, இலக்கிய முயற்சி களையும் பதிவு செய்கின்றது. ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகால திருகோணமலையின் கலை, இலக்கியவாதிகள் அனைவரும் இந்நூலில் பதிவு செய்யப்பட்டிருக்கின் றனர். அதனூடாக மூன்று நூற்றாண்டுகால திருகோணமலையின் எழுத்து வடிவம் பெற்ற பண்பாடு பற்றிய தகவல்களும், காலனித்துவ காலத்துத் திருகோணமலையின் வரலாறும் இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நூல் ஈழத்தின் கலை இலக்கிய வரலாற்றில் புதிய கதவைத் திறந்து விடுகிறது.

ISBN 978-955-659-321-1 விலை 650.00 பக்கங்கள்: xxiv + 324

---

### இலங்கைத் தமிழியல்: சில பதிவுகள் — மனோன்மணி சண்முகதாஸ்




இலங்கைத் தமிழியல் பற்றிய இருபது கட்டுரைகள் இத்தொகுப்பிலே இடம்பெற்றுள்ளன. கட்டுரைகள் பல்வேறுபட்ட காலங்களில் எழுதப்பட்டு பல்வேறு களங்களிலே பிரசுரமானவை. இக்கட்டு ரைகள் இலங்கைத் தமிழிலக்கிய வரலாற்றினையும், இலங்கைத் தமிழிலக்கிய அறிஞர்களின் பங்களிப்புகளையும் விரிவாக எடுத்துரைப்பதுடன் யாழ்ப்பாணப் பிரதேச வாழ்வியல், பண்பாட்டு மரபுகளையும் எடுத்துரைக்கின்றன.

ISBN 978-955-659-319-8 விலை 675.00 பக்கங்கள்: x + 266

**குமரன் புத்தக இல்லம்**

39, 36th Lane, Colombo 06, Tel. 011 236 4550, 011 309 7608, E-mail: kumbhlk@gmail.com
3, Meigai Vinayagar Street, Chennai – 600 026, Tel. 2362 2680

அகன்று ஆழ்ந்த அறிவிற்காய்

இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.